





உத்தேச முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தத்தில் முஸ்லிம் பெண்களின் திருமண வயது




மீள்பார்வை இணையத்தளம் நடத்திய கணக்கெடுப்பு
www.meelparvai.net



# மீள்பார்வை

මීල්පාර්වෙ
Registered as a newspaper in Sri Lanka
GPO-QD/63/NEWS/2016 - ISSN 2012-5038
Meelparvai Fortnightly
www.meelparvai.net
සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்
இதழ் - 342 • 06 மே 2016 வெள்ளிக்கிழமை • ஷஃபான் 1437 • விலை 40.00

RI MOBILE
Wholesale Dealers in Mobile Phone Accessories
077-3050949
077-4843323
Tel: 011-2439470
151/11, Mumbai Plaza, 2nd Cross Street, Colombo - 11
Branch: 159/21, Green Arcade, Main Street, Colombo - 11
தேவையான பொருட்களை இருக்குமிடத்தில் இருந்தே மொத்தமாகவும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் 0777 777 761
0777 674 941

# வடக்கு - கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு ?

புதிய அரசியலமைப்பு, அதனூடாக வரப்போகும் அதிகாரப் பகிர்வு அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் இருக்கின்றோம். அதை அர்த்தமுடையதாக ஆக்குவதற்கு தமிழ்-முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டு முழுமையான ஆதரவை வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றோம் என அரசியலமைப்பு சீர்திருத்தத்துக்கான செயலமர்வு என்ற பெயரில் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டக்களப்பில் நடத்திய நிகழ்வில் அதன் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்புத் திருத்தத்தின் போது தமிழர் தரப்பின் முன்மொழிவாக இணைந்த வடக்கு கிழக்கில் சமஷ்டி ஆட்சி என்பது முன்வைக்கப்பட்டுள்ளது. முஸ்லிம்களைப் பொருத்தவரையில் வடக்கு கிழக்கு இணைப்பை அவர்கள் ஆதரிக்கவில்லை. அதேபோல சமஷ்டியை விட ஒற்றையாட்சியில் தமக்கான தீர்வைத் தேடிக் கொள்வதிலேயே அவர்கள் ஆர்வம் காட்டுகின்றனர் என முஸ்லிம் சிவில் நிறுவனங்கள் முன்வைத்த அரசியலமைப்பு யோசனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(பக்.14)




ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 20ஆவது ஆண்டு நிறைவு விழா கடந்த சனிக்கிழமை (30) கொழும்பு 07 இல் உள்ள விளையாட்டுத் துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் ஒன்றியத்தின் தலைவர் என்.எம். அமீன் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. பிரதமர் ரணில் விக்ரமசிங்க பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இந்நிகழ்வில் பதிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் விபரம் அடங்கிய மீடியா டிரக்டரியும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

# ஹம்பாந்தோட்டை காதி நீதிமன்றம் பறிபோகும் அபாயம்

ஹம்பாந்தோட்டையில் இயங்கி வந்த காதி நீதி மன்றம், காதி நீதவான் ஒருவர் இன்மையால் மூடப்படவிருப்பதாகத் தெரிய வருகிறது. கடந்த ஒன்றரை வருடங்களாக இந்தப் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஏப்ரல் 30 ஆம் திகதியுடன் விண்ணப்பிப்பதற்கான காலம் முடிவடைந்த போதிலும், இதுவரை எவரும் இதற்கான விண்ணப்பங்களை அனுப்பியிருக்கவில்லை. இந்த விண்ணப்பம் கோரல் தொடர்பான அறிவித்தல் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள சகல ஜும்ஆப் பள்ளிவாசல்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு ஹம்பாந்தோட்டை ஜம்இய்யதுல் உலமா சபை தலைவருக்கும் இது தொடர்பாக அறிவிக்கப்பட்ட போதும் எந்த நடவடிக்கையும் இதுதொடர்பாக எடுக்கப்படவில்லை எனவும் தெரிய வருகிறது. (பக்.14)

# அரசியல் மாற்றத்துக்காக சர்வதேச உதவிகளை நாடும் ஜே.வி.பி



நாட்டில் அடுத்தகட்ட அரசியல் மாற்றம் ஒன்றுக்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும் வகையில் மக்கள் விடுதலை முன்னணி தமது சார்பு நாடுகளின் உதவிகளை நாடியுள்ளதாக தெரிய வருகின்றது.

மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் நகர்வுகளையும் நாட்டில் அடுத்த கட்ட அரசியல் மாற்றம் ஒன்றுக்கான ஆரம்ப வேலைத் திட்டங்களையும் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இலங்கையில் தற்போது நடைபெற்று வரும் கூட்டணி ஆட்சியை மாற்றியமைக்கும் (பக்.14)

# எல்லை நிர்ணயத்தில் சிக்கல், மேன்முறையீட்டுக் காலம் ஒரு மாதத்தால் நீடிப்பு



எல்லை நிர்ணயம் தொடர்பான மேன்முறையீடுகளை ஆராய ஒகஸ்ட் மாதம் வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.இதனை மேலும் ஒரு மாதத்தினால் நீடிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்தார்.

சகல இன மதத்தினருக்கும் நியாயமான முறையில் எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்பட வேண்டும்.கடந்த காலத்தில் பொது மக்களிடமோ அரசியல் வாதிகளிடமோ சிவில் அமைப்புகளிடமோ வினவாமலே எல்லை நிர்ணயம் செய்யப்பட்டது. (பக்.14)

# சீனாவுடனான உறவு ஜூனில் இருந்து மேலும் பலமடையும்



கடந்த மாதம் பிரதமர் மேற்கொண்ட விஜயத்தின் பின்னர் சீனாவுடனான உறவுகள் மீண்டும் பலம் பெறத் துவங்கியுள்ளன. துறைமுக நகர் வேலைத்திட்டத்தை மீள ஆரம்பித்தல், ஹம்பாந்தோட்டையில் புதிய சுதந்திர வர்த்தக நிலையம் அமைத்தல் போன்ற பல்வேறு செயற்திட்டங்கள் தொடர்பில் பிரதமரின் பேச்சுவார்த்தைகள் (பக்.14)

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான இரு தரப்பு வர்த்தகத்தை விரிவாக்கும் நோக்கில் இரு நாடுகளுக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை கைச்சாத்திடுவது குறித்தான உயர் மட்ட பேச்சுவார்த்தை எதிர்வரும் ஜூன் மாதம் இடம்பெற உள்ளதாக கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்பில் மொனோரெயில் சேவை



கொழும்பின் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்காக கொழும்புக்கும் மாலபேயிற்கும் இடையில் தனித் தண்டவாளத்தில் ஓடக்கூடிய மொனோரெயில் சேவை திட்டத்தை வரையும் வேலைகள் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளன.

இந்தத் திட்டவரைவில் மெகாபொலிஸ் அமைச்சரும் போக்கு வரத்து அமைச்சரும் கைச்சாத்திட்டுள்ளனர். விரைவில் இது அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படும் என மெகாபொலிஸ் அதிகார சபையின் பணிப்பாளர் லக்ஷ்மன் ஜயசேகர தெரிவித்தார். (பக்.14)

# தகவல் அறியும் உரிமை யாப்புக்கு முரணாம்



மார்ச்சில் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டமூலம் மேலும் பல பின்னடைவுகளைச் சந்தித்துள்ளது. ஆரம்பத்தில் முன்மொழியப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டமூலத்திலிருந்து பாதுகாப்பு விவகாரங்கள், வெளிநாட்டு உறவுகள் என பல விடயங்கள் நீக்கப்பட்டுள்ள நிலையில், சட்டமூலத்தின் சில சரத்துகள் யாப்புக்கு முரணாக அமைவதாகவும் இதில் திருத்தங்கள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இது சட்டமாக்கப்பட வேண்டுமென்றிருந்தால் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வெல்ல வேண்டும் என (பக்.14)










Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீள்பார்வை நெற் இணையத்தள ஆசிரியரிடமிருந்து..

நவீன சமூகம் எதிர்நோக்கும் பெரும் சவாலாகவும், சந்தர்ப்பமாகவும் சமூக வலைதளங்கள் திகழ்கின்றன. இன்று வீட்டுக்கு வீடு ஊடகவியலாளர்களை உருவாக்குவதில் இந்த சமூக வலைதளங்கள் பெரும் பங்காற்றுகின்றன. ஆய்வின்படி தற்போது 2000 இற்கும் மேற்பட்ட சமூக வலைதளங்கள் வென்ச்சர் கெபிட்டல் எனப்படும் துணிகர மூலதன நிதியைக் கொண்டு இயங்கி வருகின்றன.

உலகில் பலர் உயிர் துறப்பதற்கும் சமூக வலைதளங்கள் இருப்பதாக காரணமாக சொல்கிறார்கள். இது ஒருபுறமிருக்க பேஸ்புக்கில் பலர் தங்களது அன்றாட நடவடிக்கைகளை கூட ஸ்டேட்டஸாக போட்டு வருகிறார்கள். சில வசதியான இளைஞர், யுவதிகள், வாப்பா விலையுயர்ந்த வாகனத்தை பரிசளித்தார், மனைவி தமது கணவர் ஐ-போன் வாங்கித் தந்தார் என்பது போன்ற ஸ்டேட்டஸ்களை போடுவதை வழக்கமாக வைத்துள்ளார்கள். வீட்டில் மனைவியின் கட்டுப்பாட்டில் உள்ள கணவர்மார்கூட புரட்சியின் எல்லையை தொட்டு பதிவிடுவதற்கு இங்கு இட முண்டு.

நகைச்சுவைகள் முதல் ஆழ்ந்த இரங்கல், கவிதைகள், தத்துவங்கள் வரையும் அள்ளிவிடுவோரும் இருக்கின்றார்கள். பெரும்பாலும், நலவு, கெடுதிகளில் ஆறுதல் சொல்பவர்கள் இருப்பது குறிப்பிடத்தக்க அம்சம் என்றாலும், முகநூலில் மட்டும் வெளிப்படுத்தப்படும் மனிதாபிமானத்தை வீதிகளிலும் காண ஆசை என்று என் நண்பி கூறியது இங்கு நினைவுகூறத்தக்கது.

மனித உறவுகளின் தொடர்பை மேம்படுத்துவதற்காக வந்த சமூக வலைதளங்கள், இன்று பல்வேறு பிரச்சினைகளுக்கு முக்கிய காரணமாக உள்ளதாக கூறப்படுகிறது.

2014-ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி சமூக வலைதளங்களில் 1.87 Billion பேர் உறுப்பினர்களாக இருந்தனர். இந்த எண்ணிக்கை 2015-ம் ஆண்டின் இறுதியில் 2.04 Billion ஆக உயர்ந்திருக்கிறது. உலகில் நான்கில் ஒருவர் சமூக வலைதளங்களை பயன்படுத்துவதாக ஆய்வு ஒன்று கூறுகிறது.

ஆகவே, ஒவ்வொரு தனிநபரினதும் வாழ்வில் மாற்றத்தை தோற்றுவிக்கும் ஒரு கருவியாய் சமூக வலைதளங்கள் மாறி வருகின்றன. சுய சிந்தனையற்று பொம்மலாட்ட பொம்மைகளாய் இந்த சமூகம் இருக்கும் அதே நேரத்தில்தான் சிந்தித்து செயலாற்றும் ரோபோக்களை தயாரிக்கும் வரை வளர்ந்துள்ளார்கள் சிலர்.

தொழிநுட்ப உச்சத்தை தொட எம் சமூகம் தயாரில்லை என்றாலும், அநீதிகளுக்கு எதிராக குரலோங்கும் தளமாக சமூக வலைதளங்கள் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதே எனது அவா.

**'ஒவ்வொரு அநீதியைக் கண்டும் ஆத்திரத்தில் நீ அதிர்ந்து போவாயே யானால் நீயும் என் நண்பனே' - சேகுவேரா**

வருடத்தில் 364 நாட்களையும்
முதலாளிகளுக்காக
அர்ப்பணிக்கும்
தொழிலாளிகள் ..!
தமது மே முதல் தினத்தை
அரசியல்வாதிகளுக்கு
தாரைவார்த்து விடும் தியாக
தினம்..!
என்றுமே 'பலியாடு'களாக
இருப்பதாலோ
என்னவோ 'மே' தினம்
என்று அழைக்கிறார்கள்
போலும் ..!
**(ரிஸ்வான் ஷஹீத்)**

# உழைப்பாளர் தினமென்றால்

# நாவிடங்கும் MAY DAY



உழைப்பாளர் தினமென்றால் முதன் முதலில் நம் நினைவுக்கு வருபவர் அவரவர் தந்தை தான்..

''மாடு மேய்க்கத் தான் நீ லாயக்கு'' என்று நியாயத்துடன் திட்டினாலும்

''எந்த தந்தையும் நான் படும் கஷ்டம் போல தன் மகனும் படக் கூடாது'' என்றே விரும்புவர்..

வழியும் வியர்வைத்துளிகளைத் துடைத்தவாறே சூரியனையும் தாண்டிய ஒரு பார்வையில் 'இறைவா இந்த கஷ்டத்தை என் மகன் சுகிக்கக்கூடாது' என்ற பிரார்த்தனைகள் தான் நிச்சயம் மேலோங்கியிருக்கும். வியர்வைச்சட்டையுடன் நமக்கு புதுச்சட்டை வாங்கி வந்து அதில் அத்தர் பூசி அழகு பார்ப்பார்... உங்களுக்கென்றே உரித்தான சில சாயம் போன சட்டைகள்.. குறிக் கோள் எல்லாம் மகனின்/மகளின் வாழ்க்கை சாயம் போகக்கூடாது என்பது தான்.. கொளுத்தும் வெயிலில் நனைந்தே வந்து வீடு சேர்ந்து 'எங்கே மகன்' என்று தேடும் உன்னதம்.

முகத்தில் களைப்பைக் காட்டிக்கொள்ளாத தந்திரம். காய்ச்சல் பொழுதுகளில் கூட சோர்வைப் பற்றிக் கவலைப்படாத எந்திரம்.

**தந்தை எனும் ஓயாத மந்திரம்.**

''சூரியன்
சுடக்கூடாது என்பதற்காய்
சின்ன மகளுக்கு
குடை வாங்க
வெயிலில்
வேலை செய்தவர்
தந்தை''

நல்லாடை உடுத்து நறுமணம் பூசி ஊர் சுற்ற வெளியில் போன வேளையில் 'சீ என்ன வெயில்' என்று திட்டிக் கொண்டே மறுபடி வீடு நோக்கி வரும் போது தான் தந்தையின் எண்ணம் வந்து தலை குனிந்தேன்.

தந்தையே! எமக்காக பட்ட கஷ்டங்கள், சிந்திய வியர்வைத்துளிகளை இப்போது நினைத்துப் பார்க்கிற போது கண்களில் இருந்து கசியும் சில கண்ணீர்த்துளிகள். .

புரிகிறது. கோடிக்கணக்கான துளிகளைச் சிந்தினாலும் உங்கள் ஒரே ஒரு வியர்வைத் துளிக்கு ஈடாக முடியாது தான்.

தந்தையே! நீங்கள் பட்ட கஷ்டங்களில் நீங்கள் வடித்த வியர்வைத் துளிகளில் துளியேனும் நாம் படாததால் உங்கள் கடினங்களின் பாரம் எமக்கு விளங்கப் போவதில்லை..

**- அப்துர் ரஹ்மான்**

உழைக்கும் மக்களிடமிருந்து ஆண்டாண்டுகாலமாக பணத்தையும், தன்மானத்தையும், உரிமைகளையும் சுரண்டும் அரசியல் பெருச்சாளி கள் தான் கடைசியில் 'தொழிலாளர் தினத்தையும்' சூறை யாடுகின்றன.

தொழிற் சங்கங்கள்கூட தொழிலாளர் தினத்தை தங்களது தொழிற்துறைகளின் சவால்களை எதிர்கொள்வதற்கான கலந்துரையாடல் களமாக அமைத்துக் கொள் ளாமல், ஊர்வலம் செல்லும் நாளாக ஆக்கிக் கொண்டுள்ளமை கவலைக் குரியது.

அரசியல் கட்சிகள் தங்கள் அரசியல் கொழுப்பைக் காட்ட, அடிமாட்டுக் கூட்டத்தைப் போல தொழிளாலர்களை வீதிகளில் மேய்த்துச் செல்லும் நிலை என்றைக்கு மாறுமோ அன்றுதான் உண்மையான தொழிலாளர் தினம்.

**(இம்ரான் ஹுஸைன்)**

உழைப்பே இல்லாதோர்
ஓய்வெடுப்பதற்காக
ஓய்வே இல்லாதோர் உழைத்துக்
கொண்டிருக்கிறார்கள்
**(நிஷா மன்சூர்)**

## இணையத்தள வாக்கு முடிவுகள்

உத்தேச முஸ்லிம் தனியார் சட்ட திருத்தத்தில் முஸ்லிம் பெண்களின் வயது?

18 ஆக அதிகரிக்கப பட வேண்டும (84%, 95 Votes)

**12 ஆகவே இருக்க வேண்டும்** (16%, 18 Votes)

Total Voters: **113**




பேருவளை பாஸியதுல் நஸ்ரியா மகா வித்தியாலயத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் மத்தியசபை உறுப்பினருமான கௌரவ இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் அவர்களின் 'இதயம் பேசுகிறது' எனும் நூல் வெளியீடு அண்மையில் இடம்பெற்றது. என்.எம். அமீன் அவர்களால் மொழியாக்கம் செய்யப்பட்ட இந்நூல் வெளியீட்டில் பிரதம அதிதியாக கல்வி அமைச்சர் கௌரவ அகிலவிராஜ் காரியவசம் அவர்களும், கௌரவ அதிதியாக மேல் மாகாண கல்வி அமைச்சர் ரஞ்சித் சோமவன்ச அவர்களும் கலந்துகொண்டதுடன் இன்னும் பல முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர். நூலின் பிரதியை நூலாசிரியரிடமிருந்து அதிதிகள் பெற்றுக்கொள்வதையும், மீள்பார்வை பத்திரிகையின் பிரதம ஆசிரியருக்கு பிரதி வழங்கி வைக்கப்படுவதையும், கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் இங்கே காணலாம்.

## நூல் வெளியீட்டு விழா

பூகொடயூர் அஸ்மா பேகத்தின் **''செங்குருதியும் பச்சோந்தியும்''** கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் மே 7ஆம் திகதி மாலை 3.30மணியளவில் குமாரிமுல்லை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

புரவலர் ஹாஷீம் உமர் அவர்களின் புரவலர் புத்தகப் பூங்கா ஏற்பாட்டின் 36ஆவது வெளியீடாக புரவலர் முன்னிலையில் மகா வித்தியாலய அதிபர் எம்.எச்.எம் ஸர்ஜூன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இவ்விழாவில் நூல் பற்றி விசேட கருத்துரைகளை சமூகஜோதி எம்.ஏ.றபீக் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி செய்தி ஆசிரியர் சித்தீக் ஹனீபா ஆகியோரும் மேலும் சிறப்புரையை மேமன் கவியும் நிகழ்த்தவுள்ளார். **(பூகொட ஏ.எச்.எம்.இர்பான்)**



FM Education முன்பள்ளிப் பாலர் பாடசாலையின் வருடாந்த Fun Sports Meet (01.05.2016) அன்று மல்வானை, ரக்ஸபான அல்-முபாறக் ஆரம்ப பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.



பேருவளை ஜாமிஆ நளீமிய்யாவின் எட்டாவது பழைய மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வு அண்மையில் ஜாமிஆ நளீமிய்யா கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ராபித்ததுன் நளீமிய்யீன் அமைப்பின் புதிய தலைவராக அஷ்-ஷெய்க் நவவி தெரிவு செய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல பிரஜைகளுக்கும் திருமணம் முடிப்பதற்குரிய குறைந்தபட்ச வயதொன்றை விதிப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும்

18 வயதுக்குக் குறைந்த முஸ்லிம் பெண் பிள்ளைகள் மற்றும் ஆண் பிள்ளைகளுக்கு திருமணம் முடிப்பதற்குரிய சந்தர்ப்பத்தை வழங்குகின்ற முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தனது அவதானத்தை செலுத்தியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுடைய பங்குபற்றலுடன் அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் 2016 மார்ச் மாதம் 29 ஆம் திகதி இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் ஹிருணிகாவினால் முன்வைக்கப்பட்ட விடயங்களை பெண்கள் அமைப்புக்கள் உளப்பூர்வமாக வரவேற்றுள்ளன.

16 வயதுக்குக் குறைந்த பெண் பிள்ளையொன்றுடன் அவளுடைய அனுமதியுடனோ அல்லது அனுமதி இல்லாமலோ பாலுறவு கொள்வது பெண்ணியல் துஷ்பிரயோகமான 'நீதிச் சட்ட கற்பழிப்பு' என்ற பகுதிக்குள் உள்ளடங்குவதாக தண்டனைச் சட்டக் கோவையின் 363 வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இச்சட்டவிதியின் பின்னணியிலேயே ஹிருணிகா குறிப்பிட்ட கருத்தரங்கில் முன்வைத்துள்ள விடயங்களை கருத்திற் கொள்ள வேண்டியுள்ளது.

முஸ்லிம்களுக்கு மத்தியில் இளவயதுத் திருமணங்களுக்குரிய வாய்ப்புக்களை வழங்குகின்ற சட்டரீதியான ஏற்பாடுகள் குற்றவியல் நீதிச் சட்டத்தின் சட்ட திட்டங்களுக்கு முரணானது என்றும் அதனால் அது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பிரச்சினையொன்று என்பதையும் குறிப்பிட வேண்டியுள்ளது.

திருமணமாவதற்கு குறைந்தபட்ச வயதெல்லையொன்று இல்லாததன் காரணத்தினால் இலங்கையின் சிறுபான்மைச் சமூகத்தினரான முஸ்லிம் பெண்கள் மற்றும் சிறுவர்கள் முகம்கொடுக்கின்ற நடைமுறை ரீதியான பிரச்சினைகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா முன்வைத்துள்ள அவதானங்கள் விதந்து போற்றத்தக்கன.

இரண்டு தசாப்தங்களுக்கு அதிக காலம் தொட்டு முஸ்லிம் மதத் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கு பற்றி வந்த பல்வேறுபட்ட மக்கள் பேரவைகளில் இவ்விவகாரம் முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனாலும் முஸ்லிம் சமுகத்திற்குள் இளவயதுத் திருமணங்கள் நடைபெறுவதில்லை என்னும் அடிப்படையில் இப்பிரச்சினை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கவனத்திற்

**பெண் செயற்பாட்டாளர்களுடைய வலையமைப்பு**
(இவ்வமைப்பு வட கிழக்கு மாகாணங்களை தளமாக கொண்டியங்கும் 8 பெண்கள் அமைப்பை உள்ளடக்கிய கூட்டாகும்)

கொள்ளப்படாமல் இருந்துள்ளது.

அவ்வாறான நிலையிலும் மக்களுடன் நெருக்கமான முறையில் பணியாற்றி வருகின்ற முஸ்லிம் பெண்களுடைய உரிமைகள் தொடர்பில் பணியாற்றி வருகின்ற குழுக்கள் தினந்தோறும் இடம் பெறுகின்ற இளவயதுத் திருமணங்கள் தொடர்பில் பல உதாரணங்களை முன்வைத்துள்ளன. மட்டக்களப்பு, புத்தளம் மற்றும் கொழும்பு மாவட்டங்களிலுள்ள ஒரு சில பிரதேசங்களில் இளவயதுத் திருமணங்கள் கூடுதலாக இடம்பெறுகின்றன. 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015 இல் சில பிரதேசங்களில் இளவயதுத் திருமணங்கள் அதிகரித்துச் சென்றுள்ளதுடன் முஸ்லிம் விவாகப் பதிவுக் கோவைகளை பரீட்சித்துப் பார்க்கும் பொழுது இவ்விடயம் மென்மேலும் ஊர்ஜிதமாகிறது.

இளவயதுத் திருமணம் நடைபெறுகின்ற பெரும்பாலான சந்தர்ப்பங்களில் திருமணம் முடித்துக் கொடுப்பதற்காக வேண்டி இளவயதுப் பெண்கள் பாடசாலைகளிலிருந்து விலக்கிக்கொள்ளப்படுகின்றனர். இதன்படி இளவயதுத் திருமணங்களிலுள்ள பிரதிகூலமொன்றாக கல்வி கற்பதற்குரிய வாய்ப்புக்கள் மற்றும் சமூக பொருளாதார கலாசார உரிமைகள் அவ்வாறு திருமணம் முடிக்கின்ற பெண் பிள்ளைகளுக்கு கிடைக்காமல் போகின்றன.

இன்னும் அவர்களுடைய குறைவான வயது காரணமாக பிரசவ ரீதியில் ஏற்படுகின்ற பிரச்சினைகள் உள்ளிட்ட ஏனைய சுகாதார பிரச்சினைகள், ஆண் பெண் வேறுபாட்டை அடிப்படையாக கொண்டெழுகின்ற பிரச்சினைகள், திருமண வாழ்வில் நிகழும் சண்டைச் சச்சரவுகள் விவாகரத்தின்போது முகம்கொடுக்க நேர்கின்ற பொருளாதாரச் சவால்கள் மற்றும் கணவன்மாரினால் மனைவிமார் உரிய முறையில் கவனிக்கப்படாமை உள்ளிட்ட பிரச்சினைகள் மேலெழுகின்ற பொழுது அவற்றுக்கு முகம் கொடுப்பதில் இப்பெண்கள் மிகுந்த அசௌகரியங்களுக்கும் ஆதரவற்ற தன்மைக்கும் உட்படுகின்றனர்.

திருமணம் முடிக்கும் வயதெல்லை என்பது அடிப்படையானதும் பாரதூரமானதுமான சிறுவர் உரிமையுடன் தொடர்புபட்ட பிரச்சினையொன்றாகும்.



அதைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பாக உள்ளதோடு, அவ்வாறில்லாமல் ஒரு சமுதாயத்தினது அபிப்பிராயத்தின் பிரகாரம் தீர்மானம் எடுப்பதற்கு இடமளிக்கக் கூடாது.

ஹிருணிகா பிரேமச் சந்ரவினால் முன்வைக்கப்பட்ட கேள்விக்கு அமைச்சர் ரவூப் ஹக்கீம் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சீர்திருத்தத்திற்கூடாக குறைந்தபட்ச திருமண வயதெல்லையை மாற்றுவதென்பது முஸ்லிம் சமூகத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயமாகும் என பதிலளித்திருந்தார்.

அமைச்சரின் குறித்த பதில் தொடர்பில் நாம் கவலையடைகிறோம். குறித்த சட்டமூலம் 64 வருட காலமாக சீர்திருத்தப்படாமல் கைவிடப்பட்டு வந்துள்ளதுடன் நீதி அமைச்சராக இருந்த காலப் பகுதியில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் அவர்கள் இது விடயம் தொடர்பில் குறைந்தளவு அவதானத்தையே செலுத்தியிருந்தார் என்பதும் கவலைக்குரிய விடயமே.

2009 இல் அப்போதைய நீதியமைச்சராக இருந்த மிலிந்த மொரகொடவினால் முஸ்லிம் தனியார் சட்டம் சீர்திருத்தம் செய்யப்படுவதற்கென குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததோடு முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டத்திற்கு சீர்திருத்தங்களை முன்வைக்கும் பொறுப்பு அக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனாலும் கடந்த ஏழு வருட காலத்திற்குள் இக்குழு மேற்படி விவகாரம் தொடர்பில் வெளிப்படுத்திய முன்னேற்றங்கள் பற்றிய எவ்வித தகவல்களும் இல்லை. இக்குழு' வினுடைய அறிக்கை எப்போது அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளது? முஸ்லிம் சிறுவர்களினுடைய உரிமைகள் தொடர்பில் அவ்வறிக்கையின் முன்மொழிவுகள் நாட்டிலுள்ள ஏனைய சிறுவர்களினது உரிமைகளுடன் சமமாகிறதா? போன்ற எவ்வித விடயங்கள் தொடர்பிலுமான தகவல்கள் இல்லை. இந்நாட்டிலுள்ள முஸ்லிம் சமூகத்தினர் போதுமான அளவில் அத்தகவல்களை அறிந்ததில்லை.

தனியார் சட்ட சீர்திருத்தங்கள் இந்தளவுக்கு தாமதமாகியுள்ள இப்பின்னணியில் முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்து சட்டத்தினால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான முஸ்லிம் பெண்கள் மாவட்ட ரீதியாக புதிய அரசியலமைப்பு உருவாக்கத்திற்கு மக்கள் கருத்துக்களை பெற்றுக்கொள்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவினரிடம் தமது சுய கருத்துக்களை வழங்குவதற்கு முன்வந்திருந்தார்கள். குறிப்பாக புத்தளம் மாவட்டத்திலும் வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் இந்நிலையை கண்டுகொள்ள முடிந்தது.

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தினை உடனடியாக சீர்திருத்துமாறு அல்லது முஸ்லிம்களுக்கு அவர்களுடைய விருப்பப்படி பொதுவான விவாக கட்டளைச் சட்டத்தின் கீழ் தமது திருமணங்களை பதிவுசெய்து கொள்வதற்குரிய அனுமதியை வழங்குமாறு அப்பெண்கள் வாய்மொழி மூலமாகவும் எழுத்து மூலமாகவும் சுய கோரிக்கைகளை முன்வைத்தார்கள்.

திருமணம் மற்றும் விவாகரத்து தொடர்பில் அவதானத்தை செலுத்துகின்ற பொழுது பல்வேறுபட்ட முறையில் முஸ்லிம் பெண்களுடைய உரிமைகளை மீறுகின்ற, காலங் கடந்த முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்து சட்டத்தின் மூலம் இலங்கை முஸ்லிம்கள் ஆளப்படுவது பாரதூரமானதொரு விடயமாகும். அடிப்படை உரிமைகள் நாட்டிலுள்ள சகல பிரஜைகளுக்கும் உரித்தாக வேண்டும். அவ்வுரிமைகளின் பொருத்தப்பாடுகளை சிறுபான்மையினரின் தனிப்பட்ட சட்ட விருப்பங்களுக்கமைய முடிவெடுப்பதற்கு இடமளிக்கப்படக் கூடாது. அரசியலமைப்பு உருவாக்கச் செயன்முறையில் முன்னிலைப்படுத்தப்பட வேண்டியதொரு அடிப்படை பிரச்சினையாக இது உள்ளது.

திருமணமாகும் வயது முஸ்லிம் பிரச்சினையொன்றல்ல அது மனித உரிமைகளுடனும் சிறுவர் உரிமைகளுடனும் தொடர்புபட்ட பிரச்சினையொன்று என்பதை நாம் தெளிவுபடுத்துகிறோம். சிறுவர் உரிமைகளுக்கான ஒன்றியம், பெண்களுக்கெதிரான வன்முறைகளை களைவதற்கென உருவாக்கப்பட்ட ஒன்றியம் மற்றும் சர்வதேச மனித உரிமைப் பிரகடனம் போன்றன முன்வைத்துள்ள உலகத் தரம் வாய்ந்த உரிமைப் பிரகடனங்களை இலங்கையிலும் பலப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாக உள்ளது. இவ்வுரிமைகள் நாட்டிலுள்ள சகல பிரஜைகளுக்கும் பொருத்தமானதாக அமைய வேண்டும். சிறுபான்மைச் சமூகத்தை சார்ந்த பெண்கள் இவ்வுரிமைகளை அனுபவிக்காமையை அனுமதிக்க முடியாதுள்ளது.

2010 இல் சமுக பொருளாதார கலாசார உரிமைகள் தொடர்பிலான குழு தனது 44 ஆவது கூட்டத் தொடரில் 12 வயதளவிலான பெண் பிள்ளைகளை திருமணம் முடித்துக் கொடுப்பதற்குரிய சந்தர்ப்பங்களை வழங்குகின்ற இலங்கையின் அரசியலமைப்பில் உட்புகுத்தப்பட்டுள்ள தனியார் சட்ட ஏற்பாடுகள் பெண்களை வித்தியாசமான முறையில் கவனிக்கும் இயல்பை கொண்டுள்ளது என்றும் அவை பெண்களுடைய சமூக பொருளாதார கலாசார உரிமைகளை மட்டுப்படுத்துவதாகவும் தெரிவித்திருந்தது. இத்தகைய சட்டங்களை சீர்திருத்துவது அரசாங்கத்தின் உடனடிப் பணியாகவும் பொறுப்பாகவும் உள்ளதோடு பிரச்சினையுள்ள சமூகம் தங்களது சட்டத்தை மாற்றிக்கொள்வதில் காட்டி வருகின்ற உற்சாகத்தை விடவும் அரசாங்கத்தின் பணிகள் இரண்டாம் பட்சமாகக் கூடாதெனவும் அக்குழு மேலும் தெரிவித்திருந்தது.

நாட்டிலுள்ள ஏனைய பிரஜைகளுக்குப் பொருந்தாத திருமணமாகும் வயதொன்று சிறுபான்மைச் சமூகமொன்றுக்கு மாத்திரம் பொருத்தமாக கொள்ளப்படுவது தர்க்க ரீதியற்றது. இவ்வகையில் ஒரு சமூகத்தினால் பெண்கள் வித்தியாசமாக நடத்தப்படுவதை பாராளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்ப கடப்பாடுடையவர்கள். தேசிய சிறுவர் பாது காப்பு அதிகார சபை போன்ற பொறுப்பு வாய்ந்த அரச நிறுவனம் நாட்டின் சட்டத்திற்குள் இத்தகைய வித்தியாசமாக கவனிக்கும் சட்டங்கள் நிலவி வருவதன் மூலம் ஏற்படுகின்ற விளைவுகளை புரிந்துகொள்வதற்கு அவசியமான வழிவகைகளும் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. (பக்.14)

# தனியார் சட்டம் பொதுச் சட்டமாக மாறக் கூடாது

**உலமாக்கள் புத்திஜீவிகள் அறிஞர்கள் சட்டத்தரணிகள் அனைவரினதும் கலந்தாலோசனை அவசியம்**

ஒரு சில மாதங்களாக பெரிதும் பேசப்பட்டு, வாதப் பிரதிவாதங்களுடன் செல்லும் ஒரு விடயம்தான் முஸ்லிம் பெண்களின் திருமண வயதாகும். உண்மையிலேயே பெண்களின் திருமண வயதை அதிகரிக்க வேண்டும், அதிக நீக்கத் தேவையில்லை போன்ற பல கருத்தாடல்கள் நடைபெறுவது ஆரோக்கியமானதே. இதில் கரிசனை செலுத்துபவர்கள் பாராட்டுக்குரியவர்கள். அல்லாஹ் அவர்களுக்கு அருள் புரிய வேண்டும்.

நபி(ஸல்) அவர்கள் ஏவிய முக்கிய வழிமுறைகளுள் திருமணமும் ஒன்றாகும். ஏவியது மட்டுமல்லாமல், எப்படி வாழ்ந்தால் சந்தோசமாக வாழ முடியும், அமைதி பெற முடியும், பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். மற்றும், திருமணத்தின் அனைத்து ஒழுங்குகள் பற்றியும் சொல்லி, செயற்படுத்திக் காட்டினார்கள்.

இரு மணம் இணைந்தால் திருமணம் என்று கூறுவார்கள். ஆனால், இன்று அதன் நோக்கங்கள் குறிக்கோள்கள் எல்லாம் சிதறடிக்கப்பட்டு, எதற்காகத் திருமணம் முடிக்கிறார்கள், எதற்காகப் பிரிகிறார்கள் என்பது அவர்களுக்கே தெரியாமலிருக்கின்ற ஒரு துர்ப்பாக்கியமான காலத்தில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். காதி நீதிமன்றங்களில் விவாகரத்து பெறுவோரின் எண்ணிக்கை அதிகம் காணப்படுவது எமது சமூகத்தில் திருமணத்தின் நோக்கம் புரியப்படாமல் கணவன் மனைவிக்கிடையில் புரிந்துணர்வு இன்மையின் காரணமாகும்.

அதில் முக்கியமான விடயம்தான் சிறுவயதில், அதாவது இலங்கை தனியார் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு 12 வயதில் பெண்கள் திருமணம் செய்ய முடியுமென்ற சட்டமாகும். இதில் பல வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதேபோன்று பெண் பிள்ளைகள் சிறுவயதில் திருமணம் முடித்துக் கொடுக்கப்படுவதால் அவர்கள் உடல், உள ரீதியாக பாதிப்புக்குள்ளாகுவதையும் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதையும் மறுப்பதற்கு இல்லை. மேலும், திருமணம் முடிப்பதற்கு கட்டாயம் உடல், உள பக்குவமும், எவ்வாறு வாழ வேண்டும் என்ற பக்குவமும் வேண்டும். சிறு வயதில் திருமணம் முடிப்பதனால் அவர்களின் கல்வி வாழ்க்கை பாதிக்கப்படுவதும், அதனால் அவர்களது எதிர்காலம் கேள்விக்குறியாகுவதும் உண்மையிலே நாம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

அதே போன்று இன்னொரு பக்கத்தையும் நாம் நடுநிலையாகப் புரிந்துகொள்ள வேண்டும். சிறுவயதில் திருமணம் முடிப்பதனால்தான் விவாகரத்துக்கள் அதிகரித்துள்ளன என்று கூறுவதையோ அதனை மாற்றுவதுதான் தீர்வென்பதையோ ஏற்றுக் கொள்வது ஆரோக்கியமான விடயமல்ல. ஏனென்றால் இஸ்லாம் கூறுவது ஒரு பெண் பருவ வயதை அடைவது அவள் திருமணம் முடிப்பதற்கான அதாவது தாய்மைக்குரிய ஒரு பகுதி மட்டுமே தவிர, அவளை கட்டாயம் தாயாக்க வேண்டுமென்பதில்லை. (புத்தகங்கள் சுமக்க வேண்டிய கைகள் பிள்ளைகளை சுமக்க வேண்டியதில்லை) என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

அதே போன்று அவர்கள் சிறு வயதில் திருமணம் முடித்துக் கொடுப்பதற்கான சில காரணங்களையும் தெரிந்து கொள்வது அவசியமாகும். ஏனென்றால் சில பகுதிகளில் அவருடைய மரபுகள், வழக்காறுகள் அந்த பகுதிகளில் வழமை சிறுவயதில் திருமணம் முடித்துக் கொடுப்பதாக இருக்கலாம். அதனால் அவர்களது வயது அதிகரித்து விட்டால் திரு மணம் முடித்துக்கொடுக்க கஷ்டமாகி விடுமோ என்ற பயத்திலும் எங்களுடைய மகளின் வயதை ஒத்த அனைத்து பிள்ளைகளும் திருமணம் முடித்து விட்டார்கள் என்று ஒரு ஆதங்கத்திலும் பல பகுதிகளில் திருமணம் நடைபெறுகின்றன.

அதே போன்று கல்வி விடயத்தைப் பொறுத்தவரையில், இலங்கையில் 12 வயது பெண் பிள்ளைகள் பாடசாலையில் தரம் 6,7 இல் கல்வி கற்பவர்களே. இவர்கள் திருமணம் முடிப்பதனால் மட்டும்தான் இவர்களுடைய கல்வி வாழ்க்கை சீரழிவதில்லை. மாற்றமாக இலங்கையில் எத்தனையோ பெற்றோர்களின் அறிவின்மை காரணமாக பெண்கள் படித்து என்ன பயன்? எவ்வளவு படித்தாலும் அகப்பைதான் பிடிக்க வேண்டும் என்ற பழைய கதைகளை வைத்துக் கொண்டு அவர்களுடைய கல்வி வாழ்க்கையை இடைநடுவில் நிறுத்துவதைக் காணலாம்.

மேலும், வறுமை, பொருளாதார செலவுகள் பெண் பிள்ளைகளை வளர்ப்பதில் உள்ள பாதுகாப்பின்மைகளும் சிறுவயதில் திருமணம் நடைபெறுவதற்கான காரணங்களாகும்.

அதனால் நாம் இந்த விடயத்தில் செய்ய வேண்டிய சேவைகள் என்னவென்றால், இன்னும் மரபு ரீதியான சிந்தனைகளில் உள்ள பல உள்ளங்களை மாற்றுவதிலும் ஊர் வழக்காறுகளிலுள்ள தவறுகளினால் ஏற்படும் விபரீதங்களையும், பெண் கல்வி முக்கியத்துவத்தையும் பெண் ஆளுமைகளை உருவாக்குவதற்கான தேவைகளையும், திருமணத்தின் நோக்கங்கள், குறிக்கோள்கள் நாளைய சந்ததியின் எதிர்காலம் பற்றி பரவலாக விழிப்புணர்வூட்டுவதன் மூலம் சிறு வயது திருமணங்கள் நடைபெறுவதைக் குறைத்துக் கொள்ளலாம்.

அதேபோன்று இந்த விடயம் இன்று பேசுபொருளாக இருப்பதன் காரணமாக, பல இடங்களில் இதற்கான விழிப்புணர்வுகள் நடைபெறுவதையும் காணக் கூடியதாக உள்ளது. அதனால் நாம் தொடர்ந்து இதற்கான முயற்சிகளை செய்வதன் காரணமாக பல மாற்றங்களை எமது சமூகத்தில் காண முடியுமென்பது உண்மையாகும்.

அதற்கு மாற்றமாக ஒரு சிலர் மாற்றம் தேவை, கேள்வி கேட்கிறார்கள் என்பதற்காக் எமது தனியார் சட்டத்தில் மாற்றம் தேவை என்பது நமக்கு நாமே குழிதோண்டிக் கொள்வது போன்றாகும். இன்று திருமண வயதில் கேள்வி கேட்பார்கள் நாளை வேறொன்று. இப்படியே சென்றால் நமது தனியார் சட்டம் பொதுச் சட்ட மாக மாறிவிடும் என்பதனால் மாற்றம் தேவை என்பதை விட அதற்கான மாற்றீடுகளை சிந்தித்திப்பது ஆரோக்கியமானதாகும். இளம் சமுதாயத்தை நல்வழியில் பயணிக்க நாட்டிலுள்ள உலமாக்கள் புத்திஜீவிகள் அறிஞர்கள் சட்டத்தரணிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து கலந்தாலோசித்து இந்த விடயத்தில் முடிவு காண்பது ஆரோக்கிய மானதாகும்.

- ஸம்ஹர் ஸனூர்தீன்
(இர்பானி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL

49, Sri Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258 077 222 7569
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## பொது மக்களின் தகவல் அறியும் உரிமை இழுத்தடிக்கப்படுவது ஏன்?

தகவல் அறியும் உரிமைச் சட்டம் உலகுக்கு அறிமுகப் படுத்தப்பட்டு 2016 ஆம் ஆண்டுடன் 250 வருடங்களாகின்றன. உலகில் நூறு நாடுகளுக்கு மேற்பட்ட மக்கள் தங்களது நாடுகளில் தகவல் அறியும் உரிமையை அனுபவித்து வருகின்றனர். சார்க் நாடுகளில் இலங்கையில் மட்டும்தான் இதுவரை இந்த உரிமை வழங்கப்படாத நாடாக இருந்தது. தற்பொழுது தகவல் உரிமைச் சட்டம் பாராளுமன்றத்தில் விவாதத்துக்காக முன்வைக்கப்பட்டிருப்பது சந்தோஷமான விடயமே.

கடந்த ஆட்சிக் காலத்தில் தகவல் அறியும் உரிமையை வேண்டி நின்ற ஊடகவியலாளரிடம், உங்களுக்கு எதுக்கு தகவல் அறியும் உரிமை, எதையாவது அறிந்து கொள்ள வேண்டுமென்றால் என்னிடம் கேளுங்கள் என்று முன்னாள் ஜனாதிபதி தெரிவித்ததேயல்லாமல் தகவல் அறியும் உரிமையை மக்களுக்கு வழங்கவில்லை.

நல்லாட்சி அரசு நூறு நாட்களுக்குள் இந்த உரிமையைப் பெற்றுத் தருவதாக வாக்களித்துத்தான் ஆட்சிக்கு வந்தது. தற்பொழுது ஒரு வருடம் கடந்துள்ள நிலையில், தேசிய அரசாங்கம் இதற்கான முன்மொழிவுகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது. இருந்த போதிலும் இது முக்கிய விடயமாகக் கருதப்பட்டு விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் தொடர்ந்தும் இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டிருப்பது கவலை தருகிறது.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் இவ்வாறு இழுபடுவதற்குக் காரணம் அதனால் நேரடியாகப் பயன்பெறப் போகின்றவர்களின் அசமந்தப் போக்காகும். இந்தச் சட்டத்தினால் அரசியல்வாதிகள் பெரியளவு நன்மை பெறப் போவதில்லை. மாறாக அவர்களைப் பொறுத்தவரை இது அவர்களுக்கு இடைஞ்சல் விளைவிக்கும் சட்டமாகவே அமையப் போகிறது.

அரசியல்வாதிகள் ஊர்களிலே நடைமுறைப்படுத்துகின்ற வேலைத்திட்டங்கள், அவர்களால் வழங்கப்படுகின்ற நியமனங்கள், அவர்களது சொத்து விபரங்கள் என பல்வேறு தகவல்களையும் பொதுமக்கள் பெற்றுக் கொள்ளக் கூடியதான நிலையை இந்தத் தகவல் அறியும் உரிமை மக்களுக்கு வழங்குகிறது. தங்களது ஊருக்குக் கிடைக்காத மின்சாரம், நீர்ப்பாசன வசதி, போக்குவரத்து வசதிகள் சம்பந்தமாக குறித்த அலுவலகங்களுடன் நேரடியாகத் தொடர்புபட்டு விபரங்களை அறிந்து கொள்வதற்கு இந்தச் சட்டம் வழிவகை செய்கின்றது.

மின் துண்டிப்பை மீளப்பெறுவதிலிருந்து பாடசாலைக்குப் பிள்ளைகளைச் சேர்ப்பது வரை அனைத்துக்கும் அரசியல்வாதிகளை நம்பியிருக்க வேண்டிய நிலை மாறி மக்களே நேரடியாகக் கேள்வி கேட்டு தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியுமான சூழலை இந்தச் சட்டம் மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கிறது. அதேபோல தமது வீட்டுக்கு முன்னால் போடப்படுகின்ற கொங்கிறீட் பாதைக்கான வரவு-செலவு போன்ற அரசியல்வாதிகளால் தமது பிரதேசத்தில் முன்னெடுக்கப்படுகின்ற செயற்திட்டங்கள் சம்பந்தமான பூரண விபரங்களையும் அறிந்து கொள்வதற்கும் இந்தச் சட்டத்தினால் மக்களுக்கு முடியுமாகிறது. சின்னச் சின்ன வேலைகளுக்கெல்லாம் அரசியல்வாதியை நாடினால்தான் செய்துகொள்ள முடியும் என்ற பிரமையை மக்களுக்கு ஊட்டி, மக்களை தம்மோடு தக்க வைத்துக் கொண்டிருக்கின்ற அரசியல்வாதிகள் இந்தச் சட்டத்தை அவசரமாக நிறைவேற்றித் தருவதில் அக்கறை காட்டப் போவதில்லை.

தகவல் அறியும் சட்டம் ஊடகங்களுக்குத்தான் நன்மை தரும் என்று பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஊடகவியலாளர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்குத் தகவல் பெற்றுக் கொள்ள முடியுமான ஏராளமான வழிமுறைகள் இருக்கின்றன. தற்போது நிலவுகின்ற ஊடக சுதந்திரம், எந்த அமைச்சரையும் நேரடியாகக் கேள்வி கேட்கக் கூடிய சூழலை ஊடகவியலாளர்களுக்குப் பெற்றுத் தந்திருக்கிறது. தவிரவும் தமது ஊடக அங்கீகாரத்தின் வாயிலாக தமக்குத் தேவையான தகவல்களையும் தரவுகளையும் அவர்களால் எந்த இடத்திலிருந்தும் பெற்றுக் கொள்ள முடியுமாக இருக்கிறது.

இந்த வகையில் இந்தச் சட்டத்தின் மூலம் நேரடிப் பயன் பெறக் கூடியவர்கள் பொதுமக்கள்தான். தனது பிள்ளைக்கு ஏன் பாடசாலை அனுமதி கிடைக்கவில்லை, தனது ஊருக்கு மட்டும் ஏன் பொது நூலகம் தரவில்லை, தனது பிரதேசத்தில் ஏன் கழிவு நீரகற்றுவதற்கான வடிகான் அமைக்கப்படவில்லை என தமக்குக் கிடைக்க வேண்டிய விடயங்களில் தாம் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்ற விடயங்களை கேள்வி கேட்டுத் தெரிந்து கொள்வதற்கு, அதனூடாக தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு இந்தச் சட்டம் மக்களுக்கு வரப்பிரசாதமாக அமைகிறது.

இதற்கு மக்கள் பணம் செலுத்த வேண்டியதில்லை. யாரும் யாரையும் கேள்விக்குட்படுத்தலாம். இதில் வயது வேறுபாடு கிடையாது. குறித்த தகவல்களை தரமறுத்தால் அதற்கெதிராக நீதிமன்றத்துக்குச் சென்று தமது உரிமைகளை வென்றெடுக்க முடியும்.

இப்படிப்பல நன்மைகளை பொதுமக்களுக்கு இந்தச் சட்டம் வழங்குகிறது. இது நடைமுறையில உள்ள நாடுகளில் எல்லாம் மக்கள் அரசியல்வாதியின் தயவைக் கெஞ்சிக் கொண்டிருக்காமல் நெஞ்சை நிமிர்த்தி தமது தேவைகளைப் பெற்றுக் கொள்கிறார்கள். எனவே இந்தச் சட்டம் இழுத்தடிக்கப்படாமல் உடனே அமுல்படுத்தக் கூடிய வகையில் நிறைவேறச் செய்வது பொதுமக்களின் கைகளிலேயே இருக்கிறது. இதற்கான அழுத்தங்களை உரிய இடங்களுக்கு மேற்கொள்ள வேண்டிய பணியை பொதுமக்கள் தான் செய்ய வேண்டியிருக்கிறது.

தகவல் அறியும் உரிமை சம்பந்தமாக பொதுமக்கள் எவ்வளவு விளங்கி வைத்திருக்கிறார்கள் என்பதில்தான் அதன் வெற்றி தங்கியிருக்கிறது என்பது உலக நாடுகள் நமக்குக் கற்றுத் தருகின்ற உண்மை.

# புதிய வரி ஒழுங்கு அரசியல் புயலாகுமா?

திசரணி குணசேகர

பல நூற்றாண்டு காலமாக உலகம் முழுவதிலும் புரட்சிகள் கலகங்கள் வெடிப்பதற்கு தோதாய் அமைந்த காரணியாக வரிக்கொள்கையை குறிப்பிடலாம். பிரான்ஸ் புரட்சி, சீனப் புரட்சி மற்றும் 1848 இல் இலங்கையில் மூண்ட ஊவா வெல்லஸ்ஸ புரட்சிகளுக்கு ஆளும் வர்க்கம் விதித்த வரிகளே காரணமாய் அமைந்தன. சமகாலத் தலைவர்கள் பதவி கவிழ்க்கப்படுவதற்கும் ஆட்சி யந்திரங்கள் மாற்றப்படுவதற்கும் மத்திய வர்க்கத்தினர் மீதும் வசதி வாய்ப்பற்றவர்கள் மீதும் விதிக்கப்பட்ட வரிச்சுமையே காரணமாகும்.

இரும்புப் பெண் என்பதாக சொல்லப்பட்ட இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் மார்க்ரட் தச்சரும் நீண்ட காலம் அதிகாரத்தில் இருப்பதற்கு வியூகம் வகுத்த மஹிந்த ராஜபக்ஷவும் அதிக வரி விதிப்புக் கொள்கையை பின்பற்றியமையினாலேயே பதவி துறக்க நேர்ந்தது. ஏப்ரல் 1ம் திகதி வட் வரி அதிகரிப்பை அமுல்படுத்தி, மே 2ம் திகதியும் அதை முன்னெடுப்பதற்கு முயற்சித்துள்ள மைத்ரீ, விக்ரமசிங்க ஆட்சிபீடம் சுயமாகவே அழிவுப் பாதையை நோக்கி காலடி எடுத்து வைத்துள்ளது.

### சர்வதேச நாணய நிதியமும் அதன் நிபந்தனைகளும்

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்குட்பட்டே செயற்படுகிறது. இந்நிபந்தனைகளுள் சிலதை கடன் வழங்குவதற்கு முன்னர் செயற்படுத்த வேண்டும். அது ex-ante conditionalities என்பதாக அடையாளப் படுத்தப்படுகிறது. ex-post conditionalities என்பது இன்னொரு வகையான நிபந்தனை. கடன் தொகைத் தவணைகள் கிடைத்ததன் பின்னரே அந்நிபந்தனைகளை அமுல்படுத்த வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் தொகையை பெற்றுக்கொள்வதற்குரிய முன் நிபந்தனையொன்றாகவே அரசாங்கம் தடல்புடலாக வரி விதிப்பதற்கு முயற்சிக்கின்றது. சர்வதேச நாணய நிதியத்தின் செயற்பாடுகளை அம்பலப்படுத்தி எழுதப்பட்ட புத்தகங்களுள் ஷெரில் பியர் எழுதிய the debt trap, the inter national monetary fund and the third world (கடன் பொறி- சர்வதேச நாணய நிதியமும் மூன்றாம் உலகமும்) என்னும் நூல் முதலிடம் பெறுகிறது.

1974 இல் வெளியான இந்நூலில் சர்வதேச நாணய நிதியம் வழங்குகின்ற கடனுக்காக வேண்டி விதிக்கின்ற நிபந்தனைகளின் பட்டியல் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு தேசிய நிதியின் பெறுமதியைக் குன்றச் செய்தல் அல்லது முற்று முழுதாக மிதப்பதற்கு இடமளித்தல், வங்கிகள் பெற்ற கடன் தொகையின் வட்டி வீதத்தை உயர்த்தி விடுதல், வரியை அதிகரித்துவிடுதல், அரசாங்க நிறுவனங்கள் வழங்குகின்ற சேவைகளுக்கு அறவிடுகின்ற கட்டணங்களை உயர்த்திவிடுதல், நுகர்வோர் நிவாரணங்களை துண்டித்து விடுதல், ஊதியத் தொகை அதிகரிப்பை கட்டுப்படுத்தல் போன்ற விடயங்களும் மேற்படி நூலில் விவரிக்கப் பட்டுள்ளன. பியர் அவர்கள் இந்நூலை 42 வருடங்களுக்கு முன்னர் வெளியிட்டிருந்தார்.

சர்வதேச நாணய நிதியம் இன்னும் இந் நிபந்தனைகளை கடனை எதிர் பார்த்துள்ள நாடுகள் மீது திணித்தே வருகிறது. இந்நிபந்தனைகளை பின்பற்றி நிதி நெருக்கடிகளிலிருந்து கரைசேர்ந்து அபிவிருத்தியை தொட்ட எந்தவொரு நாடும் உலகில் இல்லை. என்றாலும் சர்வதேச நாணைய நிதியம் நிபந்தனைகள் விதிப்பதனை இன்னும் கைவிட்டபாடில்லை. இலங்கையை இக்கடன் பொறிக்குள் சிக்கவிட்டது ராஜபக்ஷ ஆட்சி பீடம் என்பதில் இரு கருத்துக்கு இடமில்லை. ஆனாலும் அதன் காரணமாக மக்களுக்கு அழுத்தங்களை கொடுக்கும் வகையில் நினைத்தவாறு பொருளாதார ஒழுங்குகளை செயற்படுத்த முடியும் என்பதாக தற்போதைய அரசாங்கம் நினைப்பது தவறானது.

இப்பொருளாதார விதிமுறைகளின் விளைவாக உடனடியாக வாழ்க்கைச் செலவுகள் அதிகரிப்பதற்கான சாத்தியங்கள் உள்ளன. இதற்குரிய நஷ்டஈட்டை வழங்க வேண்டியது ராஜபக்ஷாக்கள் அல்ல. சிறிசேன விக்ரமசிங்க ஆட்சி பீடமும் ராஜபக்ஷ எதிர்ப்புக் குழுக்களுமே அதை வழங்க வேண்டும்.

புகழ்பெற்ற பொருளியல் அறிஞரொருவரான ஜெப்ரி ஸாக்ஸ் தனது the end of poverty (ஏழ்மையின் முடிவு) எனும் நூலில் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கூடாக பட்டியை இறுக்கிக் கொள்ளுதல் என சொல்லப்படுவது, பட்டியொன்றை வாங்குவதற்குக் கூட வசதிகளில்லாத நாடுகளையாகும். இக்கூற்றை ஓரளவுக்கு மாற்றியமைத்தால் அது இலங்கைக்கும் பெரும்பாலான மூன்றாம் உலக நாடுகளுக்கும் ஓரளவு பொருத்தமாய் அமையும். நாணய நிதியத்தின் நிபந்தனைகளின் காரணமாக பட்டிகளை இறுக்கிக்கொள்ள நேர்வது பட்டி விற்பனை நிலையங்களை கொள்வனவு செய்யும் அளவுக்கு வசதியுள்ள பணம் படைத்த முதலாளித்துவச் சிறுபான்மையினருக்கல்ல.

தமது நாசகார செலவுகளையும் சொகுசு மிகு வாழ்க்கைப் பாணியையும் பின்பற்றுமாறு நாணய நிதியம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒரு நாட்டின் ஆளும் வர்க்கத்திடம் சொல்வதில்லை. அவ்வாறான நிபந்தனைகளை இடுவது ஒரு நாட்டிற்கு நல்லது. ஆனாலும், அவற்றை ஏற்றுக் கொள்வதற்கு ஆட்சியாளர்கள் விருப்பமில்லை என்பதை நாணய நிதியம் அறிந்து வைத்துள்ளது.

ஏப்ரல் 17ம் திகதி சண்டே டைம்ஸ் பத்திரிகையில் வெளியான ஒரு செய்தியில் அமைச்சரொருவரைப் பராமரிப்பதற்கு நாட்டின் சொத்திலிருந்து 5 மில்லியன் ரூபா செலவாகின்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய வங்கியின் முன்னாள் பதில் அதிபதியொருவரே குறித்த செய்தியை பத்திரிகையில் வெளியிட்டிருந்தார். 2008ல் மத்திய வங்கி மேற்கொண்ட ஆய்வொன்றிலேயே இந்தத் தகவல் வெளியாகியதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். இத்தொகை 2016ல் இன்னும் பல மில்லியன்களால் அதிகரித்திருக்கும் என்பது திண்ணம்.

இத்தகைய செலவுகளை துண்டிக்குமாறு நாணய நிதியம் கூறப்போவதில்லை. அதற்குப் பதிலாக அரசாங்கம் மக்களுக்காக வேண்டிச் செய்யும் செலவுகளை குறைக்குமாறும் மக்கள் மீது வரியைச் சுமத்துமாறுமே நாணய நிதியம் ஆலோசனை விடுக்கிறது.

மே மாதம் 2ம் திகதி உத்தேச வரிச்சுமை அதிகரிக்கப்பட்டால் சாதாரண குடும்பமொன்றின் மாதாந்த செலவு 10000 ரூபாவினால் அதிகரிப்பதற்குரிய வாய்ப்பிருப்பதாக சண்டே டைம்ஸ் பத்திரிகை குறிப்பிடுகிறது. இத்தகைய நிலைமைக்குள் நாட்டை தள்ளிவிடுவதில் ராஜபக்ஷ ஆட்சிபீடத்தின் பங்களிப்பு அளப்பரியது என்பதில் இரு கருத்துக்கு இடமில்லை.

உதாரணமாக இந்நாட்டின் வரலாற்றில் நிர்மாணிக்கப்பட்ட பிரமாண்ட அழிவொன்றாக கருதப்படுகின்ற மத்தள விமான நிலையத்தை நிர்மாணித்து முடிப்பதற்கு 210 மில்லியன் டொலர்கள் (26.6 பில்லியன் ரூபா) செலவழிக்கப்பட்டுள்ளது. இதில் 190 மில்லியன் டொலர் கடனாகப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இக்கடன் தொகையையும் அதற்குரிய உயரிய வட்டி விகிதத்தையும் சேர்த்து தற்போதைய அரசாங்கமும் எதிர்வரும் காலத்தில் ஆட்சிக்கு வரவுள்ள அரசாங்கமும் செலுத்த வேண்டியுள்ளது. நாடு இன்று முகம்கொடுத்து வருகின்ற கடுமையான கடன் சுமைக்கும் பொருளாதார நெருக்கடிக்கும் இத்தகைய மடத்தனமான செயல்களே காரணமாகும்.

நாட்டு மக்கள் மீது சுமக்க முடியாத வரிச் சுமையை சுமத்துவதோடு மலைநாட்டுப் பிரதேசத்தில் இன்னும் இரண்டு விமான நிலையங்களை நிர்மாணிப்பதற்கு தற்போதைய ஆட்சியாளர்கள் முடிவெடுத்திருப்பதினூடாக விளங்குவது என்னவெனில், பொருளாதார மடமைத் தனங்களுக்கு கட்சி, நிற, பேதம் இல்லை என்பதாகும்.

### வரி நெருக்கடியும் சுதந்திரக் கட்சியின் நெருக்கடியும்

இரண்டு தேர்தல்களில் தோல்வியுற்றிருந்தாலும் மீண்டும் அதிகாரத்திற்கு வரும் முயற்சியை கைவிடுவதற்கு ராஜபக்ஷவும் ராஜபக்ஷ குடும்பத்தினரும் தயாரில்லை. சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தை மீளத் தனக்குப் பெற்றுக்கொள்வது கடினமானது என்பது ராஜபக்ஷவுக்கு புரிவது நிச்சயம். சுதந்திரக் கட்சியை இரண்டாக உடைத்து கூடுதல் பங்கை தன் வசம் வைத்துக் கொள்வதே அவருடைய இலக்காக உள்ளது.

சிறிசேன, விக்கிரமசிங்க ஆட்சியின் மூலம் மக்களுக்கு பல நிவாரணங்கள் கிடைத்தன. அதனால் அண்மைக் காலம் வரையில் ராஜபக்ஷ அணியினருக்கு பெரியதொரு துரும்பாக இனவாதமும் மதவாதமும் அமைந்திருந்தன. அதிகாரத்திலிருந்த சமயத்திலும் அதிகாரத்தைவிட்டு தூக்கி எறியப்பட்ட பின்னரும் பலதரப்பட்ட அமைப்பில் எதிரிப் பீதிகளை தோற்றுவித்து சிங்களப் பெரும்பான்மையொன்றை தன்வசம் வளைத்துக் கொள்வதற்கு ராஜபக்ஷாக்கள் முயற்சித்திருந்தார்கள்.



இம் முயற்சிகள் அரசியல் ரீதியாகவும், தேர்தல் ரீதியாகவும் பெருமளவில் வெற்றியளிக்கவில்லை என்ற போதிலும் சிறிசேன, விக்ரமசிங்க ஆட்சிக்கெதிராக உபயோகப் படுத்துவதற்கு அதைவிடவும் வெற்றிகரமான ஆயுதமொன்று ராஜபக்ஷ குழுமத்திற்கு கிடைக்கவில்லை. தற்பொழுது அந்நிலைமை மாறியுள்ளது.

நாட்டில் மக்கள் முகம்கொடுக்கின்ற பிரச்சினைகளை மக்களை விட்டும் மறைத்து விடுவதற்கு ராஜபக்ஷாக்கள் பல்வேறுபட்ட முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். ஆனாலும் அத்திட் டங்களால் பொதுமக்களின் பொக்கட்டிற்கும் வயிற்றுக்கும் உண்மையை மறைக்க முடியவில்லை.

தற்போதைய அரசாங்கமும் இதேபாணியில் பயணிப்பதற்குரிய முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதனை காண முடிகிறது. வரி அதிகரிப்பு சாதாரண மக்களுக்கு எவ்வகையிலும் பாதிப்பை ஏற்படுத்தப்போவதில்லை என ஆளும் கட்சித் தலைவர்கள் கூறுகின்றனர்.

ஆனால் மே 2ம் திகதியின் பின்னர் பொருட்கள் சேவைகளின் விலை அதிகரிக்கும்பட்சத்தில் மக்களுக்கு ஏற்படும் நஷ்டத்தை அவர்களை விட்டும் மூடி மறைப்பதற்கு இவர்களுக்கு முடியாது போகும். அதனால் சிறிசேன-விக்ரமசிங்க அரசாங்கத்தை ஆட்சிக் கட்டிலில் அமர்த்துவதற்கும் அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்கும் இரு தடவைகள் புள்ளடியிட்ட மக்களுக்குள் மூளும் விரக்தியினால் பலன்பெற்றுக்கொள்ள ராஜபக்ஷாக்கள் எதிர்பார்த்திருப்பது உறுதி. வரிச்சுமையும் பொருட்களின் விலை அதிகரிப்பும் சுதந்திரக் கட்சியிலிருந்து கூடுதலானோரை பிரித்துக்கொள்வதற்கு ராஜபக்ஷ திட்டத்திற்கு கிடைத்த ஆசிர்வாதமொன்றாகும்.

ஜனாதிபதி மைத்ரிபால எவ்வளவு முயற்சித்தாலும் சுதந்திரக் கட்சியின் பிளவை தடுக்க முடியாதென்பது திண்ணம். இப்பிளவு எப்போது ஏற்படும் என்பதே ஒரே கேள்வியாக உள்ளது. இம்முறை இடம்பெற்ற மே தினப் பிரச்சினைக் கூடாக இப்பிளவு

ஏற்பட இருந்ததை தடுத்துக் கொண்டுள்ள பொழுதிலும் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கூடாகவோ அல்லது மாகாண சபைத் தேர்தலுக்கூடாகவோ நிச்சயமாகவே இப்பிளவு வெடிக்கும் என்பதில் சந்தேகமில்லை. வரிச்சுமையும் பொருட்களின் விலை அதிகரிப்பும் சுதந்திரக் கட்சியிலிருந்து கீழ் மட்ட உறுப்பினர்கள் பலரை பிரித்தெடுப்பதற்கு ராஜபக்ஷ அணியினருக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது.

உத்தேச வரி அதிகரிப்பு செயப்படுத்தப் பட்டால் அல்லது நாணய நிதியத்தின் நிபந்தனைகளை காரணியாக கொண்டு மக்களுடைய வாழ்க்கை பிரச்சினைகள் அதிகரித்து விட்டால் அதனால் உத்தியோகபூர்வ சுதந்திரக்கட்சி இழக்கப்பட்டாலும் உண்மையான சுதந்திரக் கட்சியை கைப்பற்றிக்கொள்வதில் ராஜபக்ஷவினுடைய எதிர்பார்ப்புக்கள் நல்லதொரு நிலையில் அமையுமென்பது திண்ணம்.

பெரும்பான்மையான சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளுக்காகவும் ஏனைய சுய இலாபங்களுக்காகவுமே ஜனாதிபதி சிறிசேன அவர்களுடன் இணைந்துள்ளனர். அதுவல்லாமல் அவருக்குள்ள கட்சிசார்பு நிலையினால் அல்ல. தான் எத்தகைய கொள்கைகளுக்காக வேண்டி உள்ளேன் (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# இலங்கையில் முதன்மைப் பிரச்சினை எது?

ஒரு பிரச்சினையை இன்னொன்றால் மூடி மறைப்பதுவே தீர்வென கருதப்படும் ஓர் ஆபத்தான் சூழலில் நாம் வாழ்கிறோம். மாறி மாறி வரும் அரசாங்கங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு புதிய பிரச்சினைகளை உருவாக்குகின்றன. காலவோட்டத்தில் இருக்கும் பிரச்சினைகள் பெருக்கமடைந்து, ஒட்டுமொத்த நாட்டையும் பெரும் சிக்கலில் மாட்டிவைக்கின்றன.

இலங்கையின் இன்றைய, உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய நெருக்கடி எது என்பதை அரசியல்வாதிகள் வசதியாக மறந்து வருகின்றனர். ஊடகங்களும் மக்களின் கவனத்தை பல்வேறு பக்கம் திசை திருப்பி வருகின்றன.

இந்த வாரம் ஊடகங்களிலும் அரசியல் வட்டாரங்களிலும் மே தினமே பிரதான பேசுபொருளாகியது. எந்தக் கட்சிக் கூட்டத்தில் அதிகமான மக்கள் கலந்துகொண்டனர் என்பதைப் பற்றியே அதிக பேச்சு நடந்தது. புலனாய்வுப் பிரிவினர் அறிக்கை படி ரணில் வெற்றி பெற்றார். மைத்திரி ஏமாற்றமடைந்தார். மஹிந்த தோல்வியுற்றார்.

இது எப்படி எனக் கேட்கலாம். ஐ.தே.க. மே தினக் கூட்டத்தில் 75,000 பேர் அல்லது அதை விட சற்று அதிகமானவர்கள் கலந்துகொண்டிருக்கின்றனர். காலியில் நடந்த சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் 40,000 பேர் கலந்துகொண்டிருக்கின்றனர். மஹிந்தவின் எதிரணிக் கூட்டத்தில் 15,000 பேர் கலந்துகொண்டிருக்கின்றனர் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

**உலகச் சந்தையில் பெற்றோலின் விலை வரலாறு காணாத வகையில் கடும் வீழ்ச்சியடைந்துள்ளது. சுத்திகரிக்கப்படாத மசகு எண்ணெய்யின் விலை ஒரு பீப்பாவுக்கு 100 டொலர் என்பதிலிருந்து 35 டொலராகக் குறைந்துள்ளது. ஆனால், இலங்கை மக்கள் விலைக் குறைவின் அனுகூலங்களை அனுபவிப்பதற்கு கொடுத்து வைக்காதவர்கள் போலவே நமது அரசாங்கம் எண்ணெய் விலையை நிர்ணயித்துள்ளது.**

கடந்த மே தினக் கூட்டத்தில் தொழிலாளர்களுக்கு ஏதேனும் அனுகூலங்கள் அறிவிக்கப்பட்டதா இல்லையா என்ற விவாதத்தைக் கடந்து இரண்டே இரண்டு நிறுவனங்கள் பெரும் இலாபமடைந்தன என்பது மாத்திரம் உண்மையாகும். அதிலொன்று இலங்கை போக்குவரத்துச் சபை. மக்களை அள்ளிச் சுமப்பதற்கு பேருந்துகள் வாடகைக்கு விடப்பட்டதால் 45 மில்லியன் ரூபாவை சம்பாதித்துக் கொண்டனர்.

அடுத்தது இலங்கையிலுள்ள -குறிப்பாக மே தினக் கூட்டங்கள் நடைபெற்ற நகருக்கு சமீபமாக இருந்த அல்லது தொழிலாளர்களை அள்ளிச் சுமந்த வாகனங்கள் பயணித்த பாதைகளிலிருந்த மதுபானத் தவரணைகள். இலங்கையின் அரசியலுக்கும் மதுபான போத்தல்களுக்கும் இடையில் இருக்கின்ற நெருக்கமான உறவு இந்த மே தினத்திலும் தெளிவாக வெளிப்பட்டது.

ஒவ்வொரு தொழிலாளிக்கும் மதுபானம் இலவசமாகப் பரிமாறப்பட்டதை கண்கூடாகக் காண முடிந்தது. அதிவேகப் பாதையில் பயணக் கட்டணமும் மே தினத்தன்று ரத்துச் செய்யப்பட்டது. இலவசப் போக்குவரத்து, இலவச மதுபானம், இலவச உணவுப் பொதி என பல்லாயிரக்கணக்கான மக்கள் இலங்கை முழுவதும் ஏறி இறங்கினர்.

கட்சிகள் தமது ஆதரவாளர்களின் எண்ணிக்கையைக் காண்பித்து மீளவும் தம்மை சுதாகரித்துக் கொண்டன. மே தினங்கள் வெறும் அரசியல் மேடையாக மாற்றப்பட்டு பல தசாப்தங்கள் ஆகி விட்டன. தொழிலாளர் உரிமை போராட்டத்திற்கும் மே தினக் கூட்டங்களுக்கும் இடையில் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை கடந்த மே தினக் கூட்டமும் உறுதிசெய்து விட்டது.

நல்லாட்சி அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்த பின்னர் அது உடனடியாக எதிர்கொண்ட மிகப் பெரிய சவால் இலங்கையின் பொருளாதாரமே. வேகமாக வீழ்ச்சியடைந்து வரும் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்துவதற்கு அரசாங்கம் பல்வேறுபட்ட முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது. ஆனால், அந்த முயற்சிகள் சாதாரண மக்களின் முதுகை முறிப்பதாகவும் இலங்கையின் கடன் சுமையை மேலும் அதிகரிப்பதாகவுமே உள்ளது.

மத்திய வங்கியின் தலைவர் அர்ஜுன மஹேந்திரன், பிரதமர் ரணில் விக்ரமசிங்க, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, ஜனாதிபதி மைத்திரிபால அனைவரும் போல் இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது மிகப் பெரும் சவால் நிறைந்தது என்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர். இது மிக சீரியஸான ஒரு அபிப்பிராயமாகும்.

உண்மை இங்கு ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், அதற்கு வழங்கப்படும் விலையை யார் கொடுப்பது என்பதுதான் பிரதான கேள்வியாகும். 1986 இல் 70,000 மில்லியனாக இருந்த இலங்கையில் வெளிநாட்டுக் கடன் சுமை 2016 இல் 32,72,700 மில்லியன் இலங்கை ரூபாயாக அதிகரித்துள்ளது. இது இலங்கையின் முழு மொத்த பொருளாதாரத்தின் மீதும் ஒரு பேரிடியாக இறங்கியுள்ளது. நகர்ப்புற மக்கள் தொட்டு, கிராமப் புற தொழிலாளி வரை இதன் தாக்கம் அனைவரையும் பாதிக்கப் போகின்றது.

திக்கு முக்காடிப் போயிருக்கும் அரசாங்கம் உயர்ந்த வட்டி வீதத்தில் குறுங்காலக் கடன்களைப் பெற்று வெளிநாட்டுக் கடன்தொகையை அடைப்பதற்கு முயற்சிக்கின்றது. ஒரு பிரச்சினைக்குத் தீர்வாக இன்னொரு பிரச்சினையை உருவாக்குதல் என்பதன் அர்த்தம் இதுதான்.

ஏற்கனவே சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 2 பில்லியன் அமெரிக்க டொலர்களை அரசாங்கம் கடனாகக் கோரியிருந்தது. அதில் 1.5 பில்லியன் டொலர்களைத் தருவதாக நாணய நிதியம் வாக்களித்துள்ளது. ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ள அரசாங்கம் 300-400 மில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடனாகக் கோரியுள்ளது. அமெரிக்கா, சீனா போன்ற நாடுகளிடமும் இலங்கை கடன் வேண்டியுள்ளது.

பொருளாதார முகாமைக்கான அமைச்சரவைக் குழுவொன்று (Cabinet Comittee on Economic Management) நிதி நெருக்கடியை கையாளும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளது. இதேவேளை, இலங்கை சிவில் சமூகத்தின் மீது புதிய வரிகளைச் சுமத்துவதன் மூலமும் நலப் பணிகளுக்கான (Welfare) செலவினங்களைக் குறைப்பதன் மூலமும் தேசிய வருமானத்தை உயர்த்தலாம் எனவும் அரசாங்கம் கருதுகின்றது.

மே 02 இலிருந்து உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) வீதத்தை அரசாங்கம் அதிகரித்துள்ளது. இதன் மூலம் நுகர்வுப் பொருட்களின் விலை அதிகரிப்பதற்கான வாய்ப்பு உள்ளது. மட்டுமன்றி, சேவைக் கட்டணங்கள், அதிகரிக்கப்படவுள்ளன. தொலைபேசிக் கட்டணங்கள் உயர்வடையப் போகின்றது.



பெறுமதி சேர்க்கப்பட்ட வரி உணவுப் பொருட்கள் மீதும் விதிக்கப்பட்டால் மக்களுக்கு பெரும் சுமை உருவாகும். கல்வி, உணவு துறை மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரியை நீக்குமாறு அரசியல் கட்சிகள் சில வேண்டுகோள் விடுத்துள்ளமையும் கவனத்திற்குரியது.

ஜனாதிபதி வரி அதிகரிப்பை அனுமதிக்க மாட்டேன் என்று குரல் கொடுக்கிறார். ஆனால், அவரது நிதியமைச்சர் நள்ளிரவோடு நள்ளிரவாக புதிய வரிகளை அறிமுகம் செய்கிறார். இலங்கையின் வெளிநாட்டுக் கடன் நெருக்கடியே பொருளாதார நெருக்கடியின் மூலமாக இருக்கின்றது. கடந்த ஆட்சியாளர்களின் தொடர்ச்சியான தவறுகள் இப்போது ஒரு பிரச்சினைப் பொதியாக திரட்சியடைந்துள்ளது.

என்றுமில்லாதவாறு இலங்கை அரசாங்கம் மூச்சுத் திணறுகின்ற நிலைக்கு ஆளாகியுள்ளது. அதன் உண்மையான, கசப்பான அறுவடைகளை அரசியல்வாதிகள் அல்ல, மக்கள்தான் அனுபவிக்கத் தொடங்கியுள்ளனர்.

2005 இல் மூன்று இலட்சம் கோடியாக இருந்த வெளிநாட்டுக் கடன் 2015 இல் பத்து இலட்சம் கோடியாக அதிகரித்துள்ளது. இதைச் சமாளிப்பதற்கு தற்காலிக மூலோபாயங்களை மத்திய வங்கி கையாளத் துவங்கியுள்ளது. நாணயத்தின் பெறுமதி இறக்கம் அதில் ஒன்று. விளைவாக, 100 ரூபாவாக இருந்த டொலரின் பெறுமானம் 145 ரூபாவாக அதிகரித்துள்ளது. நாணயத்தின் பெறுமதியை மேலும் இறக்கம் செய்வதற்கு மத்திய வங்கி ஆலோசனை நடத்தி வருகின்றது.

இதன் தர்க்க ரீதியான விளைவாக, இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலை பல மடங்கு அதிகரிக்கப் போகின்றது. இலங்கை உணவுப் பொருளையும் இறக்குமதி செய்யும் நாடு என்பதை நாம் மனங்கொள்ள வேண்டும். நாற்புறமும் கடலால் சூழப்பட்ட இலங்கைத் தீவில் மக்கள் இன்னும் டப்பாவில் அடைக்கப்பட்ட மீனை உண்கிறார்கள் என்பது ஆசியாவிலேயே பெரும் அதிசயம்.

உலகச் சந்தையில் பெற்றோலின் விலை வரலாறு காணாத வகையில் கடும் வீழ்ச்சியடைந்துள்ளது. சுத்திகரிக்கப்படாத மசகு எண்ணெய்யின் விலை ஒரு பீப்பாவுக்கு 100 டொலர் என்பதிலிருந்து 35 டொலராகக் குறைந்துள்ளது. ஆனால், இலங்கை மக்கள் விலைக் குறைவின் அனுகூலங்களை அனுபவிப்பதற்கு கொடுத்து வைக்காதவர்கள் போலவே நமது அரசாங்கம் எண்ணெய் விலையை நிர்ணயித்துள்ளது.

ஏற்றுமதிப் பொருளாதாரம் வருடாந்தம் வீழ்ச்சியடைகின்றது என்பது மிக ஆபத்தான சமிக்ஞையாகும். வருடாந்தம் ஏற்றுமதித் துறை 10 பில்லியன் அமெரிக்க டொலர்களால் வீழ்ச்சியடைந்து வருகின்றது. பெருந்தோட்டத் துறை உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதில் இலங்கை அரசாங்கம் படிப்படியான வீழ்ச்சியைக் கண்டு வருகின்றது.

மறுபக்கம் இறக்குமதிக்கான செலவு 19 பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளது. அதாவது இறக்குமதிச் செலவீனம் இரு மடங்காக அதிகரித்துள்ளது. ஏற்றுமதிக் கம்பனிகள் வெளிநாடுகளில் சேமித்துள்ள சொத்துக்களை நாட்டுக்குக் கொண்டு வர வேண்டும் என்று ஒரு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்தனைக்கும் இடையில் ஐரோப்பிய நாடுகளால் இலங்கைக்கு வழங்கப்பட்டு வந்த GSP வரிச் சலுகை ஏற்கனவே நீக்கப்பட்டிருப்பதனால் இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரம் பாரிய சரிவை எதிர்கொண்டுள்ளது. ஏற்றுமதித் துறை 2015 இல் 5%ஆல் வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் வெளிநாட்டு வருமானம் வீழ்ச்சி கண்டுள்ளது.

ஒரு காலத்தில் 30%மாக இருந்த இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருமானம் தற்போது 14 வீதமாகக் குறைந்துள்ளது. கிட்டத்தட்ட இலங்கை மக்கள் உற்பத்தியில்லாத வெறும் நுகர்வுச் சமூகமாக மாற்றப்படுகிறார்கள். 2015 இல் 4.3%மாக இருந்த வேலையில்லாதோர் தொகை 2016 இல் 4.6% ஆக அதிகரித்துள்ளது. இவ்வாண்டின் இறுதிக்குள் இலங்கை மக்கள் பாரிய பொருளாதார நெருக்கடி ஒன்றுக்கு முகம்கொடுக்கப் போகின்றனர் என்பதற்கான குறிகாட்டிகள் தெளிவாகத் தென்படுகின்றன.

மொத்தத்தில் இலங்கை அரசாங்கம் முதலாவதாகத் தீர்க்க வேண்டிய பிரச்சினையாக பொருளாதார நெருக்கடியே கருதப்பட வேண்டும். ஊடகங்கள், சிவில் சமூகம் அனைத்தும் இது குறித்து குரல் கொடுக்க வேண்டும். இலங்கையின் அதி முக்கியத்துவம் வாய்ந்த தேசிய பிரச்சினையாக இதுவே கருதப்பட வேண்டும்.

மாறாக, மையப் பிரச்சினையை விட்டும் கவனத்தை திசை திருப்பும் அரசியலை அரசாங்கமும் ஊடகங்களும் செய்யுமாயின், இலங்கை ஒரு கிரேக்கமாகவோ முகாபேயின் சிம்பாவேயாகவோ மாறுவதைத் தடுத்து நிறுத்த முடியாது.

ஊடகங்கள் இப்போது மஹிந்தவின் தாய்லாந்துப் பயணம் பற்றியும் உதயங்கவை கைதுசெய்தல் பற்றியும் பேசுகின்றன. அல்லது சம்பந்தன் அனுமதியின்றி இராணுவ முகாமுக்குள் புகுந்தது பற்றி உணர்ச்சிகரமான செய்திகளைப் பிரசுரிக்கின்றன.

இந்த ஆண்டில் 3924 டொலர் தலாவீத வருமானமாக இருக்கும் தொகையை 4500 டொலராக உயர்த்துவதே நோக்கம் என மத்திய வங்கியின் ஆளுநர் கூறுவதை ஊடகங்கள் ஊதுகின்றன. பிரிட்டனில் உள்ளது போன்று பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தையே பாராளுமன்றத்தில் கொண்டு வரப் போவதாக ரணில் கதை கூறுகிறார்.

நாடு பொருளாதாரத்தில் அதல பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில், அரசியல்வாதிகளும் ஊடகங்களும் மையப் பிரச்சினைகளை விட்டு விட்டு, வேறு எங்கோ சென்றுகொண்டிருக்கின்றனர். நாடே தீப்பற்றி எரிந்தபோது ஒரு கோப்பைத் தண்ணீர் ஏனும் ஊற்றுவது குறித்து சிந்திக்காமல் பிடில் வாசித்த நீரோ மன்னனின் கதைதான் இது.

வாழ்க! நமது நாடு!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் சமூகத்தைக் கூட்டிணைக்கும் கூட்டு ஸகாத்




ஒருவர் தனது பொருளாதார பௌதிகத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலை என்பதுதான் வறுமை என்பதற்குரிய வரைவிலக்கணமாகும். இலங்கையின் தேசிய வறுமைச் சுட்டி 6.5 ஆக இருக்கையில், முஸ்லிம் சமூகத்தில் அது இருபதை விட அதிகமாகும் என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் அஷ்ஷெய்க் மிப்லி அவர்கள் முன்வைத்த கருத்து சபையில் இருந்தவர்களுக்கு தாம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கிறோம் என்பதை உணர்த்தப் போதுமானதாகும்.

வறுமை ஒழிப்பின் சூத்திரமாக இஸ்லாம் ஸகாத்தை முன்வைக்கிறது. இதனை நடைமுறைப்படுத்துவது இஸ்லாமிய அரசின் கடமை. இந்தக் கடமையை மக்கள் புறக்கணிக்கின்றபோது அதற்கெதிராக போர் தொடுப்பதற்கும் முடியுமான ஒரு கட்டாயக் கடமையாக ஆட்சியாளர் அபூபக்கர் (ரழி) இதனை முன்னிலைப்படுத்தியிருக்கிறார்கள்.

ஸகாத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்கொன்று இல்லாதபோது மக்கள் தத்தமது ஸகாத்தை தமது போக்கில் பங்கிட்டு விடுகின்றனர். இதனால் ஸகாத் வறுமை ஒழிப்புக்கான சூத்திரமாக எமது சமூகத்திலே பிரயோகிக்கப்படுவதில்லை. இதனைக் கருத்தில் கொண்டு பல்வேறு ஊர்களிலும் கூட்டு ஸகாத் நிறுவனங்கள் இயங்கத் தொடங்கியிருக்கின்றன.

இவ்வாறான கூட்டு ஸகாத் அமைப்புக்களை ஒன்று திரட்டி, அவற்றினது அனுபவங்களை பகிர்ந்து கொள்வதும், வறுமை ஒழிப்புக்கான மூலமாக ஸகாத்தை எப்படிப் பயன்படுத்தலாம் என்பதற்கான வழிவகைகளை ஆராய்ந்து, அவற்றை மேம்படுத்துவதும் இந்தக் கூட்டத்தின் நோக்கமாகும் என அஷ்ஷெய்க் மிப்லி கூட்டத்தினது நோக்கத்தை விபரித்தார்.

நாட்டின் பல பிரதேசங்களிலும் இயங்கி வருகின்ற கூட்டு ஸகாத் நிறுவனங்களை ஓரிடத்தில் சந்திக்கச் செய்கின்ற நிகழ்வொன்றை தேசிய ஷூறா சபை கொழும்பில் ஏற்பாடு செய்திருந்தது. நாட்டிலுள்ள எல்லா ஸகாத் கமிட்டிகளையும் கலந்து கொள்ளச் செய்யும் நோக்கில் பத்திரிகைகளிலும் சமூக ஊடகங்களிலும் இந்நிகழ்வு விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. ஊர்களிலே ஸகாத் பணியில் ஈடுபட்டிருக்கின்ற ஐம்பது நிறுவனங்கள் தேசிய ஷூறா சபையுடன் தொடர்பு கொண்டிருந்தன. இவற்றுள் 47 ஸகாத் நிறுவனங்கள் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தன.

தேசிய ஷூறா சபையின் உப குழுக்களுள் ஒன்றான சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான குழுவின் தலைவரான இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் அஷ்ஷெய்க் மிப்லி, இலங்கையில் ஸகாத் துறையில் தேர்ச்சி பெற்ற அறிஞரான ஜாமியா நளீமிய்யா கலாபீடத்தின் உதவிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் அய்யூப் அலி ஆகியோர் உரை நிகழ்த்தியதோடு, அல்குர்ஆன் திறந்த கல்லூரியின் பணிப்பாளர் உஸ்தாத் மன்ஸூர் கருத்துரை வழங்கினார். தேசிய ஷூறா சபையின் தலைவர் தாரிக் மஹ்மூத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வை அதன் உப தலைவர் அஷ்ஷெய்க் எஸ்.எச்.எம். பழீல் நடத்தி வைத்தார்.

இஸ்லாமிய பொருளாதாரத் துறையில் அறிவும் அனுபவமும் மிக்க இந்த உலமாக்களோடு, கலந்து கொள்வதற்காக வந்திருந்த உலமாக்கள், அனுபவம் வாய்ந்தவர்களும் தமது கருத்துக்களைப் பரிமாறி நிகழ்வை ஆக்கபூர்வமானதாக்கினர். ஸகாத்தை நீண்ட கால, குறுகிய கால முதலீடுகளாக மாற்றுவது தொடர்பான கருத்துக்களையும் வழிகாட்டல்களையும் அஷ்ஷெய்க் மிப்லி முன்வைத்தார். குறிப்பிட்ட எட்டுக் கூட்டத்தின் தேவைக்கு மட்டுமே ஸகாத் பயன்படுத்தப்பட முடியும் என்ற கருத்தை ஸகாத் விநியோகம் தொடர்பில் உரையாற்றிய அஷ்ஷெய் அய்யூப் அலி தெரிவித்தார்.

உஸ்தாத் மன்ஸூர் கருத்துரைக்கையில், ஸகாத்தின் தேசிய ரீதியான பங்குகள் உருவாக்கப்பட வேண்டும் என்றும், பீ ஸபீலில்லாஹ், முஅல்லபதுல் குலூப் தொடர்பான பார்வைகள் மீள்பரிசீலிக்கப்பட வேண்டும் என்றும், அல்காரிமூன் பங்கிலிருந்து கடனுதவி வழங்குவது சம்பந்தமான அறிஞர்களின் கருத்தை யோசிக்க முடியும் என்றும், சர்வதேச பைதுஸ் ஸகாத்துடன் இணைந்து வேலை செய்வது பற்றி ஆராய வேண்டும் என்றும் கருத்துரைத்தார்.

நாட்டில் சிறப்பாக இயங்குகின்ற சில ஸகாத் நிறுவனங்கள் தமது அனுபவங்களை முன்வைத்தமை கலந்து கொண்டவர்களை உற்சாகப்படுத்தும் வகையில் அமைந்திருந்தது. 1973 இல் 4,000 ரூபா ஸகாத் சேகரிப்போடு உருவாக்கப்பட்ட வெலம்பொட ஸகாத் கமிட்டியினரின் முன்வைப்பில், தமது ஸகாத் நிதி' தற்போது ஒரு கோடியாக வளர்ந்திருப்பதாகவும், மலசலகூடம், மின்சார நீர் வசதிகள் இல்லாத ஒரு குடும்பமாவது தற்போது தமது பிரதேசத்தில் இல்லை என்றும் தெரிவித்தனர்.

பலாங்கொட பிரதேசத்தில் ஸகாத் நிதியத்தினால் 07 ஏக்கர் காணி வாங்கப்பட்டு 120 குடும்பங்களுக்கு வீட்டு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக பலாங்கொட ஸகாத் பௌன்டேஷன் தெரிவித்தது. தெஹிவல கல்கிஸ்ஸ பகுதியில் உண்டியல் மூலம் திரட்டப்படும் ஸதகாக்கள் மூலமாக சமூகப் பணி நடப்பதாகச் சொல்லப்பட்டது.காத்தான்குடி பள்ளிவாசல் சம்மேளனத்தின் ஸகாத் கமிட்டியினர் காணி வாங்கி சிகரம் வீட்டுத் திட்டம் என்ற பெயரில் தொடர்மாடி வீடுகளை அமைத்து சீதனம் வாங்காது திருமணம் முடிக்கின்ற ஆண்களுக்கு 05 வருடத்துக்கு அந்த வீடுகளை வாடகையின்றி வழங்குவதாகவும், முஅல்லபதுல் குலூபுக்கு தாம் முன்னுரிமை வழங்குவதாகவும் குறிப்பிட்டனர்.

நிந்தவூரின் 32 மஹல்லாக்களிலும் மஹல்லா ஸகாத் நிதியம் உருவாக்கப்பட்டு அவை நிந்தவூர் ஸகாத் நிதியத்துடன் இணைக்கப்படுவதாகவும், தமது ஊரிலிருந்து யாரும் வெளியே யாசகத்துக்காகச் செல்லாத அளவுக்கு தமது ஸகாத் நிதியத்தின் பணி அமைந்திருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். ஆமில் பங்கின் ஊடாக ஸகாத் வழங்குவதை உற்சாகப்படுத்தும் நிகழ்ச்சிகளை தாம் செய்வதாக சம்மாந்துறை ஸகாத் நிதியத்தினர் தெரிவித்தனர்.

இவ்வாறு சில பிரதேசங்கள் தமது அனுபவங்களை சபையில் முன்வைத்ததோடு, மற்றும் பலரும் தமது அனுபவங்களை தேசிய ஷூறாவுக்குக் கையளித்தனர். ஸகாத் விநியோகிப்பதற்கான படிவங்கள், குடும்பங்களின் படிவங்களைத் திரட்டுவதற்கான படிவங்கள் என நடைமுறையில் இருக்கும் படிவங்களின் மாதிரிகளை வந்திருந்த ஸகாத் கமிட்டியினர் பகிர்ந்து கொண்டனர்.

அனுபவங்களை முன்வைத்த ஸகாத் கமிட்டிகள் ஒவ்வொன்றிலும் தத்தமது பிரதேசங்களில் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் ஸகாத் சேகரிக்கப்படுவதாகத் தெரிவித்தனர். இந்த வகையில் நாடு முழுவதும் அண்ணளவாக 100 கோடி ரூபா அளவில் ஸகாத் விநியோகம் நடைபெறுவதாக மதிப்பீடுகள் தெரிவிக்கப்பட்டன. இந்த அனுபவங்களும் தரவுகளும் இலங்கை முஸ்லிம் சமூகத்தின் வறுமை நிலையை எங்களது ஸகாத் மூலமாகவே இல்லாதொழிக்க முடியும் என்ற நம்பிக்கையை வந்திருந்தவர்களுக்கு மத்தியில் ஏற்படுத்தியது.

ஸகாத் நிதியத்தின் செயற்பாடுகளை மேலும் எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது தொடர்பிலான குழுக் கலந்துரையாடலின் போது ஆக்கபூர்வமான பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. ஈற்றில் இவை அனைத்தும் தொகுத்து வழங்கப்பட்டு ஒன்றுகூடலின் முன்மொழிவுகளாக முன்வைக்கப்பட்டன.

1. ஸகாத் தொடர்பில் அல்குர்ஆன், ஸுன்னா அடிப்படையிலான பூரண வழிகாட்டலை விருத்தி செய்தல்
2. முன்வைத்த மாதிரிகளை தொகுத்து ஒரு பொது ஒழுங்குக்கு வருதல்
3. ஸகாத் குழுக்களுக்கான கொள்கைகள் அமைந்த கையேடொன்றை தயார் செய்தல்
4. நடைமுறைப்படுத்தலை எப்படி மேலும் வினைத்திறனுள்ளதாக மாற்றலாம் என்பது தொடர்பில் மேலும் ஆராய்தல்
5. ஸகாத் நிறுவனங்கள் தொடர்பான தரவுத்தளம் ஒன்றைப் பேணுதல்
6. வருடாந்தம் இதுபோன்ற மீளாய்வுக் கூட்டங்களை ஒழுங்கு செய்தல்
7. தேசிய ஸகாத் செயலகம் ஒன்றை நிறுவுதல்

ஸகாத் கமிட்டிகள் அனைத்தையும் இணைத்ததான தேசிய ஸகாத் நிறுவனமொன்று தேசிய சூறாவின் தலைமையின் கீழ் இயங்க வேண்டும், இதற்கு பிராந்திய ஸகாத் கமிட்டிகள் குறிப்பிட்ட ஒரு வீதத்தை வழங்க வேண்டும், ஸகாத் நிதி பற்றாக்குறையாகவுள்ள ஊர்களுக்கும் ஸேவ் த பேர்ள்ஸ் போன்ற முக்கியமான நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் இந்நிதி பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் பலரும் கருத்துத் தெரிவித்தனர்.

ஸகாத் நிதி போன்றே புலமைப் பரிசில் திட்டங்கள், மருத்துவ முகாம்கள் என ஏனைய பல பல விடயங்களும் ஒன்றிணைக்கப்படும் என தேசிய ஷூறாவின் தலைவர் தாரிக் மஹ்மூத் கூட்டத்தின் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல ஸகாத் நிதியத்தினை ஒன்றிணைப்பதற்கான முதல் ஒன்றுகூடல் ஏனைய விடயங்களை ஒன்றிணைப்பதற்கான நம்பிக்கையை வளர்க்கும் விதமாக அமைந்திருந்தது. தேசிய ஷூறாவை தலைமையாக ஏற்று சமூகம் இந்த விடயத்தில் ஒன்றிணைந்தது போல ஏனைய விவகாரங்களிலும் செயற்படத் தொடங்கினால் சமூகம் சீக்கிரத்தில் விடிவு பெறும் என வந்திருந்தவர்களில் பலரும் பேசிக் கொண்டனர். கூட்டு ஸகாத் நிறுவனங்களின் கூட்டு சமூ கத்தையே கூட்டாக இயக்குவதற்கு எமது பிரார்த்தனைகள்.

# நபிகளாரும் நவீன பொருளாதார இலக்குகளும்

பாZதில் பாரூக்

பேரினப் பொருளியல், நுன்பாகப் பொருளியல் என்பன கல்வி வாழ்க்கையில் கேட்டுக் கேட்டு அலுப்பேறிப் போன இரு சொற்கள். பொருளியல் தொடர்பான கற்கைகள் அனைத்தும் இவ்விரு சொற்களை மையப்படுத்தியே சுழல்கின்றன. பேரினப் பொருளியல் பொருளாதாரத்தை மொத்தப் பார்வை கொண்டு அலசுகின்ற அதேவேளை நுன்பாகப் பொருளியல் பொருளாதாரத்தின் சந்து பொந்துகளையெல்லாம் வலம் வருவதற்கான முயற்சிகளையே மேற்கொள்கின்றது.

பொருளியலின் தந்தை என மேற்குலகால் வர்ணிக்கப்படும் அடம் ஸ்மித் வாழ்வின் மூலத்திலிருந்து பொருளியலை அறுத்தெடுத்து தனிக் கலையாக அறிமுகப்படுத்திய நாள் முதல் பொருளியல் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு மேற்குலக அறிஞர்கள் கொடுக்குக் கட்டிக் கொண்டு களமிறங்கினர். விளைவு யாதெனில், பொருளியலுக்கு சம்பந்தமேயில்லாத எத்தனையோ ஆய்வுகள், நேர விரயத்தை தவிர வேறெந்தப் பயனுமில்லாத வாதப்பிரதிவாதங்கள், பொருளாதாரக் கோட்பாடுகள், விதிகள் என்ற பெயரில் மனிதர்களால் புரிந்து கொள்ள முடியாத மாயச் சொற்கள், பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு எவ்வகையிலும் பொருத்தமில்லாத சிக்கல்களாலும் புரியாமைகளாலும் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. பொருளியல் கலை எனும் கட்டிடத்தின் தோற்றம்.

சுருங்கக்கூறின் மனித வாழ்வோடு இரண்டறக் கலந்திருந்த பொருளாதார சிந்தனைகளும் கோட்பாடுகளும் அவற்றின் எளிமையினை இழந்து பொருளாதாரத்தோடு நேரடியாக தொடர்புபடுகின்ற பொது மக்களை விட்டுத் தூர விலகியது.

பொருளாதாரம் . வாழ்வியல் கலைகளின் அடிநாதம். மனித வாழ்வுக்கும் அதற்குமிடையிலான பிணைப்பு சொல்லித் தீர்க்க முடியாது. வாழ்வியற் கலைகள் தத்துவங்களால் நிறைகின்றபோது வாழ்க்கைக்கும் அதற்குமிடையிலான இடைவெளி அதிகரிக்கின்றது. மனித வாழ்வை சீர்படுத்துகின்ற கலைகள் படிக்காதவனாலும் இலகுவாகப் புரிந்து கொள்ளத்தக்கவாறு அமைகின்றபோது தான் அவற்றின் மூலம் முழு மொத்த மனித சமூகமும் பயன்பெறுகின்றது.

மனித வாழ்வோடு தொடர்புபடுகின்ற அத்தனை கலைகளையும் மிக எளிமையாகப் பேசிய ஒரு தலைவராக நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் காண்கின்றேன். அக்கலைகளை தனித் தலைப்பிட்டு மக்களுக்கு கற்பிக்கும் முறைமையை நபி (ஸல்) அவர்கள் ஒருபோதும் கையாண்டதில்லை. தனது வாழ்க்கைப் பயணத்திற்கு எது எப்போது அவசியப்பட்டதோ அவற்றுக்கான வழிகாட்டல்களாகவே அவை அமைந்திருந்தன. சிலபோது அவை தன்னிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான பதில்களாகவும், சிலவேளை சில பிரச்சினைகளுக்கு நபி (ஸல்) அவர்கள் முன்வைத்த தீர்வுகளாவும்,- சில அம்சங்கள் நபி (ஸல்) அவர்கள் வழங்கிய பொதுப் போதனைகளாகவும், பலபோது தனது வாழ்வை



சீர்படுத்துவதற்கு நபி (ஸல்) அவர்கள் கையாண்ட வழிமுறைகளாகவும் முறை வழிகளாகவும் அவை அமையப் பெற்றன.

ஒரே வார்த்தையில் சொல்வதாக இருந்தால் அக்கலைகள் யாவும் நபி (ஸல்) அவர்களது வாழ்வாகவே இருந்தன. மனித வாழ்க்கைக்கு அவசியப்படாத எந்தத் தத்துவத்தையும் அவர் அலட்டிக் கொள்ளவில்லை. அவை பற்றிய கருத்தாடல்களை மேற்கொள்ளவுமில்லை. அவற்றின்பால் மக்களின் கவனத்தை திருப்பி விடுகின்ற நாசகார செயல்களில் ஈடுபடவுமில்லை.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பரந்த பார்வை கொண்ட, சிறந்த தெளிவு கொண்ட, தீட்சண்ய அறிவு கொண்ட ஒரு பூரண மனிதர். அதனால்தான் மானுட வாழ்வுக்குப் பயனளிக்கும் விடயங்களில் மாத்திரம் தனது கவனத்தைக் குவித்திருந்தார். மனித வாழ்வு பூரணம் பெறுவதற்குரிய வழிகாட்டல்களை வழங்குகின்ற பாரிய பணியை முன்னெடுத்தார். எனவேதான் மனித வாழ்வை சீர்படுத்துவதற்கு அவசியமான கலைகள் என நவீன அறிஞர்கள் வர்ணிக்கின்ற சமூக விஞ்ஞானக் கலைகளை மிக எளிமையாகப் பேசிய ஒரு உத்தமத் தலைவராக வரலாற்றில் இன்றும் இடம்பிடித்திருக்கின்றார்.

உளவியல், பொருளியல், சமூகவியல், அரசியல், ஒழுக்கவியல், இசையியல், மொழியியல், புவியியல், நடத்தை, பண்பாடு சார் கல்வி என நீள்கின்ற இக்கலைகள் அனைத்தும் சமூக விஞ்ஞானக் கலைகள் எனும் பட்டியலில் இடம்பிடித்திருக்கின்றன. இவற்றுக்கப்பால் இன்னும் புதுப்புது கலைகள் அப்படியலில் தொடர்ந்தும் உள்வாங்கப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன.

நவீன கல்விக் கொள்கைக்கேற்ப இக்கலைகளில் ஒன்றை தனது மேற்படிப்பிற்காக தெரிவுசெய்த மாணவன் ஒருவன் வாழ்க்கைக்கு எவ்வகையிலும் பயன்தராத அம்சங்களை அலசி அலசி தனது வாழ்வை மாய்க்கின்ற ஒரு துர்ப்பாக்கிய நிலைக்குட்படுகின்றான். நவீன கல்விக் கொள்கையின் சிறப்பம்சங்களில் இதுவும் ஒன்று. கற்பவர்களைத் தட்டிவிடுவதற்காகச் சொல்லவில்லை. யதார்த்தம் அதுதான்.

நவீன கல்விக்கொள்கையினூடாக மேற்சொன்ன ஏதொனுமொரு கலையில் மேற்படிப்பை தொடர்கின்ற போதுதான் நபி (ஸல்) அவர்களது பெறுமதி எமக்குப் புலப்படுகின்றது. பொருளியல் துறையில் எனது மேற்படிப்பை தொடர்கின்ற போது இதனை நான் பலபோது உணர்ந்திருக்கின்றேன். பரீட்சைக் காலங்களில் பல அறிஞர்களை திட்டித் தீர்த்திருக்கின்றேன். பயனற்ற விடயங்களை பாடமாக்கி பல மணி நேரங்களை வீணடித்திருக்கின்றேன்.

பொருளாதாரத்தின் தோற்றமும் வளர்ச்சியும் எனும் பாடத்தைக் கற்பித்த ஒரு விரிவுரையாளர் பொருளியல் இன்று நேற்று உருவான ஒரு கலையல்ல, புத்தர் தனது போதனைகளில் பொருளாதார சிந்தனைகளை பேசியிருக்கின்றார் என்று கூறி புத்தரின் போதனைகளில் ஒன்றை மேற்கோள் காட்டினார். பொருளாதார சிந்தனை தொடர்பாக நபிகளார் பேசியதுபோல் வேறெந்த அறிஞரும் இதுவரைக்கும் பேசியதில்லை.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாநிதி மைக்கல் பிரணாந்து 'அத்த' (உண்மை) வாராந்த பத்திரிகையின் பொறுப்பாசிரியராவார். ஜனநாயகம் மற்றும் சமூக நீதிக்கான ஒன்றியத்தின் தலைவராக உள்ள இவர் தத்துவவியலில் கலாநிதி பட்டம்பெற்றுள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நுண்கலையியல் பீடத்தின் தலைவராக இருந்த இவர் அங்கு சில காலம் விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார். சமூக அரசியல் பொருளாதார துறைகளில் பழுத்த அனுபமுள்ள கலாநிதி மைகல் பிரணாந்து அவர்களை மீள்பார்வை பத்திரிகைக்காக சந்தித்தோம்.

சந்திப்பு: ஹெட்டி ரம்ஸி

# அரசாங்கத்திற்கு தெளிவானதொரு பொருளாதார கொள்கை இல்லை

**கலாநிதி மைக்கல் பிரணாந்து** (அத்த பத்திரிகை - ஆசிரியர்)

- **நல்லாட்சி அரசாங்கத்தின் பயணம் குறித்த உங்களுடைய மனப்பதிவு என்ன?**

நாட்டில் ஏகாதிபத்திய ஆட்சியை ஒழித்து மோசடிமிக்க அரசாங்க முறையையும் மாற்றி ஜனநாயகத்தை ஸ்தாபித்தல் மற்றும் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தி நல்லாட்சியொன்றை நிறுவுதல் என்கின்ற வாக்குறுதிகளை இவ்வரசாங்கம் மக்களுக்கு வழங்கியது. அவற்றை கவனத்தில் கொள்ளும் போது ஓரளவு எமக்கு ஜனநாயகத்திற்குரிய பாதை திறக்கப்பட்டுள்ளது என்பதை ஆரம்பத்திலேயே குறிப்பிட்டாக வேண்டும்.

பெரும்பாலான விடயங்களில் அது எமக்கு புலப்படுகின்றது. ஆனாலும் மக்களுடைய ஒரு சில எதிர்பார்ப்புக்கள் ஒருசில காரணங்களினால் நிறைவேறவில்லை. பொருளாதார ரீதியில் பார்க்கும்போது மக்களுடைய வாழ்வாதாரம் இன்னும் சரியான நிலைக்கு தேறவில்லை.

- **அதற்குரிய காரணங்கள் என்னவென நீங்கள் கருதுகிறீர்கள்?**

ஒருவகையில் கடந்த அரசாங்கம் பெற்ற தேவையற்ற கடன்கள், தேவையற்ற செலவீனங்கள் மற்றும் மோசடிகள் ஒரு காரணமென குறிப்பிடலாம். இரண்டாவது, இன்று முழு உலகமும் முகம்கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடியை குறிப்பிடலாம்.

தற்போதைய இலங்கை அரசாங்கத்திற்கு தெளிவானதொரு பொருளாதார கொள்கை இல்லை என்பது ஒரு பிரச்சினையாகும். 1977 இல் ஜே.ஆர் ஜெயவர்தனவினால் பின்பற்றப்பட்ட லிபரல் பொருளாதார முறைமையின் மூன்றாம் கட்டத்தை செயற்படுத்தவே நாங்கள் முயற்சிக்கின்றோம் என்பதாக பிரதமரும் நிதியமைச்சரும் அண்மையில் குறிப்பிட்டிருந்தார்கள்.

- **தற்பொழுது லிபரல்வாத பொருளாதார முறை எமக்கு பொருந்துகிறதா?**

ஜே.ஆர். ஜயவர்தன 1977 இல் ஆரம்பித்ததே நவலிபரல் பொருளாதாரக் கொள்கையாகும். ரொனால்ட் ரேகன், மார்க்ரட் தச்சர் போன்றோரே இத்தகைய தாராளமய முதலாளித்துவக் கொள்கையை உலகிற்கு அறிமுகப்படுத்தினார்கள். இதன் மூலம் முழு மொத்த பொருளாதாரமும் நிதிக் காரணியொன்றாக அமைந்து விடும் என்றும் முதலீட்டாளர்களுக்கு சுதந்திரமான முறையில் வாய்ப்பளிப்பதன் மூலம் உற்பத்திகள் அதிகரிக்குமென்றும் அவர்கள் எதிர்பாத்தார்கள். ஆனால், அவை நிகழவில்லை.

முதலீட்டாளர்கள் இலாபத்தை பெற்றுக் கொள்ள முடியுமாக உள்ள வர்த்தகங்களைச் செய்தார்களே ஒழிய, உற்பத்திகளை பெருக்கவில்லை. நவலிபரல்வாதத்தின் 5ஆம் கட்டத்திலேயே நாம் உள்ளோம். முதல் கட்டத்தை ஜே.ஆர். முன்னெடுத்தார். இரண்டாம் கட்டத்தை பிரேமதாச முன்னெடுத்தார். மூன்றாம் கட்டத்தை சந்திரிக்காவும் நான்காம் கட்டத்தை மஹிந்த ராஜபக்ஷவும் முன்னெடுத்திருந்தார்கள்.

- **அதனோடு தொடர்புடைய வகையில் கடந்த அரசாங்கத்தையும் தற்போதைய அரசாங்கத்தையும் ஒப்பிட்டுச் சொல்ல முடியுமா?**

மஹிந்த ராஜபக்ஷவும் நவலிபரல் பொருளாதார முறையையே முன்னெடுத்திருந்தார். இயலுமான அளவு கடன் பெற்று, முதலீட்டாளர்களை அழைத்துவந்து நாட்டை நிதிமயமாக்கவே ராஜபக்ஷ எதிர்பார்த்திருந்தார். ஆனால், அவரால் அதைச் செய்ய முடியவில்லை. கிடைத்த முதலீடுகளையும் விரைவாக இலாப மீட்ட முடியுமான வியாபாரங்களில் ஈடுபடுத்தியமையினால் அவற்றின் மூலம் நாட்டில் அபிவிருத்திக்கு பெருமளவு பங்களிப்பு கிடைக்கவில்லை. மத்தள விமான நிலையம், ஹம்பாந்தோட்டை துறைமுகம் போன்ற கட்டுமானங்கள் தேவையற்ற செலவுகள் என்பதை மக்கள் புரிந்துகொண்டுள்ளார்கள். பெருந்தெருக்களை நிர்மாணித்திருப்பது சிறந்த விடயம். அதனால் முதலீட்டாளர்கள் பெருகுவார்கள் என எதிர்பார்திருந்தாலும் அது நிகழவில்லை.

- **நடப்பு அரசாங்கத்தின் பொருளாதார கொள்கையை நீங்கள் எவ்வகையில் நோக்குகிறீர்கள்?**

தற்போதைய உலகம் காலம் கடந்த முறையொன்றாக கருதுகின்ற நவலிபரல் பொருளாதார கொள்கையை இவ்வரசாங்கமும் முன்னெடுத்துச் செல்வதானது இவ்வரசாங்கத்திடமுள்ள பாரிய பிரச்சினையொன்றாகவே நான் கருதுகிறேன். 'சமூக வர்த்தகச் சந்தைப் பொருளாதாரம்' என்பதாக அதற்கவர்கள் புதிய பெயர் ஒன்றையும் சூட்டியுள்ளார்கள். இவர்கள் கூடுதலான முதலீட்டாளர்களை எதிர்பார்த்திருந்தாலும் அது எதிர்பார்த்த அளவில் சாத்தியமாகவில்லை. அதுபோன்றுதான் இவர்கள் கிடைக்கின்ற நிதியை வீடுகளை நிர்மாணிப்பது போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றவே உபயோகப்படுத்துகிறார்களே, ஒழிய நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான உற்பத்தித் திட்டங்களை பெருக்கப் பயன்படுத்துவதில்லை. அது உடனடியாக நிறுத்தப்பட வேண்டியுள்ளது.

- **அவ்வாறென்றால் அதற்குரிய மாற்று திட்டங்கள் ஏதும் உள்ளனவா?**

மாற்றுத் திட்டங்கள் உள்ளன. ஒரு புறத்தில் எமது நாட்டின் வருவாய்கள் அதிகரிக்கப்பட வேண்டியுள்ளன. மறுபுறத்தில் செலவுகளையும் குறைக்க வேண்டும். இறக்குமதிகள் போன்ற செலவுகளை குறைத்துக் கொள்ள முடியுமான துறைகளில் அது ஒழுங்காக முகாமை செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. உதாரணமாக பல்வேறுபட்ட உணவுப் பொருட்களை இங்கு இறக்குமதி செய்வதற்குப் பதிலாக உறுதியானதொரு திட்டத்தின் அடிப்படையில் குறித்த உணவுப்பொருட்களை இந்நாட்டிலேயே ஈடு செய்துகொள்ள முடியும். அப்போது இறக்குமதிக்குரிய செலவுகள் குறைவடையும். அத்தோடு எமக்குக் கிடைக்கின்ற முதலீடுகளை நேரடியாகவே உற்பத்தி துறைகளில் ஈடுபடுத்த முடியும்.

பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு ஒப்பந்தம் (ETCA) குறித்து இந்நாட்களில் கதைத்து வருகிறார்கள். 'சந்தைப் பொருளாதாரத்தை இன்னும் திறந்து விடுவதற்கே அதற்கூடாக அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். ஆனால் அதற்கூடாக எவ்வித பிரயோசனங்களும் ஏற்படபோவதில்லை.

அத்தகையதொரு பொருளாதார கொள்கையை செயற்படுத்த வேண்டுமென்றால் ஏதாவது அடக்கு முறையொன்று அவசியம். ஜே.ஆர். அத்தகைய அடக்குமுறையை முன்னெடுத்திருந்தார். அவர் மக்களை மிகவும் கொடூரமான முறையில் அடக்குமுறைக்கு உட்படுத்தியே அப்பொருளாதாரக் கொள்கையை அமுல்படுத்தினார். பின்னர், மஹிந்த ராஜபக்ஷவும் உலகில் எந்தவொரு இடத்திலும் இல்லாத அமைப்பில் ஏகாதிபத்திய சுயரூபத்தை முன்னிலைப் படுத்தி அக்கொள்கையை அமுல்படுத்தினார்.

ஆனால், தற்போதைய நிலைமை முற்றிலும் வித்தியாசமானது. ஜனநாயகமே மக்களுடைய எதிர்பார்ப்பாக உள்ளது. தற்பொழுது ஜனநாயகத்துக்குரிய வெளியொன்று திறந்துவிடப்பட்டுள்ளது. சட்டத்தின் ஆட்சியொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதனால் தற்பொழுது லிபரல் பொருளாதார முறையொன்றை செயற்படுத்த முடியாதுள்ளது. அதற்கு பிரிதொரு மாற்று திட்டமொன்று அவசியம்.

ஆனாலும் அது தொடர்பில் அரசாங்கத்திற்கு உரிய தேவையொன்று இல்லாமையினையே நாம் காண்கிறோம். அது பாரதூரமானதொரு பிரச்சினையாகும்.

- **தற்போதைய அரசாங்கத்தில் நீங்கள் காணும் இதர பிரச்சினைகள் என்ன?**

ஊழல் மோசடிகளைக் கண்டுபிடித்தல் மற்றும் மோசடிக்காரர்களை தண்டித்தல் என்கின்ற விடயம் போதிய அமைப்பில் இடம்பெறுவதில்லை. இதன் மூலம் அரசாங்கம் அபகீர்த்திக்குள்ளாகின்ற வேளையில் மக்களும் அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து நம்பிக்கையற்றுப் போயுள்ள நிலையொன்றையும் தோற்றுவித்துள்ளது.

அதுபோலவே யுத்தம் முடிவுற்று ஆறு வருடங்கள் உருண்டோடியுள்ள நிலையிலும், தேசிய ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கு எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொண்ட பாடில்லை. வீதிகள், கட்டிடங்களை நிர்மாணித்ததே ஒழிய, வடக்கு கிழக்கு மக்களை அரசியல் மற்றும் சிந்தனா ரீதியாக வெற்றி கொண்டிருந்தாலும் அவர்களை ஆட்சித்துறையோடு இணைத்துக் கொள்வதற்குரிய முறையான திட்டங்கள் ஏதும் உருவாக்கப்படவில்லை.

தற்பொழுது என்றுமில்லாத வகையில் தேசிய நல்லிணக்கம் தொடர்பில் எதிர்பார்ப்பொன்று உருப்பெற்றுள்ளது. அது தொடர்பில் கருமமாற்றுவதற்கு 06 நிறுவனங்களும் அமைச்சுக்களும் காணப்பட்டாலும் அவற்றுக்கிடையில் எவ்வித தொடர்புகளும் இல்லாமல் உள்ளது. ஒவ்வொருவரும் தனக்கு விரும்பியவற்றை செய்கிறார்கள். அரசாங்கம் திறமையானவர்களை பதவிகளில் அமர்த்தவில்லை என்பது ஒரு குறையாகத் தென்படுகிறது.

அமைச்சரவையை நியமித்தது முதல் வெவ்வேறுபட்ட அதிகாரிகளை நியமித்தது வரையில் தகுதியானர்களுக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை என்பது தெளிவாகவே விளங்குகிறது. அதனால் அத்தகைய நிலைமைகளின் கீழ் ஜனநாயகத்தை பாதுகாப்பதிலும் சட்டவாட்சியை பாதுகாப்பதிலும் அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் எமக்கு சந்தேகங்கள் எழுகின்றன. இவ்வரசாங்கம் நல்ல பணிகளை செய்கின்றது.

கடந்த அரசாங்கத்தின் ஒரு சில தவறுகளை சரிப்படுத்தியுள்ளது. ஆனாலும் இவ்வரசாங்கத்திடமிருந்து மக்கள் எதிர்பார்த்த பல விடயங்கள் நிறைவேற்றப்படவில்லை என்பது வெளிப்படையாகவே தென்படுகின்றது.

- **ஒருசில விடயங்களில் [உதாரணமாக:- அரசியலமைப்பு உருவாக்கம், கல்வி மற்றும் அரசியல் முறைமை போன்ற துறைகளில்] அரசாங்கம் சிந்தனா ரீதியான வறுமையில் உழலும் தன்மையொன்றை காணக்கூடியதாக உள்ளது. அது விடயம் தொடர்பில் உங்களுடைய கருத்துக்களைச் சொல்ல முடியுமா?**

நான் அறிந்ததொரு துறை என்றவகையில் கல்வித் துறையை எடுத்துக்கொண்டால் உயர் கல்வி போன்ற துறைகளில் அது தொடர்பில் புரிதலும் திறமையுமுள்ள அமைச்சர் ஒருவரே நியமிக்கப்படவேண்டும். அதுபோன்று கல்வித்துறையில் பொறுப்பு வாய்ந்த பதவிகளிலும் அத்துறையில் திறமைகளை வெளிப்படுத்தியுள்ள அனுபவம் வாய்ந்தவர்களே நியமிக்கப்படவேண்டும். ஆனாலும் அவ்வாறான நிலையொன்றை கல்வி, உயர் கல்வித்துறைகளில் காண முடியாதுள்ளது. கலை, கலாசாரம் போன்ற பிரிவுகளிலும் அது போன்ற உதாரணங்களை குறிப்பிடலாம்.

கலை, கலாச்சாரமென்கின்ற இரண்டையும் ஒரு அமைச்சின் கீழ் கொண்டு வந்து அவ்விடயங்கள் தொடர்பில் திறமையுள்ளவர்களுக்கு அவ்வமைச்சு ஒப்படைக்கப்படவேண்டும். அதுபோன்று ஏனைய விடயங்களோடு தொடர்புடைய சகல நிறுவனங்களையும் ஓரிடத்திற்கு கொண்டுவந்து அவற்றுக்கிடையில் உரிய தொடர்புகளை ஏற்படுத்தி அவற்றுக்கு பொருத்தமான அதிகாரிகளை நியமிக்க வேண்டும்.

- **அவ்வாறு இடம் பெறாமைக்குரிய காரணங்களாக நீங்கள் எவற்றை காண்கிறீர்கள்?**

இரண்டு பிரதான கட்சிகள் ஒன்றிணைந்து அரசாங்கத்தை நிறுவியுள்ளன. தற்பொழுது அக்கட்சிகளுக்கிடையில் சிறிதளவு போராட்டங்களும் [illegible]

(பக்.14)




அபூ ஷாமில்

## முயலாமை வெல்லாது

முயலும் வெல்லும். ஆமையும் வெல்லும். ஆனால் முயலாமை வெல்லாது என்பது ஆமையினதும் முயலினதும் கதை தருகின்ற புதிய நீதி. எமது சமூகத்துக்குப் பொருத்தமான நீதிக் கதை. ஒரு கட்டத்தில் வானம் விழப் போகிறது என்று காட்டையே குழப்பிக் கொண்டோடிய முயலின் வேகம். இன்னொரு கட்டத்தில் உறங்கியிருக்கிறதா நகர்கிறதா என்பதை அறிந்து கொள்ள முடியாத ஆமையின் வேகம். எமது கதையில் வேகமாக ஓடிய முயலும் தூங்குகிறது. சாதுவாய் தவழ்ந்த ஆமையும் தூங்குகிறது. இறுதியில் இரண்டு விதமான முயலாமைகளாலும் சமூகம் விடியாத தூக்கத்தில் ஆழ்ந்து போகிறது.

விடாமுயற்சி தான் வெற்றி தரும் என்பதை உலகக் கல்வி பல ஆதாரங்களுடன் சொல்லித் தருகிறது. ஆனால் நம்மில் பலருக்குத்தான் உலகக்கல்வியே பிடிப்பதில்லையே. மார்க்கத்திலும் விடாமுயற்சி தொடர்பில் சொல்லப்பட்டிருந்தாலும் இது தீனுடைய அம்சத்தினுள் உள்ளடக்கப்படுவதில்லை. அதனால் பலாக்காய் விழும்போதெல்லாம் உலகம் அழியப் போகிறது என்று காட்டைக் குழப்பிவிட்டு, தன்பாட்டில் உறங்கி விடுகின்றன சாதுவான முயல்கள்.

இலங்கையில் முஸ்லிம் விரோத செயற்பாடுகள் தீவிரமடைந்த காலப்பிரிவுகளில் ஹலாலின் சிறப்பு, முஸ்லிம் அல்லாதாருக்கு இஸ்லாம் தொடர்பில் அறிவூட்டுவதன் சிறப்பு, பள்ளிவாசல்கள் பற்றிய தப்பபிப்பிராயங்களை களைவதன் சிறப்பு பற்றியெல்லாம் ஆக்ரோஷமாகப் பேசப்பட்டது. மேடைகள் குலுங்கின. செயற்பாட்டுச் செம்மல்கள் வரிந்து கட்டிக் கொண்டு இயங்கினார்கள். வேகந்த ஜும்ஆப் பள்ளிவாசலில் முஸ்லிமல்லாதார் பள்ளிவாசல் பற்றி அறிந்து கொள்வதற்காக ஒரு பிரிவு தொடங்கப்பட்டது. அமெரிக்க உயர்ஸ்தானிகர் தரிசித்து விட்டுப் போனார். நாட்டின் வேறு பல இடங்களிலும் இதுபோன்ற அந்நியருக்கு அறிவூட்டும் நிலையங்கள் உருவாக்கப்படும் என்ற பிரகடனங்கள் வெளியிடப்பட்டன.

ஆமை போட்டியாக துரத்திக் கொண்டு வரவில்லை. முயல் தூங்கிவிட்டது. இப்பொழுது பள்ளிவாசல்களுக்கு அச்சுறுத்தல்கள் இல்லை. மீண்டும் அச்சுறுத்தல் வராது என்பதற்கான உத்தரவாதமும் இல்லை. ஆனால் பள்ளிவாசல் பற்றியோ இஸ்லாம் பற்றியோ அறிவூட்டுகின்ற முயற்சிகளும் தற்போது நடப்பதாக இல்லை.

அண்மையில் இஸ்லாம் பற்றி அறியும் ஆர்வத்துடன் இரண்டு பஸ் வண்டிகளில் சிங்களவர்களை அழைத்துக் கொண்டு பௌத்த மதகுருமார் சிலர் திஹாரிய பிரதேசத்திலுள்ள ஜும்ஆப் பள்ளிவாசலொன்றுக்கு விஜயம் செய்திருக்கிறார்கள். காலை நேரத்தில் யாராவது இப்படி வந்தால் அவர்களுக்கு யார் இஸ்லாத்தைச் சொல்லிக் கொடுப்பது? ஸுப்ஹுத் தொழுகைக்குப் பின்னர் ளுஹர் தொழுகைக்கான அதான் ஒலிக்கும் வரைக்கும் பெரும்பாலான பள்ளிவாசல்கள் அநாதரவாகவே இருக்கின்றன. முஅத்தினார் தனது பதவிப் பெயருக்கு அப்பாற்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக அந்த நேரத்தில் பள்ளிவாசல் வளாகத்தில் இருந்தால் தான் உண்டு.

இந்த நேரத்தில் பள்ளிவாசலுக்கு யாராவது இஸ்லாம் பற்றித் தெரிந்து கொள்வதற்காக வந்தால் முஅத்தினார் என்ன செய்வார்? அந்நியருக்கு இஸ்லாத்தை விளங்கப்படுத்துவது சில உலமாக்களுக்கே புரியாததாக இருக்கும் நிலையில், மோதினார் பார்த்துக் கொள்வார் என்று பள்ளிவாசலை விட்டு வைப்பது போல இஸ்லாத்தையும் அவரிடத்தில் விட்டு வைக்க முடியுமா?

இது தொடர்பில் சமூகம் ஒரு நிலைப்பாட்டுக்கு வர வேண்டும். அண்மைக்காலங்களில் சமூக ஆர்வலர்கள், உலமாக்கள் செய்த சாதுர்யமான பணிகளினால் இஸ்லாத்தைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் முஸ்லிமல்லாதார் மத்தியில் வளர்ந்திருக்கிறது. ஆயிஷா நாயகியை ஏன் ரஸூலுல்லாஹ் (ஸல்) இளவய தில் திருமணம் செய்து கொண்டார்கள், ஆதம் (அலை) அவர்களை சீர்கெடுக்க ஷைத்தான் எப்படி சுவர்க்கத்தில் நுழைந்தான் என்று எங்களுக்கே விடை தெரியாத கேள்விகளையெல்லாம் அவர்கள் கேட்கிறார்கள்.

ஆர்வத்துடன் இஸ்லாத்தைப் படிக்கவென விரும்பி வருகின்றவர்களுக்கு இஸ்லாத்தை அறிவுபூர்வமாக முன்வைப்பதற்கான ஒழுங்குகள் சமூகப் பரப்புக்குள்ளால் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்குப் பொருத்தமான இடம் பள்ளிவாசல்களைத் தவிர வேறில்லை. இந்த வகையில் பள்ளிவாசல்கள் செய்ய வேண்டிய அறிவுப் பணியை இனியாவது சமூகம் முன்னெடுத்துச் செய்ய வேண்டும்.

இஸ்லாத்தை முன்வைப்பதற்கென அலுவலகம் ஒன்று பள்ளிவாசல்களின் வேலைப்பரப்புக்குள்ளால் நிறுவப்பட வேண்டும். பள்ளிவாசல் இமாமோ, கதீபோ இந்த அலுவலகத்துக்குப் பொறுப்பாக இருக்க முடியும். இதற்குப் பொறுப்பாக நியமிக்கப்படுகின்றவர்களுக்கு, அந்நியருக்கு இஸ்லாத்தை முன்வைப்பது சம்பந்தமான பயிற்சிகளும் அறிவூட்டல்களும் நடத்தப்பட வேண்டும். சமூக விவகாரங்களில் அக்கறையெடுத்துச் செயற்படுகின்ற தேசிய சூறா சபை போன்ற நிறுவனங்கள் இதற்கான தேசியப் பங்களிப்பைச் செய்ய முடியும்.

எமது இருப்பைப் பாதுகாத்துக் கொள்வதற்கான முயற்சிகள் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும். ஏதாவது நடந்தால் பார்த்துக் கொள்வோம் என்று நின்றுவிட்டால், அடுத்த தலைமுறை எங்களை அல்லாஹ்விடம் காட்டிக் கொடுத்து விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இஸ்ரேலில் கடந்த ஏழு மாதங்களில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான 280 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. ஊடகவியலாளர்களைத் தாக்குதல், கைதுசெய்தல், தடுப்புக் காவலில் வைத்தல் என பல்வேறு வகையான வன்முறைச் சம்பவங்கள் இஸ்ரேலியப் படையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## கடந்த ஏழு மாதங்களில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான 280 வன்முறைகள்

கடந்த ஒக்டோபரில் ஜெருசலம் நகரில் ஆரம்பித்த இன்திபாழாவை அடுத்து இத்தகைய தாக்குதல்களை இஸ்ரேலிய இராணுவம் மேற்கொண்டு வருவதாக பலஸ்தீன் பத்திரிகையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

மேற்குக்கரையில் இஸ்ரேல் ஊடகவியலாளர்கள் மீது கடும் கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றனர் என ஆய்வாளரும் புள்ளிவிபரவியல் திணைக்கள அதிகாரியும் முன்னாள் பலஸ்தீன அரசியல் கைதியுமான அப்துந் நாஸர் பர்வானா தெரிவித்துள்ளார். பலஸ்தீன் மக்களுக்கு எதிராக இஸ்ரேல் இழைத்து வரும் குற்றங்கள், நில ஆக்கிரமிப்பு என்பவற்றை மூடி மறைப்பதற்கு ஊடகவியலாளர்களை இஸ்ரேல் தாக்கி வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இஸ்ரேல் கடந்த 5 மாதங்களில் 19 பலஸ்தீன பத்திரிகையாளர்களைக் கைது செய்துள்ளது. அவர்களில் எவரும் இது வரை விடுதலை செய்யப்படவில்லை. எனவே, பலஸ்தீன் பத்திரிகையாளர்களுக்கு பாதுகாப்பு வழங்க சர்வதேச சமூகம் முன்வர வேண்டும் என அவ்வமைப்பு கோரியுள்ளது.

மேற்குக்கரையைச் சேர்ந்த ஊடகவியலாளர்களே அதிகம் கைதுசெய்யப்படுகின்றனர்.

# சர்வதேசப் பார்வை

## சிரியாவின் அலெப்போ நகர் மீது மீண்டும் கடும் தாக்குதல்

சிரிய அரசாங்கத்திற்கும் எதிரணியினருக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொய்வடைந்துள்ள நிலையில், அலெப்போ நகர் மீதான சிரிய அரச படையின் தாக்குதல் தீவிரமடைந்துள்ளது. கொல்லப்படும் சிவிலியன்களின் தொகை அதிகரித்துள்ளது. 250 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதோடு, ஆயிரக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.



போர் நிறுத்த ஒப்பந்தத்தில் அலப்போ உள்ளடங்கவில்லை. கடந்த 10 நாட்களாக அந்நகர் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதலால் பாடசாலைகள், வைத்தியசாலைகள் என்பனவும் அழிக்கப்பட்டுள்ளன. சிரிய படையினரால் அந்நகரம் முற்றுகையிடப்பட்டுள்ளது. இந்நிலையை கவனத்திற் கொண்ட கட்டார் அரசாங்கம் ஐ.நா. பொதுச் சபையை உடனடியாகக் கூட்டுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

சிரிய அரசாங்கத்திற்கு ரஷ்யா ஆதரிவளித்து வருவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று அமெரிக்க ராஜாங்க செயலாளர் ஜோன் கெரி வேண்டுகோள் விடுத்துள்ளார். அலப்போ நகரையும் போர் நிறுத்தத்தில் இணைத்துக்கொள்ள வேண்டும் என்ற இராஜதந்திரிகளின் அழுத்தம் அதிகரித்துள்ளது.

டமஸ்கஸ், லத்தாக்கியா மாகாணங்களை உள்ளடக்கிய போர் நிறுத்த ஒப்பந்தத்தை சிரிய அரசாங்கம் ஏற்கனவே மீறி வரும் நிலையில், தற்போது அலெப்போ நகரம் இலக்கு வைக்கப்பட்டுள்ளது. 49 குழந்தைகள் உட்பட 253 சிவிலியன்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

200 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் கொல்லப்பட்டிருக்கலாம் என சிரியாவுக்கான மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவிக்கின்றது. ரஷ்ய அரசாங்கம் சிரிய அரசாங்கத்தின் மீது எவ்வித அழுத்தமும் பிரயோகிக்கவில்லை. அதனால், போர் நிறுத்தத்தை மீறுவதில் ரஷ்ய நிலைப்பாடு சிரியாவுக்கு ஊக்கமளித்து வருவதாக சர்வதேச அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

2011 ஆம் ஆண்டிலிருந்து சிரியாவில் நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போரில் 450,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர். போரை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் ஜெனீவாவில் இடம்பெற்று வரும் பேச்சுவார்த்தைகள் சிரிய அரசாங்கத்திற்குச் சார்பானது என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. சிரிய எதிரணிகளின் நிலைப்பாட்டை அது உள்வாங்கவில்லை என விமர்சனங்கள் எழுந்துள்ளன.

அலப்போ எதிரணிப் படையினரின் செல்வாக்குப் பிராந்தியமாக உள்ளதனால் சிரிய அரசாங்கம் தொடர்ந்தும் அப்பகுதியின் மீது தாக்குதல் நடத்துகின்றது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் சிரிய அரசாங்கத்திற்கு எதிரான திட்டவட்டமான நிலைப்பாடு எதனையும் இதுவரை வெளிப்படுத்தவில்லை.

## கோலான் குன்றுகளை இஸ்ரேலுடன் இணைக்கும் திட்டத்திற்கு எதிர்ப்பு



சிரியாவுக்குச் சொந்தமான கோலான் குன்றுகளை நிரந்தரமாக இஸ்ரேலின் நிர்வாகத்தின் கீழ் வைத்திருப்பதற்கு பாதுகாப்புச் சபை எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. 1967 யுத்தத்தின் போது இப்பிரதேசத்தை இஸ்ரேல் சிரியாவிடமிருந்து கைப்பற்றியது. 1980 களிலிருந்து கோலான் குன்றுப் பிரதேசத்தில் இஸ்ரேல் தனது நிர்வாகத்தை மேற்கொண்டு வருகின்றது.

தற்போது கோலான் குன்றின் மீது தமக்கு நீடித்த சட்டபூர்வ உரிமை உள்ளது என்று இஸ்ரேல் வாதாடி வருகின்றது. சிரியாவுக்குச் சொந்தமான இப்பிராந்தியத்தில் சிரியர்களும் வாழ்கின்றனர். 1973 யுத்தத்தில் கோலான் குன்றுகளை மீளக் கைப்பற்றுவதற்கு சிரியா முயற்சித்துத் தோல்வி கண்டது. 1974 இல் நடைபெற்ற சமாதான ஒப்பந்தத்தின்படி கோலான் குன்றுகள் ஐ.நா.வின் கண்காணிப்பின் கீழ் வந்தது. ஆயினும் 1951 இல் இஸ்ரேல் கோலான் குன்றுகளை சட்டவிரோதமாக தன்னுடன் இணைத்துக் கொண்டது. அங்கு 30 யூதக் குடியேற்றத் திட்டங்களை நடைமுறைப் படுத்தி, 25000 யூதர்களைக் குடியேற்றியது. சிரியாவின் துரூஸ் இனத்தவர்கள் 20,000 பேர் இப்பகுதியில் வாழ்கின்றனர்.

சிரியாவின் தலைநகர் டமஸ்கஸிலிருந்து வடக்குப் புறம் 60 கி.மீ. தொலைவில் கோலான் குன்றுகள் அமைந்துள்ளன. அப்பிராந்தியத்திலிருந்து லெபனான், சிரியா, ஜோர்தான் ஆகிய நாடுளையும் நகரங்களையும் தெளிவாகப் பார்க்கலாம். இந்த வகையில் மிகுந்த கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிராந்தியமாக கோலான் குன்றுகள் காணப்படுகின்றன.

## பாகிஸ்தானில் மத நிந்தனைச் சட்டத்தின் கீழ் 5 பேர் விசாரணை




சீக்கிய மதத்தவரின் வழிபாட்டு முறையை நிந்தனை செய்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஐந்து பாகிஸ்தானிய முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். பஞ்சாப் மாநிலத்தின் சிச்சவட்னி நகரிலேயே நிந்தனைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மஹிந்தர் பால்சிங் எனப்படும் சீக்கிய இனத்தவர் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கை அடுத்து ஐந்து முஸ்லிம்கள் கைதாகினர். பாகிஸ்தானில் மத நிந்தனைச் சட்டம் அனைவருக்கும் பொதுவானது. ஏற்கனவே முஸ்லிமல்லாத சிலர் இஸ்லாமியப் போதனையை நிந்தனை செய்த குற்றத்திற்காகத் தண்டனை பெற்றுள்ளனர்.

மத நிந்தனைக்கான உச்சகட்டத் தண்டனை மரண தண்டனையாகும். தற்போதைய விசாரணைகள் சந்தேக நபர்களை குற்றவாளிகள் என ஊர்ஜிதம் செய்யும் நிலையில், அவர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படும்.

## எகிப்தில் நுழைவதற்கு கட்டார் ராஜதந்திரிகளுக்கு அனுமதி மறுப்பு

கட்டாரைச் சேர்ந்த நான்கு பெண் ராஜதந்திரிகளுக்கு கெய்ரோ சர்வதேச விமான நிலையத்தில் எகிப்து செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. பஹ்ரைனிலிருந்து கெய்ரோ விமான நிலையத்திற்கு வந்த இந்த ராஜதந்திரிகளுக்கு விமான நிலையத்தில் விசா மறுக்கப்பட்டதோடு, திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

எகிப்தின் வெளிநாட்டு விவகார அலுவலகத்தின் ஆலோசனையின் படியே இவர்களுக்கான வீசா மறுக்கப்பட்டதாகவும் திருப்பி அனுப்பப்பட்டதாகவும் விமான நிலைய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். எகிப்தில் ஜனாதிபதி முர்ஸி பதவி கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது. முர்ஸி பதவி கவிழ்க்கப்பட்டமை ஒரு இராணுவ சதிப்புரட்சி எனவும்சட்டவிரோதமானது எனவும் கட்டார் அரசாங்கம் கருதுகின்றது.

இதேவேளை, சகோதரத்துவ இயக்கத்திற்கு கட்டார் அரசாங்கம் ஆதரவளிப்பதாக எகிப்திய அரசாங்கம் கருதுகின்றது.

## அபூ குதைரை தீ மூட்டி எரித்தவர்களுக்கு ஆயுள் சிறை



2012 இல் மேற்குக்கரையைச் சேர்ந்த 16 வயதான முஹம்மத் அபூ குதைர் எனப்படும் பலஸ்தீன இளைஞனை கடத்திச் சென்று சித்திரவதை செய்து, உயிரோடு எரித்த இஸ்ரேலியப் பிரஜையான யூஸெப் பின் டேவிட் என்பவனுக்கு இஸ்ரேலிய நீதிமன்றம் ஆயுள் சிறைத் தண்டனையை விதித்துள்ளது.

அபூ குதைரின் படுகொலை அப்போது மிகப் பரபரப்பாகப் பேசப்பட்டது. அபூ குதைர் சார்பாக நீதிமன்றத்தில் ஆஜரான வழக்கறிஞர்கள் இக்கொலைக்கு உறுதுணையாக இருந்த ஏனைய இரண்டு பேருக்கு ஏற்கனவே சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளதை உறுதி செய்தனர்.

மூன்று இஸ்ரேலியர்கள் ஹமாஸினால் கொல்லப்பட்டமைக்கு பழி தீர்க்கும் முகமாகவே அபூ குதைரை கடத்திக் கொன்றதாக டேவிட் நீதிமன்றத்தில் வாக்குமூலமளித்தான். அபூ குதைரின் உறவினர்களிடம் நீதிமன்ற வளாகத்தில் மன்னிப்புக் கோரிய அவன், தான் செய்தது சரியானது எனவும் வாதிட்டான்.

இஸ்ரேலிய நீதிமன்றம் பலஸ்தீனர்களுக்கு நீதி வழங்காது என்ற நம்பிக்கையீனம் நீடிக்கும் நிலையில், நீதிமன்றம் இத்தீர்ப்பை வெளியிட்டுள்ளது. ஜெருசலத்திலுள்ள அல் ஜஸீரா செய்தியாளர் இது குறித்துக் கருத்து வெளியிடுகையில், டேவிடுக்கு இன்னும் மேல் முறையீடு செய்வதற்கான சந்தர்ப்பம் இருப்பதனால் பலஸ்தீனர்களுக்கு நீதி கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபியா: நல்லிணக்க அரசின் எதிர்காலம்

றவூப் ஸெய்ன்

2014 ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து தலைநகரை ஒரு இராணுவக் கூட்டணி கைப்பற்றியதைத் தொடர்ந்து இரு அரசாங்கங்கள் லிபியாவில் உருவாக்கப்பட்டன. சர்வதேச நாடுகள் அங்கீகரித்த பாராளுமன்றத்தையும் அரசாங்கத்தையும் நாட்டின் கிழக்குப் பகுதிக்கு அக்கூட்டணி விரட்டியடித்தது. 2015 டிசம்பரிலிருந்து தற்போது ஒரு மூன்றாவது அரசாங்கம் தேசிய இணக்க அரசாங்கம் என்ற பெயரில் உருவாகியுள்ளது.

நான்கு தசாப்தகால கடாபியின் ஆட்சிக்குப் பின்னர் லிபியாவின் அரசியல் மிகுந்த கொந்தளிப்பை எதிர்கொண்டது. அரச இராணுவத்திற்கு அப்பால் 1700 இராணுவக் குழுக்களும் சிறு சிறு ஆயுதக் கும்பல்களும் அந்நாட்டில் உள்ளதாக ஆய்வொன்று கூறுகிறது. அவர்கள் தமக்குள் மோதி வந்தனர். கடந்த நான்கு ஆண்டுகள் லிபியா ஆயுத மோதல்களால் பெரும் மனித இழப்பையும் சொத்திழப்பையும் சந்தித்தது. அதனைத் தாண்டி, நாட்டின் அரசியல் ஸ்திரப்பாடு முற்றாக சீர் குலைந்தது.

2011 சிவில் யுத்தத்தைத் தொடர்ந்து லிபியாவின் கோத்திரங்கள் மற்றும் குலக் குழுக்களுக்கிடை யிலான மோதல் தீவிரமடைந்தது. பெரும்பாலான கோத்திரங்கள் கடாபியை பதவி கவிழ்ப்பதில் ஒன்றுபட்டிருந்தன. ஆயினும், சிவில் யுத்தத்தின் முடிவில் அவை மீளவும் மோதிக் கொள்ளும் நிலை உருவானது.

போருக்குப் பிந்திய லிபியாவில் ஜனநாயக பூர்வமான, ஸ்திரமான அரசாங்கமொன்றை ஸ்தாபிப்பது சவால் நிறைந்ததாகவே இருந்தது. நவீன லிபியாவின் அரசியல் வரலாற்றில் ஜனநாயக அரசியல் நிறுவனங்கள் உருவாக்கப்படவில்லை. இன்னொரு புறம் பழைமை வாதத்தில் வேரூன்றியுள்ள குலக் கோத்திர முறை; ஜனநாயக அனுபவங்கள் அற்றவை. அனைவரையும் அரசியல் கருத்தொருமைப்பாட்டிற்குக் கொண்டு வருவது மிகுந்த நடைமுறைச் சிக்கலைக் கொண்டது. இதே பிரச்சினை ஆப்கானிஸ்தானுக்கும் உள்ளது.

கடாபி தனது அடக்குமுறை மூலம் அந்நாட்டின் அனைத்துக் கோத்திரங்களையும் அடக்கி ஆண்டு வந்தார். ஆனால், போருக்குப் பின்னர் லிபியாவின் உண்மையான வேறுபாடுகள் வெளியே வரத் தொடங்கியது. கோத்திரங்களுக்கு இடையிலான முரண்பாடுகளைத் தூண்டுவதிலும் மோதல்களைத் தீவிரப்படுத்துவதிலும் மேற்கு நாடுகள் -குறிப்பாக வொஷிங்டன் அதிக பிரயத்தனம் எடுத்தது.

6 மில்லியன் மக்களைக் கொண்டுள்ள லிபியா, சர்வதேச தரம் வாய்ந்த பெற்றோலிய வளம் கொண்ட நாடாகும். தமக்குச் சார்பான அதிகார பீடமொன்றை உருவாக்கிக் கொள்வதற்கு உள்ளூர் மோதல்கள் ஊக்குவிக்கப்பட்டன. கடாபியின் சர்வதிகார ஆட்சியினது தாக்கத்தை இப்போது அந்நாடு உணர்கின்றது.

பிராந்தியத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் லிபியாவின் அரசியலை நிச்சயம் பாதிக்கும் என்பதில் சந்தேகமில்லை. குறிப்பாக எகிப்திலும் தூனிசியாவிலும் நடைபெறும் மாற்றங்கள் லிபியாவின் அரசியலை பாதிக்கலாம் என்று அவதானிகள் நம்புகின்றனர். ஆயினும், எகிப்து தூனிசியாவுடன் ஒப்பிடும்போது லிபியாவின் அரசியல் களம் சற்று வேறுபட்டதாகவே உள்ளது.


2015 ஜூன் 10 ஆம் திகதி ஐ.நா.வும் உலக வல்லரசுகளும் லிபிய நெருக்கடிக்கு அதிகாரத்தைப் பகிர்வதே தீர்வு என்று வலியுறுத்தியது. அதன் மூலம் நான்காண்டு கால சிவில் யுத்தம் முடிவுக்கு வந்தது. ஆனால், அரசியல் குழப்பம் இன்னும் முழுமையாக ஓயவில்லை.

பேர்லினில் ஒன்றுகூடிய ஐ.நா. ராஜதந்திரிகளும் உலக வல்லரசுப் பிரதிநிதிகளும் ஒன்றிணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில், லிபியாவின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நிலையான தீர்வு அதிகாரப் பகிர்வே என்று வலியுறுத்தியது. இது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்த அனைத்துத் தரப்பும் முன்வர வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தது.

முன்னாள் லிபிய பிரதமர் அப்துல்லாஹ் தின்னி, 2015 ஜூலை 01 இல் நாட்டின் இஸ்லா மிய சக்திகளோடு அதிகாரப் பகிர்வு குறித்து ஒப்பந்தமொன்றைச் செய்வதற்கு தான் தயாராக உள்ளேன் என்று தெரிவித்தார். மோல்ட்டாவுக்கான விஜயத்தின்போது, ''லிபியாவின் மென்மையான, புத்திசாலித் தனமான மக்கள் நாட்டின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றையே விரும்பு கின்றனர்'' எனக் கூறியிருந்தார்.



பல மாதங்கள் இழுபறி நிலையிலும் குழப் பங்களிலும் ஆழ்ந்திருந்த அந்நாட்டில் லிபியா வுக்கான ஐ.நா.வின் சிறப்புத் தூதுவர் பேர்னா டினோ லியோன், அடுத்த செப்டம்பர் (2015) அளவில் லிபியாவில் இறுதி



உடன்பாட்டை எட்ட முடியும் எனவும், அதன் மூலம் தேசிய நல்லிணக்க அரசை உருவாக்க முடியும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். 2015 ஒக்டோபர் 09 இல் புதிய நல்லிணக்க அரசாங்கத்திற்கான பிரேரணையை லிபியாவுக்கான ஐ.நா. தூதுவர் முன்மொழிந்தார். அரசியல் கொதிநிலையையும் மோதலையும் அதன் மூலம் முடிவுக்குக் கொண்டு வரலாம் என முன்மொழியப்பட்டது. அதன்படி திரிப்போலி பாராளுமன்ற அங்கத்தவர் பாயிஸ் ஸிராஜ் பிரதமராக நியமிக்கப்படுவார். 3 உதவிப் பிரதமர்கள், 6 அமைச்சர்கள் உள்ளிட்ட ஒரு ஜனாதிபதி சபை உருவாகும் (Presidential Council) என அப்பிரேரணை முன்வைக்கப்பட்டது.

எனினும், 2015 ஒக்டோபர் 19 இல் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட லிபியப் பாராளுமன்றம் ஐ.நா.வின் பிரேரணையை நிராகரித்தது. அதற்கான காரணம் தெளிவாக முன்வைக்கப்படவில்லை. இஸ்லாமியவாதிகளை நல்லிணக்க அரசு உள்ளடக்குவதே அதற்கான காரணம் என்று சிலர் கூறுகின்றனர்.

2015 டிசம்பர் 06 இல் லிபியாவில் இயங்கி வந்த இரு அரசாங்கங்களும் தாம் ஒரு பொது உடன்பாட்டை எட்டியுள்ளதாக அறிவித்தனர். கடாபிக்குப் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள அதிகார நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வருவதே தமது நோக்கம் என அவர்கள் அறிவித்தனர். ஐ.நா.வின் திட்டத்தை இரு பாராளுமன்றங்களும் அங்கீகரிக்க வேண்டியிருந்தது. ஐ.நா. இரு அரசாங்கங்களுக்கும் இடையில் மத்தியஸ்தம் வகிக்க முன்வந்தது.

2016 மார்ச் 30 இல் ஐ.நா. மத்தியஸ்தம் வகித்த லிபியாவின் ஜனாதிபதிக் கவுன்சில் திரிப்போலிக்குச் சென்றது. தேசிய நல்லிணக்க அரசை உறுதி செய்வதே அதன் நோக்கமாக இருந்தது. நல்லிணக்க அரசின் தலைநகராக திரிப்போலியை மாற்றுவதற்கு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது. கடும் பாதுகாப்புக்கு மத்தியில் தூனிசியாவிலிருந்து திரிப்போலியில் உள்ள அபூ ஸிதா கடற்படைத் தளத்திற்கு புதிய அரசாங்கத்தின் பிரதமர் வருகை தந்தார்.

திரிப்போலி நகரை ஏற்கனவே கட்டுப்படுத்தி வந்த அரசாங்கம் ஐ.நா. மத்தியஸ்தத்துடனான நல்லிணக்க அரசாங்கத்தின் தலைவர் தலைநகரை விட்டு வெளியேற வேண்டும் என வேண்டினார். தொலைக்காட்சியில் ஒளிபரப்பான செய்தியில் திரிப்போலி அரசாங்கத்தின் தலைவர் (இந்த அரசாங்கம் சர்வதேச சமூகத்தால் அங்கீகரிக்கப்பட வில்லை) பாயிஸ் சிராஜின் நல்லிணக்க அரசாங்கம் செல்லுபடியற்றது என பிரகடனம் செய்தார்.

இவ்வேளை நல்லிணக்க அரசாங்கத்திற்கு உடனடியாக அதிகாரத்தை மாற்றுமாறு ஏற்கனவே எதிரும் புதிருமாக செயற்பட்டு வந்த அந்நாட்டின் இரு அரசாங்கங்களுக்கும் கோரிக்கை விடுக்கப் பட்டது. ஒரு அரசாங்கம் திரிப்போலியை தள மாகக் கொண்டும், மற்றைய அரசாங்கம் கிழக்குப் பிராந்தியத்தைத் தளமாகக் கொண்டும் செயல் பட்டு வந்தன.

18 அங்கத்தவர்களைக் கொண்டுள்ள நல்லிணக்க அரசாங்கம், கிழக்கு லிபிய அரசாங்கத்தின் அங்கீகாரத்தை இதுவரைப் பெறவில்லை. ஐ.நா. பேச்சுவார்த்தையின்படி ஏற்கனவே உள்ள இரு அரசாங்கங்களினதும் அங்கீகாரத்தை அது பெற வேண்டும் என்பது முக்கியமானது. தேசிய விடுதலை அரசாங்கம் என்ற பெயரில் திரிப்போலி யைத் தளமாகக் கொண்டு இயங்கி வந்த அரசாங்கம், 2016 ஏப்ரல் 05 இல் தாம் ராஜினாமா செய்த தாக அறிவித்தது.

திரிப்போலியில் நல்லிணக்க அரசாங்கத்தை உருவாக்குவதற்கான ஏற்பாடுகள் நடந்து ஒரு வாரத்தின் பின் இந்த அறிவித்தல் வெளியானது. தமது பணி முடிந்து விட்டது எனவும் திரிப்போலி அரசு அறிவித்துள்ளது.

''நாம் நாட்டின் நலன்களை முன்னுரிமைப்படுத்துகின்றோம். மக்கள் நலனை விட வேறெ துவும் எங்களுக்கு முக்கியமானதல்ல. இரத்தம் சிந்துதல் நிறுத்தப்பட வேண்டும். பிளவுகள், பிரிவுகளிலிருந்து நாடு பாதுகாக்கப்பட வேண் டும்'' என அறிவித்தது.

தற்போது லிபியாவில் ஒரு தேசிய நல்லிணக்க அரசு உதயமாகியுள்ளது. துப்றூக் பிராந்தியத்தில் இயங்கி வந்த மற்றொரு எதிர் அரசாங்கமும் நல்லிணக்க அரசாங்கத்திற்கு பச்சை கொடி காட்டியுள்ளது. எவ்வாறாயினும், எந்த வேளையிலும் எதிரணிகளும் பரா ஆயுதக் குழுக்களும் நல்லிணக்க அரசாங்கத்திற்கு எதிராகத் திரும்பலாம் என்று அஞ்சப்படுகின்றது. நல்லிணக்க அரசாங் கத்தினூடாக வலுவான அரசியல் நிறுவனங்களை ஸ்தாபிப்பதும் ஜனநாயக கலாசாரமொன்றை உருவாக்குவதும் அந்நாட்டுக்கு முன்னாலுள்ள மிகப் பெரும் சவால்களாகும்.

ஐ.நா. ஒப்பந்தத்தின்படி புதிய ஜனாதிபதிக் கவுன்சில் நல்லிணக்க அரசாங்கத்தை வழிநடாத்திச் செல்லும். அதேவேளை, தேசிய காங்கிரஸ் அங் கத்தவர்களை உள்ளடக்கிய அரச சபை அதிகாரத் தில் அடுத்த இடத்தில் இருக்கும். அடுத்த 6 மாதங்களுக்குள் பொதுத் தேர்தல் நடைபெற வுள்ளது. அதன் பின்னரே லிபியாவின் உண்மையான அரசியல் எதிர்காலம் குறித்து நாம் புரிந்து கொள்ளலாம்.

எதிர் எதிர் அணிகள் மோதலைக் கைவிட்டு, இணக்கப்பாட்டுக்கு வந்தால் ஒழிய லிபியாவின் அரசியல் எதிர்காலத்தை காப்பாற்றுவது மிகுந்த கடினமாகிவிடும்.

## பல்கேரியாவில் நிகாபுக்குத் தடை



கடந்த தசாப்தத்தில் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வேகமாகப் பரவி வந்த இஸ்லாமியப் பீதியும் முஸ்லிம்கள் மீதான குரோதங்களும் கிழக்கைரோப்பிய நாடுகளை நோக்கித் திரும்பியுள்ளன. கிழக்கு ஐரோப்பாவிலுள்ள போல்கன் பல்வேறு இனக் குழுமங்களையும் சமயங்களையும் உள்ள டக்கிய பிராந்தியமாகும்.

வரலாற்று ரீதியில் ஒரு காலகட்டத்தில் உஸ்மானியப் பேரரசின் கீழிருந்த இப்பிராந்தியத்தில் இஸ்லாத்திற்கு எதிரான காழ்ப்புணர்வு தலைநீட்டத் தொடங்கியுள்ளது. சமீபத்தில் போல்கன் நாடுகளுள் ஒன்றான பல்கேரியாவில் முகத்தை முற்றாக மூடும் முகத்திரை (நிகாப்) அணிவதைத் தடைசெய்யும் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

முதற் கட்டமாக மத்திய பல்கேரிய நகரமான பஸார்ஜிக்கில் பொது இடங்களில் நிகாப் அணிவது முற்றாகத் தடுக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சியாளர்களின் அபிப்பிராயத்தில் பாதுகாப்பை நோக்காகக் கொண்டும், பல்வேறு சமூகங்களுக்கிடையில் நிலவும் பதட்டத்தைத் தணிக்கவுமே இந்த வழக்கையை எடுத்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

கிழக்கு ஐரோப்பாவிலுள்ள போல்கன் பிராந்தியத்தில் சேர்பியா, மொன்டநீக்ரோ, ஸ்லோவேனியா, பல்கேரியா, அல்பேனியா, பொஸ்னியா, ஹெஸகோவினா போன்ற நாடுகள் உள்ளன. இதில் பொஸ்னியாவும் அல்பேனி யாவும் பெரும்பான்மை முஸ்லிம் நாடுகளாகும். பல்கேரியாவின் மொத்த சனத் தொகை 7.2 மில்லி யனாகும். அதில் 12% (864,000) முஸ்லிம்கள் வாழ்கின்றனர். இப்பிராந்தியத்தில் சுமார் 800 ஆண்டு காலமாக முஸ்லிம்கள் வாழ்கின்றனர்.

தற்போது பல்கேரியாவில் நிகாபை அரசு தடை செய்திருப்பது ஏனைய நாடுகளுக்கும் ஒரு ஊக்க மாக இருக்கும் எனவும் ஏனைய நாடுகளிலும் நிகாப் எதிர்காலத்தில் தடை செய்யப்படலாம் எனவும் அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். தற்போது தடைசெய்யப்பட்டுள்ள நகரத்தில் மொத்தமாக 70,000 மக்கள் வாழ்கின்றனர். ரோமா இன முஸ்லிம் சிறுபான்மையினர் பெரும்பான்மையும் நிகாப் அணியும் வழக்கம் கொண்டுள்ளனர். இந்நிலையிலேயே அங்கு நிகாப் தடைசெய்யப்பட்டுள்ளது.

இன ரீதியில் இம்முஸ்லிம்கள் துருக்கிய பூர்வீகத்தைக் கொண்டவர்கள். நகர மேயர் போபோவ் ''பஸாட்ஸிக் நகரம் புர்கா நகரம் என நான் அறிகிறேன். ஆனால், அது புர்காக்களின் நகரம் அல்ல என நான் உரத்துச் சொல்வேன். மக்கள் பொறுப்புள்ளவர்களாக வாழ வேண்டும்'' எனத் தெரிவித்துள்ளார். சட்டத்தை மீறுகின்றவர்களுக்கு தண்டனை வழங்கப்படும் எனவும், ஆள் அடையாளத்திற்கு நிகாப் பெரும் தடையாக உள்ளதென்றும் அவர் தெரிவித்தார்.

ரோமா இன சிறுபான்மை முஸ்லிம் பெண்கள் சமீப காலமாகவே நிகாபை அணிந்து வருகின்றனர். ஐரோப்பாவிற்குள் அகதிகள் ஊடுருவுவதைத் தடுக்கவும் பயங்கரவாதிகளின் நடமாட்டத்தை இனங்காணவும் நிகாப் ஒரு சவாலாக உள்ள தென்று பல்கேரிய அரசாங்கம் கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதைந்து செல்லும் குடும்பக் கட்டுக்கோப்பை சீரமைப்பதன் அவசியம்

மிப்றாஷ் முஸ்தபா (நளீமி)

குடும்பம்... அது மனைவி, குழந்தைகள், பெற்றோர்கள், சகோதரர்கள் என அனைவருக்கும் மத்தியில் ஈடற்ற அன்பும் கலப்பற்ற பாசமும் ஒட்டி உறவாடும் ஓர் அற்புத உலகம். அல்லாஹ் தனது திருமறையிலே பின்வருமாறு மனிதர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறான்:

''மனிதர்களே! நீங்கள் உங்கள் இறைவனுக்குப் பயந்து (நடந்து) கொள்ளுங்கள். அவன் உங்கள் எல்லோரையும் ஒரே ஆன்மாவில் இருந்து உற்பத்தி செய்தான். (ஆரம்பத்தில் அந்த ஒருவரைப் படைத்து) அவரிலிருந்து அவருடைய மனைவியைப் படைத்தான். பின்பு அவ்விருவரிலிருந்து ஆண்கள் பெண்கள் என பலரை (இப்பூமியில்) பரப்பினான்.'' (அன்னிஸா:1)

அந்தவகையில் மனித இனத்தின் பெருக்கம் ஆணிலிருந்து தொடங்கி, அது குடும்பமாக மாறி, அங்கிருந்து சமூகம் தொடங்குவதாக மேலுள்ள வசனம் சுட்டிக் காட்டுகின்றது. உண்மையிலேயே குடும்பம் என்பது மனித சமூக இயக்கத்தின் அடிப்படையாகவும் பிரபஞ்ச நியதியாகவும் திகழ்கிறது. இதனால்தான் அல்குர்ஆன் ஸுன்னா போன்ற அடிப்படை மூலாதாரங்கள் ஏனைய விடயங்களைப் பேசாத அளவுக்கு குடும்ப ஒழுங்கு பற்றி அடிப்படை முதல் கிளைச் சட்டங்கள் வரை விரிவாகப் பேசியிருக்கின்றன.

இன்று துரதிஷ்டவசமாக குடும்பக் கட்டுக்கோப்பைச் சிதைத்துச் சின்னாபின்னமாக்கும் சிந்தனைகள் தோற்றம் பெற்றதன் விளைவாக விவாகரத்துக்களும், பாலியல் குற்றங்களும் சிறுவர் துஷ்பிரயோகங்களும் சமூகத்தில் புரையோடிப் போயிருக்கின்றன. இதனால் மனித சமூகம் தமது விழுமியங்களை இழந்து, நிம்மதியைத் தொலைத்து ஒரு விடிவை எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றது. இஸ்லாம் காட்டித் தந்துள்ள குடும்ப வாழ்வே மனித சமூகம் இழந்து விட்ட விழுமியங்களையும் தொலைத்து விட்ட நிம்மதியையும் பெற்றுக் கொள்வதற்கான ஒரே வழி என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை.

### குடும்பம் - ஓர் அறிமுகம்

உஸ்ரா என்பது அரபு மொழியில் குடும்பத்தைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் நவீன காலச் சொல்லாகும். உஸ்ரா என்ற சொல்லுக்கான கருத்தை முஃஜம் அல் வஸீத் என்ற அறபு அகராதி இவ்வாறு குறிப்பிடுகிறது. ''உஸ்ரா என்பது ஒருவனுடைய குல கோத்திரத்தினர் மற்றும் அவனைச் சூழ வாழ்வோரைக் குறிக்கும்''. உஸ்ரா என்ற பதம் அஸ்ர் என்ற அடியில் இருந்து பிறக்கின்றது. அஸ்ர் என்றால் பலம் எனப் பொருள்படும். ஒருவன் தனது குல கோத்திரத்தாரைக் கொண்டு பலம் பெறுவதால் உஸ்ரா என்ற சொல் குடும்பத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது.

ஒக்ஸ்போர்ட் ஆங்கில-தமிழ் அகராதி (OXFORD) குடும்பம் என்ற பதத்தை பின்வருமாறு வரைவிலக் கணப்படுத்துகின்றது. ''ஒருவரோடு ஒருவர் உறவுடைய ஒரு குழு.அதாவது குடும்பம் என்ற சொல் சில சமயங்களில் பெற்றோர் மற்றும் குழந்தைகளைக் குறிப்பதற்காகவும்; (Nuclear Family), சில வேளைகளில் பெற்றோரின் பெற்றோர், பெற்றோரின் உடன்பிறப்புக்கள் போன்ற ஏனைய உறவினர்களைக் குறிப்பதற்காகவும் (Extended Family) பயன்படுத்தப்படுகின்றது.

குடும்பம் பற்றிய வரைவிலக்கணங்கள் அகராதிகளில் மேற்படி அமைந்தாலும் குடும்பம் தொடர்பாக சமூகவியலாளர்கள் வரலாறு நெடுகிலும் பல்வேறு கருத்துக்களை முன்வைத்திருக்கின்றனர். இவை பெரும்பாலும் சடவாதக் கண்ணோட்டத்திலேயே நோக்கப்பட்டிருக்கின்றன. இவர்களது கருத்துக்களில் இருந்து குடும்பம் தொடர்பாக பின்வரும் வரைவிலக்கணத்தினை சுருக்கமாக முன்வைக்கலாம்.

''குடும்பம் என்பது ஓர் ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையில் இடம்பெறும் திருமணத்தின் மூலம் உருவாக்கப்படும் ஒரு சமூக நிறுவனம்.அது சமூகத்தினை சீரான இயக்கத்தில் கொண்டு செல்வதில் பெருமளவு பங்களிப்புச் செய்கின்றது. ஒரு சமூகத்தின் தனித்துவமும், இலக்குகளும் இந்த நிறுவனத்தின் மூலமே பாதுகாக்கப்படும்''.

குடும்பம் தொடர்பான இஸ்லாமிய நிலைப்பாடு மேலுள்ள கருத்துக்களை விட வித்தியாசமானது. இஸ்லாம் சிறந்த சமூக உருவாக்கத்தை இலட்சியமாகக் கொண்ட மார்க்கம் என்ற வகையில் தனி மனித உருவாக்கத்தில் கூடிய கரிசனை செலுத்துகின்றது. மனிதன் பலவீனமான அமைப்பில் படைக்கப்பட்டுள்ளதால் அவனால் இந்த உலகில் தனித்து நின்று சாதிப்பது சிரம சாத்தியமானது.எனவேதான் இஸ்லாம் குடும்பமாக சேர்ந்து வாழுமாறு மனிதர்களை ஆர்வமூட்டுகின்றது.

குடும்பம் என்பதற்கு இஸ்லாம் திட்டவட்டமான வரையறைகளை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. அதாவது குடும்பமானது பின்வரும் 3 வகையான அமைப்பிலேயேஅமைய வேண்டும் என்றும், இது அல்லாத வேறு எந்த விதமான நிலையிலும் மனித உறவுகள் குடும்பமாக உருவாவதை இஸ்லாம் அங்கீகரிக்கவில்லை.



இன்று காதி நீதிமன்றங்களுக்கு வருகின்ற அதிகமான வழக்குகள் சிறுசிறு பிரச்சினைகளை மையப்படுத்தியே அமைந்திருக்கின்றன. இவ்வாறான குடும்ப நிறுவனங்களின் வீழ்ச்சிக்குப் பிரதான காரணம் ஒரு கணவன் எவ்வாறு இயங்க வேண்டும், ஒரு மனைவி எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் போன்ற அடிப்படை அறிவு கூட இவர்களிடையே காணப்படாமைதான்.

1. இரத்தக் கலப்பின் மூலம் ஏற்படும் உறவு
2. திருமணத் தொடர்பின் மூலம் ஏற்படும் உறவு
3. பால்குடியின் மூலம் ஏற்படும் ஏற்படும் உறவு

அந்தவகையில் இஸ்லாத்தின் பார்வையில் குடும்பம் என்பது, இஸ்லாமிய அடிப்படையில் அமைந்த திருமணத்தின் மூலம் உருவாக்கப்படும் ஒரு சமூக நிறுவனம். அது இஸ்லாமிய சமூகத்தின் சீரான இயக்கத்திற்கு மிகப்பிரதானமாக தனிநபர்களை இஸ்லாமிய அடிப்படையில் பயிற்றுவிப்பதன் மூலம் பங்களிப்புச் செய்யும் ஒரு மூல அலகாகத் தொழிற்படும்.

### இஸ்லாத்தின் பார்வையில் குடும்ப வாழ்வின் முக்கியத்துவம்.

இஸ்லாம் ஓர் இயற்கையான, மனித உணர்வுகளுக்கு மதிப்பளிக்கின்ற மார்க்கம் என்றபடியால், அது மனித இன விருத்தியில் இயற்கை வரம்பை மீறாமல் செயற்படும் நிறுவனமான குடும்பத்திற்கு அதிகூடிய முக்கியத்துவத்தை வழங்கியுள்ளது. இதனால்தான் இஸ்லாம் குடும்பம் சார்ந்த மார்க்கம் (Family Oriented) என வர்ணிக்கப்படுகின்றது.

இஸ்லாமிய ஷரீஅத்தில் மூன்று பொது நோக்குகளில் மிக அடிப்படை நோக்கமாகிய 'ழரூரிய்யாத்'தில் உள்ளடங்கும் ஐந்து விடயங்களில் பரம்பரையைப் பாதுகாத்துப் பேணலும் ஒன்றாகும். இந்தளவு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இஸ்லாம் குடும்பத்தைக் கருதுகின்றது.

குடும்பக் கட்டமைப்பைத் தகர்த்தெறியும் வாழ்க்கை அமைப்பான துறவறத்தை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கின்றது. இஸ்லாம் ஏனைய மதங்களைப் போல் வணக்கஸ்தலங்களோடு மாத்திரம் சுருங்கிக் கொண்ட மார்க்கமல்ல. மாற்றமாக அது மனித வாழ்வோடு சம்பந்தப்பட்ட அனைத்துப் பகுதிகளைப் பற்றியும் பேசுகின்ற, அவற்றுக்கான வழிகாட்டல்களை வழங்குகின்ற சம்பூரணமான வாழ்க்கை நெறியாகும். இதனால்தான் இஸ்லாம் மனித உணர்வுகளை மதிக்காது, அவற்றை நசுக்க முற்படவில்லை. மனிதர்களுக்கே உரித்தான இந்த இயல்பான உணர்வுகளை திருமணம் என்ற கேடயத்தைக் கொண்டு நெறிப்படுத்தி உள்ளது.

குடும்ப வாழ்வைத் தகர்த்தெறியும் துறவறம் குறித்து அல்குர்ஆன் தனது நிலைப்பாட்டை இவ்வாறு முன்வைக்கின்றது. ''(உலகத்தின் எல்லா இன்பங்களையும் துறந்து விடக்கூடிய) துறவித்தனத்தை நாம் அவர்கள் மீது கடமையாக விதிக்கவில்லை'' (அல் ஹதீத்-27).

எனவே ஆன்மீக விமோசனம் எனக் கூறிக்கொண்டு அல்லாஹ் ஏற்படுத்திய இயற்கை நியதிகளைப் புறக்கணித்து வாழ்வதை இஸ்லாம் தடை செய்வதோடு, குடும்ப வாழ்வின் பக்கம் மனிதர்களைத் தூண்டுகின்றது. இதனால்தான் உஸ்மான் இப்னு மழ்ஊன் (ரழி) இவர்கள் துறவறம் பூணுவதற்கு நபியவர்களிடம் அனுமதி கோரிய போது அதனை நபி(ஸல்) அவர்கள் நிராகரித்தார்கள். (புகாரி)

குடும்ப வாழ்வின் மூலம் மனித இனம் பெற்றுக் கொள்ளக் கூடிய நன்மைகள் ஏராளமாகக் காணப்படுகின்றன.அந்தவகையில் அல்லாஹ்விடம் வெறுக்கத்தக்க பாவமாகக் கருதப்படும் விபச்சாரத்தின் பக்கம் செல்லவிடாது, மனித இனத்தை கௌரவமாக வாழ வைப்பதில் குடும்ப வாழ்வு பிரதான இடத்தை வகிக்கின்றது.

மேலும் குடும்பமாக சேர்ந்து வாழ்வது மனித உள்ளங்களில் சந்தோஷத்தையும், நிம்மதியையும் விதைத்து விடுகின்றது. அத்தோடு, குடும்ப வாழ்வின் மூலம் மனக் கட்டுப்பாடு, சந்ததி விருத்தி, பாதுகாப்பு, கௌரவம்,ஆரோக்கியம் போன்ற இன்னோரன்ன பயன்களை மனித இனம் அடைந்து கொள்கின்றது.

### நவீன காலத்தில் குடும்ப நிறுவனங்கள் சிதைந்து செல்வதற்கான காரணங்களும், விளைவுகளும்

குடும்ப உருவாக்கத்தில் அல்லாஹுத ஆலா வைத்துள்ள இயற்கை நியதி ஆணும், பெண்ணும் [illegible] கொள்வதாகும். இந்நியதிக்கு மாற்றமாக மனித சமூகம் செயற்பட முற்பட்டால் அது சமூகத்தில் பாரிய எதிர்விளைவுகளைத் தோற்றுவிக்கும்.

இன்றைய நவீன யுகத்தில் குடும்பம் என்ற சமூகத்தின் அடித்தளத்தை சிதைத்துச் சின்னாபின்னமாக்கும் சிந்தனைகள் வேகமாக செல்வாக்குப் பெற்று வருவதனால் கட்டுக்கோப்பான குடும்ப அமைப்பை பாதுகாக்க வேண்டிய தேவை அதிகமாக உணரப்பட்டது. இதனால் உலக சுகாதார அமைப்பு 1994ஆம் ஆண்டை சர்வதேச குடும்ப நல ஆண்டாக அறிவிப்புச் செய்ததுடன், ஒவ்வொரு வருடமும் மே 15ம் திகதியை சர்வதேச குடும்ப தினமாகப் பிரகடனப் படுத்தி உள்ளது.

இன்று குடும்பக் கட்டமைப்பானது குறிப்பாக இரண்டு வகைகளில் காணப்படுகின்றது. அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற மேற்குலக நாடுகளில் குடும்ப வாழ்வைப் பற்றி யாரும் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. காலையில் திருமணம், மாலையில் விவாகரத்து என்பதெல்லாம் இந்நாட்டு மக்களிடம் சகஜமாகிப் போயிருக்கின்றன. இந்தியா, சீனா போன்ற கீழைத்தேய நாடுகளில் குடும்பக் கட்டமைப்பு இதற்கு முற்றிலும் மாற்றமாக அமைந்துள்ளது. இந்நாடுகளில் திருமணம் என்பது தெய்வீக பந்தமாகக் கருதப்படுகின்றது.

கணவனும், மனைவியும் இறுதிவரை ஒன்றாகவே வாழ வேண்டும், கணவன் மரணமடைந்து விட்டால் மனைவி உலக சுக போகங்களை விட்டும் ஒதுங்கி இருக்க வேண்டும், உடன் கட்டை ஏற வேண்டும் போன்ற மோட்டுத் தனமான நம்பிக்கைகள் இவர்களிடம் காணப்படுகின்றன. இவ்வாறு இந்நாடுகளில் குடும்ப அமைப்பானது நெகிழ்வுத் தன்மையாக அல்லது இறுக்கமானதாக அமையப் பெற்றுள்ளமையானது குடும்ப வாழ்வு சீரழிந்து செல்வதற்கு ஏதுவாக அமைந்து விடுகின்றது.

எது எவ்வாறிருப்பினும், இன்று குடும்பக் கட்டுக்கோப்பு ஆட்டம் கண்டிருப்பதற்கான பிரதான காரணிகளாக மூன்று தரப்பினர்களை அடையாளம் காண முடியும்.

***1) கணவன், மனைவி:*** குடும்ப நிறுவனத்தை இஸ்லாம் புனிதமாக நோக்குகின்றது. அதனைப் பாதுகாப்பதில் அதீத கவனம் செலுத்துகின்றது. அந்தவகையில், குடும்பக் கட்டுக்கோப்பைப் பேணுவதில் கணவன், மனைவி ஆகியோரின் செயற்பாடுகள் பிரதான இடத்தை வகிக்கின்றன. ஆனால் இன்று கணவன், மனைவி ஆகியோரிடையே புரிந்துணர்வின்மை, விட்டுக்கொடுப்பின்மை, கலந்துரையாடலின்மை, சந்தேகப் பார்வை போன்றன ஊடுருவிக் காணப்படுவதானது குடும்ப அமைப்பை அடியோடு அழிக்குமளவுக்கு பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.

இன்று காதி நீதிமன்றங்களுக்கு வருகின்ற அதிகமான வழக்குகள் சிறுசிறு பிரச்சினைகளை மையப்படுத்தியே அமைந்திருக்கின்றன இவ்வாறான குடும்ப நிறுவனங்களின் வீழ்ச்சிக்குப் பிரதான காரணம், ஒரு கணவன் எவ்வாறு இயங்க வேண்டும்,ஒரு மனைவி எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் போன்ற அடிப்படை அறிவு கூட இவர்களிடையே காணப்படாமைதான் என்பது நிதர்சனம்.

***2) பிள்ளைகள்:*** குழந்தைகளின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் பெற்றோர்கள் 80வீதமான பங்கை வகிக்கின்றனர்.இவ்வணிக உலகில் சிக்கித் தவிக்கும் பெற்றோர்களுக்கு குடும்பத்துடன் இருந்து மூவேளை சாப்பிடவே நேரமில்லாதிருக்கின்றது. இவ்வாறு பெற்றோரின் வழிகாட்டலின்றி விடப்படும் குழந்தைகளுக்கு ஊடகங்கள் வளர்ப்புப் பெற்றோராக மாறி இருக்கின்றன. இதனால் குழந்தைகள் சினிமா, நாடகங்கள், ஆபாசப் பாடல்கள் போன்றவற்றின் பக்கம் ஈர்க்கப்பட்டு வழி தவறிச் செல்லும் நிலை உருவாகி இருக்கின்றது. இதன் காரணமாக, குடும்ப வாழ்வின் மூலம் இஸ்லாம் எதிர்பார்க்கின்ற ஆரோக்கியமான பரம்பரை உருவாக்கம் தடைப்படுகின்ற துர்ப்பாக்கிய நிலையை இன்றைய சமூகம் எதிர்நோக்கியுள்ளது.

நல்ல பண்பாடுகளால் உரமூட்டப்பட வேண்டிய பிஞ்சு உள்ளங்கள் கவனிப்பாரற்று விடப்படுகின்றன. இதன் விளைவாக, குழந்தைகள் மோசமான நடத்தையுள்ள நண்பர்களோடு தொடர்பேற்படுத்திக் கொள்கிறார்கள். இப்படியான மோசமான தொடர்பு அவர்களை காதல், பாலியல் குற்றங்கள், போதை வஸ்த்துப் பாவனை போன்ற தவறான நடத்தைகளில் ஈடுபடச் செய்து, எதிர்கால வாழ்வையே கேள்விக்குறியாக்கி விடுகின்றது. இளைஞர்களின் இவ்வாறான நடத்தைகளினால் குடும்பக் கட்டுக்கோப்பு சீரழிவதோடு, ஒரு சமூகத்தின் இருப்பும் கூட ஐயத்துக்குள்ளாகின்றது.

***3) சமூகம்:*** குடும்ப வாழ்வின் மிக முக்கிய நோக்கம் ஆரோக்கியமான, முன்மாதிரி மிக்க பரம்பரையை உருவாக்குவதாகும். குடும்பக் கட்டக்கோப்பைச் சீராக வைத்துக் கொள்வதில்தான் ஒரு சமூகத்தின் எதிர்காலம் தங்கி இருக்கின்றது. ஆனால் இன்று சமூகத்தில் நிலவக் கூடிய சில மோசமான சம்பிரதாயங்கள் குடும்ப வாழ்வைத் துண்டாடுமளவுக்கு பாரதூரமானவைகளாக விளங்குகின்றன.

அவற்றில் மிகப் பிரதானமானது, ஒட்டுமொத்த பெண் இனத்திற்கே சாபக்கேடாக விளங்கும் வரதட்சனைக் கொடுமையாகும். இதன் காரணமாக, கருவிலேயும், பிறந்த பின்னரும் பெண் சிசுக்கள் கொல்லப்படும் ஜாஹிலிய்ய நாகரிகம் இன்றும் நடந்தேறிக் கொண்டுதான் இருக்கின்றது. வரதட்சனை கொடுக்க வழியில்லாத பல ஏழைக்குமர்கள் முதிர் கன்னிகளாக மாறி மன அழுத்த நோய்களினால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இன்னும் சிலர் திருமண வாழ்வு வழங்கப்படாததன் காரணமாக தமது உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாமல் தவறான வழிகளைத் தேடிக்கொண்டுள்ளனர்.

திருமணமானதன் பின்னரும் கூட இந்த வரதட்சனைப் பிரச்சினையால் பல குடும்பங்கள் சீரழிந்து கொண்டிருக்கின்றன என்பது கசப்பான உண்மையாகும். இந்த அசிங்கமான, கேவலமான சம்பிரதாயத்தை சமூகம் கண்டும் காணாதிருப்பது அல்லது மறைமுகமாக அங்கீகரிப்பதானது குடும்ப வாழ்வின் புனிதத்தையே இல்லாமலாக்கியுள்ளது. இவை தவிர சமூகத்தில் இன்று புரையோடிப்போயுள்ள பெண் விடுதலை தொடர்பான சிந்தனைகள், ஓரினச்சேர்க்கை என்பனவும் குடும்ப வாழ்வு சீரழிந்து செல்வதற்கான சமூகக் காரணிகளாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீனின் பெறுமதி



யூ.கே.றமீஸ்
விரிவுரையாளர்,
பாதிஹ் கல்வி நிலையம்.

பலஸ்தீன் பூமியை அதன் புவியியல் மற்றும் இஸ்லாமிய ரீதியாக நோக்கும் போது பலஸ்தீனின் அந்தஸ்த்து, அது யாருடையது? என்பவை குறித்து ஏற்கனவே நோக்கியுள்ளோம். அதன் உரிமை விடயத்தில் யூதர்களும் சில மத ரீதியான, வரலாற்று அடிப்படையிலான வாதங்களை முன்வைத்து உலகின் கவனத்தை திருப்பியுள்ளார்கள். திரிபுபடுத்தப்பட்ட தௌராத்தை மையமாக வைத்து மதக்கருத்துக்களை நிரூபிக்க முனைகிறார்கள். இதற்கான முதல் மறுப்பை தெளிவாக கடந்த இதழில் நோக்கினோம். நபிமார்களின் வாரிசுகள் யூதர்கள் அல்லர் முஸ்லிம்கள்தான் என்பதனையும் நிரூபித்தோம். அதன் தொடரை இந்த இதழில் நோக்கு வோம்.

யூதர்கள் உலகத்தில் ஏகத்துவத்தை (தௌஹீத்) பிரதிநிதித்துவம் செய்யும் சமூகமாக இருந்தபோதும், அல்லாஹ்வின் கட்டளைகளை சீராக நடைமுறைப்படுத்தியபோதும் பலஸ்தீன் புனித பூமியை சிறிதுகாலம் அல்லாஹ் யூதர்க ளுக்கு வழங்கியிருந்தான் என்று நாங்கள் நம்புகிறோம். இந்த உண்மையைக் கூற வெட்கப்படவோ, தயங்கவோ மாட்டோம். இந்த உண்மையை நாம் மறுப்பது அல்குர்ஆன் தெளிவாகக் கூறும் விட யத்தை மறுப்பதாகும் என்பதனை நாம் அறிந்து வைத்துள்ளோம்.

மூஸா(அலை) கூறியதாக அல்லாஹ் "எனது சமூகத்தவர்களே! உங்களுக்காக அல்லாஹ் விதித்துள்ள புனித பூமியில் நீங்கள் நுழையுங்கள். நீங்கள் புறமுதுகு காட்டி திரும்பிவிடவேண்டாம். அவ்வாறு நீங்கள் செய்தால் நஷ்டம் அடைந்தவர்களாக திரும்புவீரகள்". என்று கூறினார். அதற்கவர்கள் "மூஸாவே! நிச்சயமாக அங்கு அடக்கி யாளுகின்ற கூட்டத்தார் இருக்கிறார்கள் அவர்கள் அங்கிருந்து வெளியேறும்வரை நாம் அங்கு நுழையவே மாட்டோம். அவர்கள் வெளியேறி விட்டால் நாம் பிரவேசிப்போம்". என்று கூறினார்கள். மேலும் மூஸாவே அவர்கள் அங்கு இருக்கும் வரை நாம் ஒருபோதும் அதில் நுழையவே மாட்டோம். நீரும் உமது இறைவனும் சென்று அவர்களுடன் போர் செய்யுங்கள். நாம் இங்கு உட்கார்ந்திருக்கிறோம் என்றார்கள் (மாயிதா 21,22,24)

தௌஹீதை பின்பற்றிய காலத்தில் தான், இறைகட்டளைகளை எடுத்து நடந்தபோதுதான் புனித பூமிக்கு செல்லுமாறு கட்டளையிடப்பட்டது. ஆனால் அந்த யூதர்கள் எவ்வாறு நடந்து கொண்டார்கள்?. புனித பூமியில் பிரவேசிப்பதற்குக்கூட மறுப்பார்கள். இறை கட்டளைகளுக்கு மாறுசெய்வார்கள். அல்லாஹ்வை நிராகரித்தார்கள். தூதருக்கு கட்டுப்படவில்லை. நபிமார்களை கொலை செய்தார்கள். ஒப்பந்தங்ளை மீறினார்கள். அவர்களது வேதத்தில் கூறப்பட்டிருந்த முஹம்மத் (ஸல்) அவர்கள் கொண்டுவந்த தூதைக்கூட ஏற்றுக்கொள்ளவில்லை. "தவ்றாத்திலும் இன்ஜீலிலும் இந்த தூதரைப்பற்றி எழுதப்பட்டிருந்ததனை காண்பார்கள்" (அஃராப் 157)

"எனக்கு பின்னர் அஹ்மத் என்று ஒரு தூதர் வருவார் என்று நான் நன்மாராயனம் கூறுகிறேன்" என்று ஈஸா(அலை) பனூ இஸ்ரவேலர்களிடம் கூறினார்." (ஸப் 6) "அவர்கள் தன் உடன்படிக்கைகளை முறித்துவிட்டதனால் அவர்களை நாம் சபித்துவிட்டோம். அவர்களது இதயங்களையும் இறுக்கமாக்கி விட்டோம்". (மாயிதா 13)

"அல்லாஹ்விடம் இதனை விட கெட்ட தீங்கை அடைந்து கொண்டவர்கள் பற்றி அறிவிக்கட்டுமா என்று நபியே நீங்கள் கேளுங்கள் (அவர்கள்தான் எவரை அல்லாஹ் சபித்து, கோபம் கொண்டு, குரங்குகளாகவும் பன்றிகளாகவும் ஆக்கி தாகூத்களை வணங்கினார்களோ அவர்களாவர். இவர்கள் மிகத்தாழ்ந்த நிலையிலுள் ளவர்கள் நேரான வழியிலிருந்து தவறி யவர்களும் ஆவர". (மாயிதா 60)

இந்த வசனங்கள் யூதர்கள் இந்த புனித பூமியில் உரிமை கொண்டாடுவதற்கான சட்டபூர்வ தன்மையை இழந்துவிட்டார்கள் என்பதனை மிகத்தெளிவாக காட்டுகிறது. நபிமார்கள். காட்டிய பாதையில் செல்பவர்கள்தான், தௌஹீதின் உண்மையான உரிமையாளர்கள். அவர்கள்தான் முஸ்லிம் சமூகத்தவர்கள். இது ஒரு இனக்குழுமத்துடன் தொடர்பானதன்று; மாற்றமாக ஒரு வழிகாட்டலை பின்பற்றுபற்றுபவர்களுடன் தொடர்பானதாகும்.

யூதர்கள்தான் ஏகத்துவத்தின் (தௌஹீத்) அழகை சிதைத்தார்கள். அல்லாஹ்வின் மீது பொய்யை இட்டுக்கட்டினார்கள். நபிமார்களின் வரலாற்றில் போலிகளை புகுத்தினார்கள். உதாரணமாக திரிபுபடுத்தப்பட்ட தவ்றாதிலும் தல்மூதிலும் குறிப்பிடப்பட்டுள்ள சில விடயங்களை குறிப்பிடுகிறேன்.

"அல்லாஹ் நாளாந்தம் மூன்று மணித்தியாலங்கள் மீன்களுடன் விளையாடுகிறான். ஹைகல் தகர்க்கப்பட்டதனை நினைத்து ஏழு வானங்கள் அளவு விசாலமான அவன் நான்கு வானங்கள் அளவு சுருங்கிவிட்டான். ஹைகலின் தகர்வினை நினைத்தழுது கண்ணீர் கடலில் விழுந்த காரணத்தினால்தான் புயல்களும், சில நடுக்கங்களும் ஏற்படுகின்றன".

மேலும், அல்லாஹ் அல்குர்ஆனில் யூதர்களின் பல கூற்றுக்களை குறிப்பிடுகின்றான். உதாரணமாக "அல்லாஹ்வுடைய கை கட்டப்பட்டிருக்கிறது என்று யூதர்கள் கூறுகின்றார்கள். அவர்களுடைய கைகள்தான் கட்டப்பட்டுள்ளன. இவ்வாறு கூறியதன் காரணமாக அவர்கள் சபிக்கப்பட்டுவிட்டார்கள். (மாயிதா 64)

"நிச்சயமாக அல்லாஹ் ஏழை. நாம்தான் செல்வந்தர்கள் என்று கூறியவர்களின் கூற்றை அல்லாஹ் செவிமடுத்துவிட்டான் இவ்வாறு அவர்கள் கூறியதையும அநியாயமாக நபிமார்களை கொலை செய்தமையையும் நாம் பதிவு செய்துகொள்வோம்." (ஆல-இம்றான் 181)

"யூதர்கள் உஸைரை அல்லாஹ்வின் மகன் என்கிறார்கள். கிறிஸ்தவர்கள் மஸீஹை அல்லாஹ்வின் மகன் என்கிறார்கள். இது அவர்கள் தங்களுடைய வாய்களால் கூறும கூற்றாகும். இதன் மூலம் முன்பிருந்த நிராகரிப்பாளர்களின் கூற்றுகளுடன் ஒத்துபோகிறார்கள். அல்லாஹ் அவர்களை அழிப்பானாக". (தௌபா 30)

யஃகூப் (அலை) அவர்கள் அவரது தந்தையிடமிருந்த ஒரு தங்க சிலையை திருடியதாக குற்றம் சுமத்தும் யூதர்கள் நாபுலஸ் என்ற இடத்திற்கு அருகாமையில் அல்லாஹ்வுடன் போராடி அல்லாஹ்வை தோற்கடித்ததாகவும் நம்புவார்கள் இதன் காரணமாகவே யஃகூப் (அலை) அவர்களின் இன்னொரு பெயரான இஸ்ராஈல் என்பதனை ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனுக்கு சூட்டினார்கள். அவர் தனது சகோதரனுக்கு இலஞ்சம் கொடுத்ததாகவும், தந்தையை ஏமாற்றியதாகவும் அவரது இரு மகள்மார் விபச்சாரம் செய்த போது மௌனமாக இருந்ததாகவும், அவர் ஓரிறைவனுக்கு இணை வைத்தவர் என்றும் கூறுகின்றார்கள். இது போன்று ஏனைய நபிமார்களுக்கும் பல கதைகளை புனைந்துள்ளார்கள்.

**மேலதிக விளக்கத்திற்கு :**

- முஹமத் அலி ஸஅபி - தகாயின் அந்நப்ஸிய்யா அல் யஹூதிய்யா.
- யூலிஸ் ஹனா ஸஃத் - ஹமஜிய்யது தஆலீம். அஸ்ஸிஹ்யூனிய்யா
- தௌபீகுல் வாஇ - அல்-யஹூத் தாரீ இப்ஸாத் வன்ஹிலால் வத்தமார்.

---

# பாலைவனச் சிங்கம்



- ஹமதானி

## பைத்தியங்கள் பல விதம்

**(சுலைமான் ஹாதிர்) - வரலாற்று நவீனம்**

கலியிருள் அகல பூவுலகிற்குப் பொலிகதிர் பரப்பிப் பகல் செய்த கதிரவன் மெல்ல மெல்ல மேற்கே மறைந்து கொண்டிருந்தான். விரிநீல மணித்திரையில் விட்டெறிந்த ஒளி மலர்களென விண்மீன்கள் மின்னத் தொடங்கி இருந்தன. திசை முகங்கள் பசந்து மங்கிய நிறம் பூசிக் கொள்ள சித்திரச் செவ்வானம் கவினுறு காட்சிதந்தது இந்த வேளையில்.

ஜெரூசலத்திலே நடந்த ஒரு கூட்டத்தில் பங்கு பற்றிவிட்டு இப்பொழுது தான் பிரதமர் வாசஸ்தலத்திற்கு திரும்பி இருந்தான் சிமொன் பெரஸ். வந்ததும் வராததுமாக தனக்கு இருக்கும் ஆயாசத்தையும் பொருட்படுத்தாமல் பூஜை அறையில் நுழைந்தான் கடவுள் வழிபாட்டிற்காக, சுவரிலே மாட்டியிருந்த "தேவனின்" படத்திற்கு முன்னால் பக்தியே உருவாக நின்றான். அணித்தாய் இருந்த பேழையில் விரலை விட்டு முகத்தில் திருநீரை எடுத்துத் தடவினான். பின் சில உச்சாடனங்களை ஜெபித்தவாறே சில நிமிடங்கள் கை கூப்பி வணங்கினான். வெளிப்பார்வைக்கு அவன் அவ்வாறு பக்தி வடிய வணங்குவது தேசோமயானந்தமாகக் காட்சி தந்தது. பரமண்டலம் பூமண்டலங்களை எல்லாம் படைத்த இறைவனை முற்றாகவே நிராகரித்து விட்டு தறிகெட்டு அலையும் நாஸ்திகர்களைக் காண்பதை விட இது மேலல்லவோ!

பின் ஒரு வித புளகாங்கிதத்துடன் அலுவலக அறையை நோக்கிச் சென்றான். அதற்குள் அலுவலகத் தொலைபேசி ஒலித்தது. அவன் அவசரமாக சென்று ரிஸீவரை எடுத்தான்.

*"ஹலோ யாரது?"*

*"ஹலோ! விளங்கவில்லை. மீண்டும் கூறுங்கள்.." "............"*

*"அப்படியா?....."*

எதிர்த் திசையிலிருந்து தொலைபேசியூடாக வந்தது ஒவ்வொன்றும் வார்த்தைகளா? அல்லது அம்புமாரிகளா? என எண்ணத் தோன்றும் விதத்தில் ரிஸீவரைத் காதில் வைத்திருந்த சிமொன் பெரஸின் நெற்றி நரம்புகள் எல்லாம் புடைத்தெழுந்தன. முகத்தில் சினம் கொப்பளித்தது. பின் விடையாக எதை எதையெல்லாமோ அவன் அரற்றினான்.

*"என்ன ஏழு யூதர்களையா..?"*

*"இப்பொழுதே அவனைப் பழிவாங்க வேண்டும்.. அவனது பெயரென்ன.?*

"....." "ஸொலமனா? ஒரு யூதன் தானா கொன்றான்?" "......" "ஓ ஓர் அரபிய இளைஞனா? இஃவான் இயக்கத்தவனா? பெயர் சுலைமான் ஹாதிர் தானே" என்று உச்ச ஸ்தாயியில் கேட்டுவிட்டு ரிஸீவரை வைத்துவிட்டான். பின்னர்அருகே இருந்த கதிரையில் பேயறைந்தவன் போல அடியற்ற மரமாகச் சாய்ந்தான்.

ஏழு உளவாளிகள் சுலைமான் ஹாதிரினால் கொலை செய்யப்பட்ட செய்தி தான் இப்பொழுது பிரதமர் சிமொன் பெரஸிற்கு அறிவிக்கப்பட்டது. வாழ்விலே என்றுமே கண்டிராத ஒரு தோல்வி ஏற்பட்டது போல நிலை குலைந்து விட்டான் அவன். ஆழ்ந்த கவலையுடன் தீவிரமாக சிந்தித்தான். பின் அதே கோபக் களையுடன் யாருக்கோ அழைப்பு விடுக்க ரிஸீவரை எடுக்கச் சென்றான். இப்பொழுது முன் வாசலினூடாக பாதுகாப்பு அமைச்சர் அலுவலகத்தில் நுழைவதைக் கண்டான். அவரின் இந்த 'திக் விஜயம்' புண்பட்ட சிமொன் பெரஸின் மனதுக்கு ஔடதம் கொடுப்பது போல் இருந்திருக்க வேண்டும். எனவே, தான் பேச எடுத்த ரிஸீவரை வைத்து விட்டு சமய சஞ்சீவியாக வந்த பாதுகாப்பு அமைச்சரை வந்தனோபசாரம் செய்து வரவேற்றான்.

கழிக்கின்ற ஒவ்வொரு கணப்பொழுதையும் ஒவ்வொரு யுகயுகாந்திரமாகக் கருதி நேரத்தைப் பாழ்படுத்த விரும்பாதவன் போல எந்தப் பீடிகையுமின்றி பாதுகாப்பு அமைச்சருடன் நேரடியாகப் பேச்சுக் கொடுத்தான். எமது வாசகர்களுக்கு கேட்கக் கூடிய ஸ்தாயியில் அவர்கள் உரையாடவில்லை. பரம இரகசியமாக எவற்றை பற்றி எல்லாமோ "குசுகுசு" பேசிக் கொண்டார்கள். தீர்மானங்களையும் எடுத்து திட்டங்களையும் தீட்டிக் கொண்டார்கள். சற்று நேரத்திற்கு எல்லாம் அவர்களது திட்டங்களை எல்லாம் ஒரு காகிதத்தில் எழுத்துப் புஷ்பங்களாய் மலர்ந்து பலவிதமாய் விரிந்தன.

இரவுகள் எனும் இந்த கிராத்திரிகள் எவ்வளவு விரிந்த மனம் படைத்தவை. அதிலே அந்த இராத்திரிகளுக்கு நிகர் அடுத்து வரும் இராத்திரிகளன்று வேறில்லை. அந்த இரவுகள் தன்னுள் எத்தனை பேருக்குப் புகலிடம் வழங்குகிறது. பாதையில் வயிற்றுப் பிழைப்புக்காக சுற்றிவிட்டு ஆயாசத்தோடு வரும் பரதேசிக்கு பள்ளி கொள்வதற்கு மட்டுமா அது இடம் வழங்குகிறது. குடித்துவிட்டு கும்மாளம் போடும் குடிகாரர்களுக்கும் லாகிரிலோலர்களுக்கும் கும்மிருட்டுத் தானே புகலிடம் கயவர்களுக்கு காவல் திரை விரிப்பதும் இந்த [illegible] இறை நல்லடியார்கள் "தஹஜ்ஜத்" மூலம் நாயனை நாடி "மிஃராஜ்" பயணிப்பதும் இந்த நடுநிசி ராத்திரிகளில் தானே!

இவ்வளவு விசாலமனம் படைத்த அந்த இராதிரிகளில் ஒரு இராத்திரியாகிய இன்றைய இராத்திரி சிமொன் பெரஸும் பாதுகாப்பு அமைச்சரும் சுலைமான் ஹாதிருக்கு எதிராகத் தீட்டிய அந்த வஞ்சகத் திட்டத்திற்கும் பாதுகாப்புத்திரை வழங்குகிறதோ!

அந்த வஞ்சகத் திட்டத்தின் முதற்பக்கமே இந்த முன்னிரவில் தானே தீட்டப்படுகிறது. அதற்கேற்பதான் சிமொன் பெரஸின் தூதுவராக "மொஸார்ட்" அதிகாரி ஒருவர் விமானத்தில் கெய்ரோவை சென்றடைகிறார். விமானத்தளத்திலிருந்து காரொன்றை வாடகைக்கு அமர்த்திய "ரொபின் சன்" என்ற அந்த அதிகாரி மையிருட்டிலே சென்று ஜனாதிபதி ஹுஸ்னி முபாறக்குடன் சந்திப்பொன்றை ஏற்படுத்துகிறார்.

சிமொன் பெரஸின் திட்டங்கள் அவர் முன் சமர்ப்பிக்கப்பட்டன. "சபிக்கப்பட்ட இஸ்ரவேலுக்கு" முதல் சென்ற முஸ்லி(?)மும், கேம்டேவிட் சமாதானப் புறாக்களில்(?) ஒருவருமான முன்னை நாள் அன்வர் சாதாத்தின் வாரிட சல்லவா இந்த ஹுஸ்னி முபாறக்! எனவே, சிமொன் பெரஸின் திட்டங் களை அவர் மறுத்திருப்பார் என்பது வாய்தவமே!

[illegible] எவ்வளவு தான் விசால மனம் படைத்தாயினும் - பொறாமைக்காரர்களின் உள்ளத்தைப் போன்று உண்மைகளைத் தன்னகத்தே மறைக்கும் கபடமும் சூனியக்காரியைப் போன்று சூழ்ச்சியும் கொண்டது. எந்த இரவு தான் தன்னுள் நடக்கும் வஞ்சகத் திட்டங்களை வெளியுலகிற்குக் காட்டிக் கொடுத்தது. இரவின் இந்தப் பாதகத்தையிட்டுத் தானே அல்-குர்ஆன் கிழ்வருமாறு கூறுகின்றது.

"(யாவற்றையும்) மறைத்துக் கொள்ளும் இருளின் தீங்கை விட்டும் முடிச்சுப் போட்டு ஊதும் (சூனியக்காரப்) பெண்களின் தீங்கை விட்டும் பொறாமைக்காரன் பொறாமைப்படும் போது நேரும் தீங்கை விட்டும் **(இறைவா! உன்னிடமே பாதுகாப்புத் தேடுகிறேன்)**" (113:3-6)

ஆனால் பகலோ- அது வெள்ளை போன்றே அதன் மனமும் வெள்ளை மனம்தான். இரவின் எத்தனையோ திருகுதாளங்களை வெளியுலகிற்குக் காட்டிக் கொடுத்தது இந்தப் பகல்கள் தானே! எனவே, றொபின்சனும் முபாறக்கும் செயற்படுத்தும் சூழ்ச்சிகளை நாம் அறிய "இன்றைய இரவை" நாடுவது துர்லபமே.

அடுத்த நாள் வரும் பகலிடமே அதனைப்பற்றி வினவுவோம். இந்த இரவின் திருகுதாளங்களை அந்தப் "பகல்" வெளிச்சத்திற்குக் கொண்டு வரலாம் தானே!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பராஅத் இரவு?



முஹம்மத் பகீஹுத்தீன்

ஷஃபான் மாதம் 15 ஆம் நாள் இரவு ''பராஅத் இரவு'' என அழைக்கப்படுகிறது. அது பொது மக்கள் மத்தியில் அதிவிசேட நாள். பல்வகை அமல்கள் கொண்டு அந்த நாள் அலங்கரிக்கப்பட்டு வெகு விமரிசையாக கொண்டாடப்படும் திருநாளாகவே மாறியுள்ளது.

அந்த நாளில் விசேட துஆ பிரார்த்தனைகள், தொழுகைகள், மூன்று யாஸீன்கள், பராஅத் நோன்பு என பல்வகை அமல்கள் நாடளாவிய ரீதியில் தொன்று தொட்டு கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. சிலர் இது ஏன், எதற்கு என்ற பிரக்ஞையின்றியும், வேறு சிலர் மூதாதையர் செய்து வந்த நல்ல காரியங்கள் என்றும், இன்னும் சிலர் இது ஓர் அங்கீகரிக்கப்பட்ட வணக்க வழிபாடு எனக் கருதியும் செய்து வருகின்றனர்.

பொதுமக்கள் மிகுந்த ஈடுபாட்டோடு நிறைவேற்றும் இந்த அமல்களின் உண்மை நிலை என்ன? ஷரீஆ சட்டப் பரப்பில் இதன் அந்தஸ்து யாது? பராஅத் இரவுக் கொண்டாட்டம் பொது மக்கள் அறியாமையின் காரணமாக செய்துவரும் தவறுகளாக இருந்தால் அதனை தடுப்பதற்கான வழிமுறைகள் யாது? பொது மக்கள் மத்தியில் வியாபித்துக் காணப்படும் இது போன்ற தவறுகளைக் களைவதற்காக களமிறங்கும் அழைப்பாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய சீர்திருத்த வழிமுறைகள் யாவை? இந்தப் பின்னணியில் பராஅத் இரவு நிகழ்வுகள் குறித்த பின்வரும் விடயங்களை ஆய்வுக்கு எடுத்துக் கொள்கிறோம்.

1) பராஅத் இரவின் சிறப்புக்கள் பற்றி வந்துள்ள ஹதீஸ்கள்.
2) பராஅத் இரவு பற்றி பொது மக்கள் மத்தியில் நிலவும் நம்பிக்கைகளும், அமல்களும்.
3) பராஅத் இரவில் ஓதப்படும் விசேட துஆ.

### பராஅத் இரவின் சிறப்புக்கள்

1) ஸூறதுத் துகானின் ஆரம்ப வசனங்கள் பராஅத் இரவின் சிறப்புக்கான ஆதாரமாக முன்வைக்கப்படுகிறது.

'ஹாமீம், தெளிவான இந்த வேதத்தின் மீது சத்தியமாக! இதனை நாம் பாக்கியம் நிறைந்த ஓர் இரவில் இறக்கிவைத்தோம். ஏனெனில், நாம் மக்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்ய நாடியிருந்தோம். அந்த நாளில் ஒவ்வொரு விவகாரத்துக்குமான விவேகமிக்க தீர்ப்பு பிரித்துக் கொடுக்கப்படுகின்றது. (44:1-4)

இந்த வசனத்தில் வந்துள்ள 'பாக்கியம் நிறைந்த ஓர் இரவு' என்ற வார்த்தையை சிலர் ரமழான் மாதத்தில் வரும் லைலதுல் கத்ர் இரவு என்றும், வேறு சிலர் ஷஃபான் மாதம் 15 ஆம் நாள் இரவு என்றும் குறிப்பிடுவர்.

தப்ஸீர் கலை இமாம்களான இப்னு அப்பாஸ், கதாதா, இப்னு ஜுபைர், முஜாஹித், இப்னு ஸைத், ஹஸன் ஆகிய அனைவரும் இந்த இரவு லைலதுல் கத்ர் இரவே என அறிவித்துள்ளனர். இதுவே சரியான கூற்று என இமாம் தபரியும் தனது தப்ஸீரில் தெரிவித்துள்ளார். இதே கருத்தை இமாம் நைஸாபூரியும் தனது தப்ஸீரில் வலியுறுத்திக் கூறிவிட்டு, இது ஷஃபான் 15ம் நாள் இரவு எனக் கருதுவோருக்கு எந்த அடிப்படையும் கிடையாது எனவும் விமர்சித்துள்ளார்.

எனவே பெரும்பான்மையான ஸஹாபாக்கள், தாபியீன்கள், அல்குர்ஆன் விரிவுரையாளர்கள், சட்டக் கலை வல்லுனர்கள், அறிஞர்களின் அபிப்பிராயம் இது லைலதுல் கத்ர் இரவு என்பதாகும்.

கருத்துவேறுபாட்டிற்குரிய இந்த வசனத்தின் பலமான கருத்து அது ரமழான் மாதத்தில் உள்ள லைலதுல் கத்ர் இரவு என்பதே. அதனை பராஅத் இரவிற்கான சிறப்பை கூறும் அல்குர்ஆன் வசனம் என்று ஆதாரம் காட்ட முடியாது.

2) 'ஷஃபான் மாதத்தின் பதினைந்தாம் இரவு வந்துவிட்டால் அவ்விரவில் நின்று வணங்குங்கள். பகலில் நோன்பு பிடியுங்கள். அன்றைய நாளில் சூரியன் மறைந்த பின் அல்லாஹ் கடைசி வானத்திற்கு இறங்கி வந்து, 'என்னிடம் பாவ மன்னிப்பு கோருபவர் உண்டா? நான் அவருக்கு மன்னிப்பு வழங்குகிறேன். என்னிடம் உணவு கேட்பவர் உண்டா? நான் அவருக்கு உணவளிக்கிறேன். சோதனைக்கு ஆளானவர் உண்டா? அவருக்கு நிவாரணம் வழங்குகிறேன் என்று சுபஹ் நேரம் வரை கேட்கிறான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அலி (ரழி) அறிவிக்கிறார்கள். பராஅத் இரவின் சிறப்பு பற்றிக் கூறும் இந்த ஹதீஸ் இப்னு மாஜா, பைஹகீ ஆகிய கிரந்தங்களில் பதிவாகியுள்ளது.

இது ஒரு பலவீனமான அறிவிப்பாளர் வரிசையைக் கொண்ட ஹதீஸ். இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசையில் வரும் 'இப்னு அபீ புஸ்ரா' என்பவர் பலவீனமானவர். இவர் பொய்யான ஹதீஸ்களை இட்டுக் கட்டக் கூடியவர் என இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்களும், இமாம் இப்னு முயீன் (ரஹ்) அவர்களும் குறிப்பிடுகின்றனர்.

3) ஆயிஷா (ரழி) அறிவிக்கிறார்: 'நான் நபி (ஸல்) அவர்களை இரவில் படுக்கையில் காணாததால் அவர்களைத் தேடி வெளியில் சென்றேன். அப்போது அவர்கள் மதீனா மையவாடியான 'பகீ' யில் வானத்தை நோக்கி தலையை உயர்த்தியவர்களாக பிரார்த்தனையில் இருந்தார்கள். ஆயிஷா (ரழி) அவர்களைக் கண்டதும் ஆயிஷாவே! அல்லாஹ்வும், அவனது தூதரும் உனது விவகாரத்தில் அநீதி இழைத்துவிடுவர் என நீ பயப்படுகின்றீரா? அதற்கு ஆயிஷா (ரழி) ஒரு போதும் இல்லை. அவ்வாறு நான் எண்ணவுமில்லை. ஆனால், நீங்கள் என்னை விட்டு விட்டு வேறு மனைவியரிடம் வந்து விட்டதாக நினைத்தேன். அப்போது நபி (ஸல்) அவர்கள்: ''ஷஃபான் மாதத்தின் நடுப்பகுதியான 15ம் இரவில் அல்லாஹ் கடைசி வானத்திற்கு இறங்கி வந்து 'கல்ப்' கோத்திரத்திற்கு சொந்தமான ஆடுகளின் உரோமங்களின் எண்ணிக்கை அளவை விட அதிகமாக பாவமன்னிப்பு வழங்குகிறான் என்று கூறினார்கள்.'' (ஆதாரம்: திர்மிதீ, இப்னு மாஜா)

இதுவும் ஒரு பலவீனமான ஹதீஸ். இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசையில் 'ஹஜ்ஜாஜ் இப்னு அர்தாத்' என்பவர் இடம்பெறுகிறார். இவர் தான் ஹதீஸை பெற்றதாகக் குறிப்பிடும் அறிவிப்பாளரான யஹ்யா இப்னு அபூ கஸீல் என்பவரிடம் எந்த செய்தியையும் செவியுற்றதில்லை. இது பலவீனமான ஹதீஸ் என்று இமாம் புகாரி (ரஹ்) அவர்கள் குறிப்பிட்டுள்ளதாக இமாம் திர்மிதி (ரஹ்) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

4) 'ஷஃபான் மாதத்தின் பதினைந்தாம் இரவில் அல்லாஹ் தன்னுடைய எல்லாப் படைப்பினங்களுக்கும் பாவ மன்னிப்பு வழங்குகிறான். இணைவைப்பவனையும், (இன்னொரு அறிவிப்பில் கொலைகாரனையும்) பரஸ்பரம் குரோதம் பாராட்டுபவனையும் தவிர என நபி (ஸல்) கூறினார்கள். (இப்னுமாஜா, முஸ்னத் அஹ்மத்)

இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசையில் இடம்பெறும் இப்னு லஹீஆ என்பவர் பலவீனமானவர் என்றும் வலீத் இப்னு முஸ்லிம் என்பவர் செய்திகளை இருட்டடிப்பு செய்பவர் என்றும் ஹதீஸ் துறை அறிஞர்கள் [illegible] செய்கிறார்கள். இருப்பினும் இந்த ஹதீஸின் ஏனைய அறிவிப்பாளர் வரிசையைக் கருத்திற் கொண்டு இது ஹஸனான ஹதீஸ் என அல்லாமா அல்பானி (ரஹ்) கூறியுள்ளார்கள்.

மேற்கூறப்பட்ட ஹதீஸ்கள் ஸஹீஹானதாக இருந்தால் அதுவே பராஅத் இரவுக்கான மிகப் பலமான ஆதரமாக அமையும். சில அறிஞர்கள் இந்த ஹதீஸ்களை 'ஹஸன்' என்ற தரத்தில் வைத்து தீர்ப்பு வழங்கியுள்ளார்கள்.

எனவே சுருக்கமாகக் கூறுவதாயின் பராஅத் இரவு குறித்து வந்துள்ள ஹதீஸ்கள் அனைத்தும் குறைபாடுகள் கொண்டதாகவும், ஹதீஸ் கலை வல்லுனர்களின் விமர்சனத்துக்கு உட்பட்டதாகவுமே காணப்படுகிறது.

இந்த ஹதீஸ்கள் பலவீனமானது, விமர்சனங்களுக்கு உட்பட்டது என்பதை முழுமையாக ஏற்பதுடன், குறித்த அந்த இரவுக்கு ஏனைய இரவுகளை விட ஒரு சிறப்பு இருக்கிறது என்பதைக் காட்டுவதற்கு அது போதுமானதே என்ற முடிவுக்கு வரமுடியும். இது இமாம்கள் பலவீனமான ஹதீஸ்களை அணுகும் ஒரு வழிமுறையாகும்.

ஆனால் அமல்களின் சிறப்புக்களைக் கூறும் பலவீனமான ஹதீஸ்களை அடிப்படையாக கொண்டு ஒரு புதிய இபாதத்தை உருவாக்க முடியாது. நோன்பு, கியாமுல் லைல் போன்ற அமல்களை ஷரீஅத்தில் உள்ளபடி ஒருவர் அந்த இரவில் செய்கிறார் என்றால், அது ஆகுமானதே. அதை தடுக்க வேண்டிய அவசியம் கிடையாது. அமல்களின் சிறப்புக்களைக் கூறும் பலவீனமான ஹதீஸ்களை அடிப்படையாகக் கொண்டு ஷரீஆ அங்கீகாரம் வழங்கியுள்ள அமல்களை செய்வது தவறல்ல. ஆனால், ஆதாரமே இல்லாத ஒன்றை வணக்க வழிபாடாக எடுப்பதற்கு இந்த விதியை பயன்படுத்த முடியாது.

### பொது மக்கள் மத்தியில் நிலவும் நம்பிக்கையும், அமல்களும்

1) ஷஃபான் 15 ஆம் நாள் இரவு ஒவ்வொரு விவகாரத்துக்குமான விவேக மிக்க தீர்ப்பு பிரித்துக் கொடுக்கப்படுகின்றது என்பது நம்பிக்கை. இது ஸூரா துகான் கூறும் பாக்கியம் நிறைந்த இரவு என்பதை ஷஃபான் 15 ஆம் நாள் என தவறாகப் புரிந்து கொண்டதினால் வந்த விளைவு என்பதை ஏலவே குறிப்பிட்டுள்ளோம்.

2) பராஅத் இரவில் மஃரிப் தொழுகைக்கு பிறகு பள்ளிவாசலில் ஓதப்படும் துஆப் பிரார்த்தனைக்கும் விசேட தொழுகைக்கும் யார் சமூகம் தருகின்றாரோ அவர் இந்த வருடத்தில் மரணிக்க மாட்டார். அவருடைய காலக்கெடு திருத்தப்படுகிறது. அவ்வாறு சமூகம் தரத் தவறும்போது அவர்கள் துர்ப்பாக்கியசாலிகளாக கருதப்படுவர். இது வடிகட்டிய மூட நம்பிக்கை. இதற்கு மார்க்கத்தில் எந்த அடிப்படையும் கிடையாது.

3) அன்றைய இரவில் மஃரிப் தொழுகைக்குப் பின் மூன்று யாசீன் ஓதப்படும். ஒன்று உணவு விஸ்தீரணத்திற்கு, இரண்டாவது ஆயுள் நீடிப்புக்கு, மூன்றாவது பலாய் முஸீபத் நீங்குவதற்கு. இதற்கு ஷரீஅத்தில் எந்த ஆதாரமும் இல்லை. அல்குர்ஆனை எப்போதும் ஓத முடியும் என்பது உண்மைதான். ஆனால் குறிப்பிட்ட ஒரு ஸூராவை குறித்த ஒரு நாளில் விஷேட அமைப்பில் ஓதுவதற்கு ஸஹீஹான ஆதாரம் தேவை. இந்த விடயத்தில் எந்த ஸஹீஹான ஆதாரமும் கிடையாது.

4) பராஅத் இரவில் ஸலாதுல் கைர் என்ற பெயரில் விஷேட தொழுகை இருப்பதாக மக்கள் நம்புகின்றனர். அது நூறு ரக்அத் கொண்ட தொழுகை. ஒவ்வொரு ரக்அத்திலும் பாதிஹா ஸூராவிற்குப் பிறகு ஸூரதுல் இக்லாஸ் பதினொரு தடவைகள் ஓத வேண்டும். இதனை சுருக்கித் தொழும் சோட்கட் முறைகளும் இருக்கின்றன.

இமாம் கஸ்ஸாலி அவர்கள் இந்த விடயத்தை இஹ்யாவில் குறிப்பிட்டுள்ளார்கள். இந்தத் தொழுகை குறித்தும் பாதிலான இட்டுக் கட்டப்பட்ட ஹதீஸ்கள் உள்ளன. எனவே இதுவும் எந்த ஆதாரமும் அற்ற ஷரீஆ அங்கீகரிக்காத ஒரு நூதன தொழுகை முறையாகும்.

மேற்கூறிய விடயங்களும் இன்னும் இது போன்ற புராணங்களுடன் கூடிய பல நிகழ்ச்சிகளும் மார்க்கத்தில் புதிதாக நுழைந்த நூதன வணக்கங்களாகும். வணக்க வழிபாடுகளில் மிகுந்த கவனமாக இருக்க வேண்டும். எந்தவொரு அமலையும் நன்மை கருதி சுயமாக உருவாக்கிவே முடியாது. இதனால்தான் புகஹாக்கள் ''வணக்க வழிபாடுகளில் அடிப்படை கொள்கை தடையாகும்'' என்ற விதியை வகுத்துள்ளனர்.

ஆதாரமின்றி ஒன்றை செய்ய முற்படுவது தடை செய்யப்படும். மனிதன் வணங்குவதற்கான கடமைகளையும், வணக்கங்களையும் வகுத்துத் தருவது இறைவன் ஒருவன் மட்டுமே. அல்லாஹ் கடமையாக்கியுள்ள வணக்கங்களை பணிவன்போடு அடிபணிந்து வணங்குவதுதான் மனிதன் கடமை.

### பராஅத் இரவில் ஓதும் விசேட பிரார்த்தனை

இந்த இரவில் மஃரிப் தொழுகைக்குப் பின் துன்பம், துயரங்கள் நீங்கவும், நீண்ட ஆயுளைப் பெறவும், நிலையான செல்வத்தைப் பெறவும் மூன்று 'யாசீன்' ஓதி, துஆ செய்வது ஊர் வழக்கத்தில் இருந்து வருகின்றது. அந்த துஆவில், ''யா அல்லாஹ்! நீ எங்களை மூதேவிகளாக பதிவு செய்திருந்தால் அதை அழித்து, எங்களை சீதேவிகளாக எழுது. நீ எங்களை சீதேவிகளாக எழுதியிருந்தால் அதை அப்படியே உறுதிப்படுத்து. ஏனெனில் நீ நாடுவதை அழிப்பாய், நாடுவதை அழிக்காமல் உறுதிப்படுத்துவாய் உன்னிடம் தான் மூலநூல் எனும் 'உம்முல் கிதாப்' உள்ளது'' என்று பிரார்த்திப்பர்.

உம்முல் கிதாபில் உள்ளவை அழிப்பதற்கும் உறுதிப்படுத்துவதற்குமானவையல்ல. அல்லாஹ்வின் அறிவில் உள்ளவை, லவ்ஹுல் மஹ்பூழில் உள்ளவை மாற்றங்கள் நிகழாதவை என்று நம்புவதே ஒரு முஸ்லிமின் மிகச் சரியான நம்பிக்கையாகும். எனவே இந்த துஆவில் வரும் வாசகம் அகீதாவிற்கு முரணான மனித வார்த்தைகளாகும். அவை சிந்தனைச் சிக்கல்களுக்கு வழிவகுக்கும் வார்த்தை பிரயோகங்கள்.

இந்த துஆ ஒரு ஹதீஸுமல்ல. அதற்கு ஆதாரமும் இல்லை. மாறாக கருத்துச் சிக்கல் நிறைந்த ஒரு துஆ. இறைவனிடம் கேட்பதென்றால் உறுதியான வார்த்தைகளில் கேட்கவேண்டும். நீ நாடினால் தருவாயாக என்று கேட்பது நபி வழிக்கு முரணான பிரார்த்தனை வழிமுறையாகும்.

இதுவன்ர பார்த்த விடயங்களின் சுருக்கம்:

1) ஷஃபான் 15 ஆம் நாள் இரவு ஏனைய சாதாரண இரவுகளை விட சிறப்புக்குரிய இரவு எனக் கருத முடியும். அந்த இரவில் ஷரீஅத் அங்கீகரித்துள்ள முறைப்படி எந்த அமல்கள் வேண்டுமானாலும் செய்யலாம். அந்த நாளின் பகற் பொழுதில் நோன்பும் வைக்கலாம். இவை விரும்பத்தக்கவையே.

2) அந்த நாளுக்கென்று விசேட யாஸீன், விசேட தொழுகை, விசேட நோன்பு, விசேட துஆக்கள் என எதுவுமே ஆதாரமில்லாதவை. எனவே அவற்றை வணக்க வழிபாடாகக் கொண்டாடுவதை முற்றாக தவிர்ந்து கொள்ள வேண்டும்.

3) அந்த நாளில் மூன்று யாஸீனுக்கு பிறகு ஓதும் விஷேட துஆ நபி வழிக்கு முரணானது. அதில் கருத்துச் சிக்கல்கள் மலிந்து காணப்படுகின்றன. அதை ஓதும் முறையும் ஷரீஅத்திற்கு முரணானது. எனவே அது தவிர்க்கப்பட வேண்டியதே.

முடிவாக... பராஅத் இரவை பொறுத்தமட்டில் மக்களின் நிலைப்பாடு இரண்டு வகைப்படுகிறது.

ஒரு சாரார் மரபு வழி வந்த பாரம்பரிய பராஅத் இரவு வழிபாடுகளுக்கு தீவிர ஆர்வம் காட்டுகின்றனர். அவற்றை கடமை என நம்பி, விட்டுக் கொடுக்காமல் பாதுகாத்து வருகின்றனர். அதற்கான நியாயங்களையும், ஆதாரங்களையும் வலிந்து தேடுகின்றனர். இவர்களுள் பள்ளிவாசல் இமாம்களும் மௌலவி ஆலிம்களும் அடங்குவர். எனவே அவர்கள் காய்தல் உவத்தல் இன்றி சமநிலை மனதோடு இந்த விடயத்தை ஷரீஆவின் பின்னணியில் கூர்ந்து கவனிக்க வேண்டும், படிக்க வேண்டும். அப்போது தான் இந்தத் தீவிரத் தன்மையை கை விட்டு விட்டு மிதவாதத்தை கடைப் பிடிப்பார்கள் என நம்புகிறோம்.

அடுத்து இதனை எதிர்க்கும் குழுவினரும் அதிதீவிரமான வெறியுடனேயே செயற்படுகின்றனர். இந்நிகழ்வுகளை கடுமையாக இழிவுபடுத்தி, அதில் ஈடுபடுவோரை கடுமையாக திட்டித் தீர்த்து விடுகின்றனர். அதுவே கைகலப்பாக மாறி சமூகத்திற்குள்ளே பிளவும் பிரிவினையும் குரோத மனப்பாங்கும் தோன்றி விடுகிறது.

எனவே இதனை எதிர்ப்பவர்கள் ஒரு விடயத்தை கருத்திற் கொள்ள வேண்டும். பராஅத் இரவை கொண்டாடும் பொது மக்கள் ஏன் அதனை செய்கிறார்கள். அது மார்க்கத்தில் உள்ளது என்ற நல்லெண்ணத்துடனேயே இந்தத் தவறை செய்கிறார்கள். மார்க்கத்தின் மீது அவர்களுக்குள்ள ஆர்வமும் பற்றும் அதனால் வெளிப்படுகிறது. இந்த நிலையில் கரடுமுரடான போக்கை கையாண்டு, இழிவுபடுத்தி, ஓரங்கட்டும் வகையில் அவர்களை எதிர்ப்பதானது, அவர்களது மார்க்க ஆர்வத்தை சிதைத்து விடும். தீனுக்கு வழங்கும் கண்ணியத்தை இழக்கச் செய்யும். தீமையை தடுப்பதில் உள்ள இந்த வெறி நன்மையை விட பாரிய தீய விளைவை கொண்டுவரும். அவர்கள் தீனை வெறுக்கும் நிலைக்குத் தள்ளப்படுவர்.

எனவே எதிர்க்கும்போது மென்மையை கடைப்பிடிக்க வேண்டும். இது இஸ்லாமிய பிரச்சாரத்தில் தீமையைத் தடுக்கும் உக்திகளில் ஒன்று. குறிப்பாக மக்கள் மத்தியில் மிகவும் பிரபல்யம் அடைந்துள்ள இதுபோன்ற நிகழ்ச்சிகளைக் களைவதில் மிகுந்த கவனம் வேண்டும். மஸ்ஜிதுடன் தொடர்புள்ள மக்களை எதிர்கொள்ளும் தாஈக்கள் நுட்பமான வழிமுறைகளையும் சிறந்த அணுகுமுறைகளையும் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும். அடுத்தவர்களது உணர்வுகளை மதித்து உள்ளத்தைக் காயப்படுத்தாமல் அன்பு ததும்பும் வழி முறையை பின்பற்றினால் காலப் போக்கில் பொதுமக்கள் உண்மைகளை உள்வாங்கி அதன் பால் திரும்பிவிடுவர். சரியான பாதைக்கு வழிகாட்டுபவன் அல்லாஹ் ஒருவன் மாத்திரமே. அல்லாஹ் யாவும் அறிந்தவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கற்றலும் தொலைக்காட்சியும்

பாரம்பரிய இலத்திரனியல் ஊடகங்களில் தொலைக்காட்சி இன்னும் அதன் மவுசை இழந்துவிடவில்லை. உலகம் முழுவதும் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு முன்னால் நாளாந்தம் கோடிக் கணக்கான மக்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். விஞ்ஞான, தொழில்நுட்ப படிமலர்ச்சியில் இது ஒரு முக்கிய பரிமாணம். நம்மைச் சுற்றியுள்ள உலகைக் காண்பதற்கும் சமூக, கலாசார, அரசியலைப் புரிந்துகொள்ளவும் தொலைக்காட்சிகள் பெரும் பங்காற்றி வருகின்றன.

இன்று 350 கோடி தொலைக்காட்சிப் பெட்டிகள் பாவனையில் உள்ளன. 60,000 தொலைக்காட்சி நிறுவனங்களின் நிகழ்ச்சிகளை அவை ஒளிபரப்புகின்றன. தொலைக்காட்சிகளின் இந்த அனுகூலத்திற்கு அப்பால் அதற்கு இன்னொரு முகம் உண்டு. புலன்களை சிறைப்படுத்தும் அதன் வசீகரத்தில் பலர் கிறங்கிப் போகின்றனர். 22 அங்குல திரை மாணவர்களின் மனதைக் கவர்கின்றது.

பாடல்கள், நடனக் காட்சிகள், வன்முறைகள், பாலியல் அனுபவங்கள், பொய்களால் போர்த்தப்பட்ட விளம்பர மாயைகள், அதிகாரிகளுக்கு எதிரானதும் சார்பானதுமான செய்திகள் என மனித நடத்தையில் தாக்கம் செலுத்தும் உள்ளடக்கம் அதற்குண்டு. கேளிக்கை நிகழ்ச்சிகளுக்கு பார்வையாளர்கள் பழக்கப்படுவதனால் அவற்றை நிறுத்தவோ மாற்றவோ முடிவதில்லை.

திரும்பத் திரும்பப் பார்க்கும்போது அது அறிவாகவும் நம்பிக்கையாகவும் நடத்தையாகவும் மாறுகிறது. மாணவர் பருவத்தில் உள்ளவர்கள் தீமைகளோடு உறவாடுவதற்கு இன்று தொலைக்காட்சிகள் பெரும் பங்களிக் கின்றன. சமீபத்திய சமூக ஊடகங்களின் செல்வாக்கைக் கடந்து, தொலைக்காட்சியின் இந்தத் தாக்கத்தினை வெகுவாக உணர முடிகின்றது.

தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகும் மெகா சீரிஸ்கள் மாணவர்களின் கல்வியை பெருமளவு பாதிக்கின்றன. வினைத் திறனுள்ள கற்றல் நிகழ்வதற்கு மிகப் பொருத்தமான நேரம் எதுவோ அதே நேரத்தில்தான் இந்த மெகா சீரிஸ்கள் ஒளிபரப்பாகின்றன. பெற்றோர்கள் தொலைக்காட்சித் திரைகளுக்கு முன்னால் அமர்ந்து அவற்றைப் பார்த்து லயிக்கின்றனர். தமது பிள்ளைகளை 'நீங்கள் சென்று படியுங்கள்' என கட்டளையிடுகின்றனர்.

கற்றலின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளாத பெற்றோர்களே இவ்வாறு நடந்து கொள்கின்றனர். கற்றலில் முதன்மையானது மனஒருமைப்பாடு. தொலைக்காட்சியில் நாடகங்களோ சினிமாப் படங்களோ ஒளிபரப்பாகும் நேரத்தில் வீட்டில் ஒதுக்குப் புறமாகவுள்ள ஓரிடத்திலிருந்து கற்கும் மாணவனின் கவனம் கூட சிதைகின்றது என்ற உண்மையை பெற்றோர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஊடகங்கள் -குறிப்பாக தொலைக்காட்சிகள் மாணவர்களின் ஆளுமையில் ஏற்படுத்தும் தாக்கங்களில் அநேகமானவை எதிர்மறையானவை. கவனக் குறைவு, ஓய்வின்மை, வன்முறை, ஒழுங்கீனம், இவற்றின் ஒட்டுமொத்த விளைவான அசாதாரண நடத்தை என மாணவர்களை தொலைக்காட்சிகள் பல வகையில் பாதிக்கின்றன. இது குறித்து மேற்கொள்ளப்பட்ட அண்மைக் கால ஆய்வுகளின் முடிவுகள் பின்வருமாறு அமைகின்றன.

1. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் காட்டப்படும் வன்முறைகளுக்கும் அதைப் பார்ப்போரின் நடத்தைகளுக்கும் இடையில் காரண காரியத் தொடர்புள்ளது.
2. தொலைக்காட்சி வன்முறைகள் பார்ப்போரின் வன்முறை நடத்தையைத் தூண்டுகின்றன.
3. கடந்த காலங்களில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் வன்முறைச் சம்பவங்கள் ஒப்பீட்டு ரீதியில் அதிகரித்துள்ளன.
4. தொலைக்காட்சி அதிகம் பார்ப்பவர்கள் மற்றவர்களில் நம்பிக்கை அற்றவர்களாகவும் பல்வேறு உணர்ச்சிகளை வெளிக்காட்டுபவர்களாகவும் உள்ளனர்.

தொலைக்காட்சியில் காட்டப்படும் வன்முறைகள் கற்றுக்கொள்ளப்பட்டு போலச் செய்தல் (Imitation) மூலம் வெளிக்காட்டப்படுகின்றன. இதனை Bandura Observational Modeling Theory என வரையறுப்பார்.

பாடசாலை சீருடையுடன் மாணவர்கள் காதல் செய்யும் காட்சிகள், பழிக்குப் பழி வாங்கும் உணர்வுகளைத் தூண்டும் காட்சிகள், கல்வியின் விழுமியங்களைக் குறைக்கக் கூடிய காட்சிகள், விரசத்தைத் தூண்டும் பாடல் காட்சிகள், யதார்த்தமில்லாத கற்பனாவாதங்கள், பலமானவனே சரியானவன் என்பதை உணர்த்தும் காட்சிகள் என மாணவர்களில் எதிர்மறை ஆளுமைகளை ஊக்குவிப்பதாகவே தொலைக்காட்சி உள்ளடக்கங்கள் அமைகின்றன.

# உளவியல் பாடநெறிகளும் இலங்கைச் சூழலும்



ஹனான் அஷ்ராவி

இன்று உளவியல் ஊடுருவாத அறிகைப் புலங்கள் எதுவுமில்லை எனக் கருதுமளவு எங்கும் உளவியல், எதிலும் உளவியல் எனும் நிலை தோன்றியுள்ளது.

ஊழியச் சந்தையில் ஒரு வளர்ந்து வரும் தொழிற் துறையாக உளவியல் மாறியுள்ளது. மேற்கு நாடுகள் போன்று கீழைத்தேய உலகில் உளவியல் சார்ந்த தொழின்மைகள் பாரியளவு வளரவில்லை. எனினும், உளவளத் துணையாளர்கள், உள மருத்துவர்களின் எண்ணிக்கை கிழக்கில் வேகமாக அதிகரித்து வருகின்றது.

உள ஆரோக்கியத்தில் ஏற்பட்டுள்ள சரிவின் அடையாளமாகவே இதனைக் கருத வேண்டும். எவ்வாறாயினும், இலங்கைச் சூழலில் உளவியல் கற்கைகள் தொழிற் தகைமைக்குரிய கற்கைப் புலமாக மாறி வருகின்றது. இலங்கையில் பல்கலைக்கழக மட்டத்தில் ஒரு பாடமாகவே இது கற்பிக்கப்படுகின்றது. உளவியல் இளமானிப் படிப்பு இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இல்லை. விசேட கற்கையாகவும் சில பல்கலைக்கழகங்களில் அங்கீகரிக்கப்படவில்லை. வெளிவாரிப் பட்டப் படிப்பில் மெய்யியலின் ஒரு பகுதியாகக் கற்பிக்கப்படுகின்றது. அதுவும் பொது உளவியல் என சுருக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மட்டத்தில் பட்டப் பின் டிப்ளோமா கற்கை நெறியாக உளவியல் கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்யலாம். அதற்கு மேல் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் வாய்ப்பில்லை. கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்விப் பீடம் பட்டப் பின் டிப்ளோமா கற்கை நெறி யொன்றை ஆங்கில மொழி மூலம் வழங்குகின்றது. சுமார் 1 இலட்சம் ரூபா இதற்கான கட்டணமாக அ[illegible]கின்றது. ஆங்கில மொழித் தேர்ச்சியும் இளமானி (BA) பட்டத்தையும் கொண்டுள்ளோர் இதற்கு விண்ணப்பிக்கலாம். நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் மாணவர் கற்கைநெறிக்குத் தெரிவுசெய்யப்படுகின்றனர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் இதே வாய்ப்பு உள்ளது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மெய்யியல் மற்றும் உளவியல் துறையின் கீழ், உளவியல் பொதுக் கலைத் தேர்வில் ஒரு பாடமாகவும், அதேவேளை விசேட கற்கைப் புலமாகவும் விளங்குகின்றது. இவ்விரு பல்கலைக்கழகங்களினதும் பட்டப் பின் டிப்ளோமா காலம் ஒரு வருடமாக வரையறுக்கப்பட்டுள்ளது.

பொதுக் கலைத் தேர்வில் உளவியலை ஒரு பாடமாகக் கற்ற மாணவர்கள் இக் கற்கை நெறியில் இணையலாம். இலங்கைப் பல்கலைக்கழகங்களில் உளவியல் முதுமானி M.A., முதுகலைமானி பட்டங்களைப் பெறுவதற்கான வாய்ப்பு இது வரை உருவாக்கப்படவில்லை. எதிர்வரும் ஐந்து ஆண்டுகளுக்குள் ஒரு சில பல்கலைக்கழகங்களில் உளவியலுக்கு தனிப்பீடமொன்றை உருவாக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இலங்கை சமூக சேவை அமைச்சின் கீழ் இயங்கும் சமூக அபிவிருத்திக்கான தேசிய நிறுவனம் NISD உயர் தரத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கு உளவளத் துறையில் டிப்ளோமா கற்கையை வழங்குகின்றது. ஒன்றரை வருடகால அளவைக் கொண்ட இதில், ஓராண்டு கோட்பாட்டிற்காக வரையறுக்கப்பட்டுள்ளது. இளமானிப் பட்டதாரிகளுக்கு அங்கு முன்னுரிமை வழங்கப்படும். அயல் நாடான இந்தியாவில் உளவியலைக் கற்பதற்[illegible]

பெரும்பான்மையான மாணவர்கள் தகவல், தொழில்நுட்பம், முகாமை மற்றும் விஞ்ஞானக் கற்கை நெறிகளை நோக்கியே விரைந்து செல்கையில் ஒரு சிலர் வித்தியாசமான துறைகளின் பக்கம் தமது கவனத்தைத் திருப்புகின்றனர். அந்த வகையில், மாணவர்களின் கவனயீர்ப்பைப் பெற்றுவரும் அறிவுப் புலங்களில் ஒன்றுதான் உளவியல். இன்றைய இயந்திரத்தனமான வாழ்வியலில் பெரும்பாலானோர் மன அழுத்தத்திற்கு ஆளாகியுள்ளனர். பலர் படிப்படியான தமது உள ஆரோக்கியத்தை இழந்து வருகின்றனர்.

மனிதர்கள் சக மனிதர்களைப் புரிந்து கொள்ள வேண்டிய தேவை முன்பை விட அதிகரித்துள்ளது. மனித உறவுகளின் நெருக்கம் தொழில்நுட்பத்தால் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறது.

வேலைத் தளங்களுக்கு ஊழியர்களை உள்ளீர்க்கும்போது பல்வேறு காரணிகளைக் கவனிக்க வேண்டியுள்ளது. வீட்டில் எமது பிள்ளைகளை முறையாக வளர்த்து ஆளாக்க வேண்டுமாயின், குழந்தை உளவியலைக் கவனமாகப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த வகையில்

## மீள்பார்வை 20 ஆவது ஆண்டு நிறைவில்...

# பயணம் வந்த கதை

2001 ஓகஸ்ட் மாதம் அந்திவேளை ஒன்றில் முன்னைய ரிபாத் கலாசார நிலையத்தின் (தற்போது பாதிஹ் கல்வி நிலையத்தின் அலுவலகம்) மேல் மாடியில் கோடிப் புறத்தில் இருந்த உஸ்தாத் மன்ஸூரின் அலுவலக அறைக்கு என்னை வருமாறு அழைத்திருந்தார் அவர். அப்போது அங்கத்தவர்களைப் பயிற்றுவிக்கும் தர்பிய்யா நிகழ்ச்சிகள் பல்வேறு கட்டங்களாக நடத்தப்பட்டு வந்தன.

இறுதியாக, ஐந்தாம் கட்டத் தர்பிய்யா எனும் நிகழ்ச்சி மிகுந்த வினைமையுடனும் அடர்த்தியுடனும் நடத்தப்பட்டது. அதற்குச் சமாந்திரமாக குர்ஆன், ஸீறா என்பவற்றை ஆழ்ந்து கற்பதற்கு தௌரா எனும் ஒன்றுகூடலும் நடத்தப்பட்டது.

எவ்வாறாயினும், இஸ்லாத்தின் ஆன்மீகப் பெறுமானங்களையும் பயிற்றுவித்தலுக்கான அடிப்படைகளையும் பேசும் எந்தவொரு தனித இதழோ சஞ்சிகையோ அப்போது வெளிவரவில்லை. அல்குர்ஆன், ஹதீஸ், ஸலபுஸ் ஸாலிஹீன்களின் பயிற்றுவித்தல் ஒழுங்குகளை பேச வேண்டிய தறுணம் அது. இதற்கான உள்ளடக்கங்களைத் தாங்கிய ஒரு சஞ்சிகை பிரத்தியேகமாக வெளியிடப்பட வேண்டும். அதற்குரிய தேவை பலமாக உள்ளது என்று உஸ்தாத் ஆலோசனை கூறினார்.

அது பயிற்றுவிப்பாளர்களுக்கும் சாதாரண முஸ்லிம்களுக்கும் பெரும் உருதுணையாக இருக்கும். அறபு மொழியில் இது தொடர்பில் நிறையவே மூல நூல்களும் கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. குறைந்தபட்சம் அவற்றை மொழிபெயர்த்தேனும் இதுபோன்றதோர் சஞ்சிகையை கொண்டு வரலாம் என அவர் அறிவுரை பகர்ந்தார்.



ஏற்கனவே இது குறித்து கலந்தாலோசிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கான தொழில்நுட்ப வசதிகளை ஏற்படுத்த வேண்டும் எனவும் அவர் கூறினார். இந்தப் பின்னணியிலேயே அதே ஆண்டில் இச்சஞ்சிகை யை கொண்டு வர வேண் டும் என்ற பொறுப்பு என்னிடம் வழங்கப்பட்டது. அதற்குரிய பெயர் என்னவென்று நாம் கலந்தாலோசித்தோம்.

ஆல இம்ரானின் 109 வசனத்தில் இடம்பெறும் 'றப்பானி' எனும் அறபுச் சொல்லை அதற்கு வைக்கலாமா என்று யோசித்தோம். 'றப்பானி' என்றால் அல்லாஹ்வைச் சார்ந்திருப்பவன் என்று கருத்து. ''நீங்கள் வேதத்தை கற்றுக் கொடுப்பதன் மூலம் கற்பதன் மூலம் அல்லாஹ்வைச் சார்ந் திருங்கள் என்று அந்த வசனம் கட்டளையிடுகின்றது.

எனினும், அறபுச் சொல் என்பதனாலும் சற்று வித்தியாசமாக உள்ளது என்பதனாலும் அதை விட வேறொரு பெயரை நாம் தேடினோம். ஸூறா அஸ்ஸாரியாத்தில் இடம்பெறும் ''அல்லாஹ்வின் நேர்வழியை நோக்கி விரையுங்கள். நிச்சயமாக நான் உங்களுக்கு வந்த மிகத் தெளிவான எச்சரிக்கையாளன் ஆவேன்'' என்ற வசனத்திலுள்ள 'அல்லாஹ்வை நோக்கி விரைதல்' என்ற சொற்தொடர் எமது கவனத்தைப் பெரிதும் கவர்ந்தது.

உலக வாழ்வின் மதி மயக்கங்களிலிருந்து விடுபட்டு அல்லாஹ்வை நோக்கிப் பயணிப்பதே மனித வாழ்வின் மகத்தான இலட்சியம் என்று அந்த வசனம் பேசுகின்றது. எனவே பயணம் என்ற பெயர் எமது சஞ்சிகைக்கு மிகப் பொருத்தமானதாக இருக்கும் என்று தீர்மானித்தோம். இதன் பின்னணியிலேயே 2001 நவம்பர் மாதம் ஆன்மீக அமர்வுகளுக்கான இதழ் பயணம் என்ற பெயரில் வெளிவந்தது.

அப்போது அதற்கென ஆசிரியர் பீடம் ஒன்று இருக்கவில்லை. ஆசிரியர் தலைப்பை உஸ்தாத் எழுதியதோடு, பொறுப்பாசிரியராக நான் நியமிக்கப்பட்டேன். ஆரம்ப இதழ்கள் பெரும்பான்மையும் அறபு நூல்களிலிருந்தான மொழிபெயர்ப்பையே தாங்கி வந்தது. உஸ்தாத் மன்ஸூர், கேகாலை அப்துர் ரஹீம், மன்னார் முஹம்மத் அஸ்ஹர், அப்துல் ஹமீத் ஆகியோர் முதல் இதழின் மொழிபெயர்ப்பில் உதவினர்.

அஹ்மத் முஹம்மத் ராஷிதின் முன்தலக் மற்றும் மதாரிஜுஸ் ஸாலிகீன் ஆகிய நூல்களை உஸ்தாத் மொழிபெயர்க்கத் தொடங்கினார். ஆரம்ப இதழ்களின் தட்டச்சுப் பணிகளில் முழுப் பங்கெடுத்தவர் சகோ. பர்ஸான். முதல் இதழின் அட்டையை வடிவமைத்தவர் சகோதரர் பைஸல் மதனி. இவர்களையெல்லாம் இப்போது நன்றியுடன் நினைவுகூர வேண்டும்.

அப்போது ஒரு பத்திரிகையோடு பயணம், வைகறை, சர்வதேசப் பார்வை ஆகிய சஞ்சிகைகளை கொண்டு வர வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கான முழுப் பொறுப்பும் என்னிடம் விடப்பட்டது. பயணம் சஞ்சிகையின் முதல் 15 இதழ்கள் வரை நானே அதன் பொறுப்பாசிரியராக இருந்தேன்.

அறிவை இஸ்லாமியமயப்படுத்தல் எனும் எனது நளீமிய்யா பட்டப் படிப்புக்கான ஆய்வுக் கட்டுரை ஆரம்பத்தில் வெளிவந்தது. பின்னர் யூஸுப் அல் கர்ளாவி அவர்களின் ஐனல் ஹழல் எனும் நூலை மொழிபெயர்த்தேன். ஜமால் ஷத்தி, அப்துல் ஹமீத் பிலாலி, முஹம்மத் அல் கஸ்ஸாலி போன்றோரின் அநேக ஆக்கங்களை அதில் மொழிபெயர்க்க முடிந்தது.

50 ஆவது இதழை எட்டவுள்ள பயணம் 15 ஆண்டுகால எமது ஊடகப் பயணத்தில் முக்கியதோர் திருப்பம். தொடர்ந்தும் பயணம் வெற்றிப் பயணமாக அமைய பிரார்த்தனைகள்.

அபூ ஆகிப் ஸெய்ன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு - கிழக்கு... (1ம் பக்கத் தொடர்)



இந்த நிலையில் தமிழ் முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டு புதிய அரசியல மைப்பை அர்த்தமாக்குவர் என்று மு.கா. தலைவர் சொல்லியிருப்பது தமிழர் தரப்புக் கோரிக்கையுடன் முஸ்லிம்கள் உடன்படுகிறார்கள் என்பதாகவே அமைவதாக பேசப்படுகிறது.

தமிழர் தரப்பின் இணைந்த வட கிழக்கு, சமஷ்டி கோரிக்கைகள் பற்றி முஸ்லிம் காங்கிரஸ் இதுவரை எந்தக் கருத்துக்களையும் வெளியிடாத நிலையில் ஒன்றுபட்டு முழுமையான ஆதரவு வழங்குவது என்பது தமிழரின் இந்தக் கோரிக்கைகளை அங்கீகரிப்பது தான் எனவும் பரவலாகப் பேசப்படுகிறது.

இலங்கையை இரண்டு மாநிலங்களாகப் பிரிப்பது தொடர்பில் வட மாகாண சபையில் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் தென்னிலங்கையில் சர்ச்சைகளை ஏற்படுத்தி வருகின்றன. வடக்கும் கிழக்கும் இணைந்து ஒரு மாநிலமும், ஏனைய பிரதேசங்கள் ஒரு மாநிலமாகவும் பிரிக்கப்பட்டு, வட-கிழக்கு மாநிலத்தில் முஸ்லிம்களுக்கென தனியான பிராந்திய சபையும், அடுத்த மா நிலத்தில் மலையகத் தமிழருக்கென மலையக கவுன்ஸிலும் உருவாக்கப்பட வேண்டும் என அந்த யோசனைகள் கூறுகின்றன.

ஆனால் மலையக மக்கள் ஏனைய சமூகங்களுடன் ஒற்றுமையாக வாழ்வதாகவும், தமக்கு தனியான கவுன்ஸில் அமைக்க வேண்டிய அவசியமில்லை எனவும் அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார். இது தொடர்பிலும் மு.கா. எந்தவிதக் கருத்துக்களையும் முன்வைக்கவில்லை என்பது முஸ்லிம் சமூகத்தின் கருத்துக்களைப் புறந்தள்ளிவிட்டு, தமிழர் தரப்புக் கோரிக்கைகளை மு.கா. ஏற்றுக் கொண்டிருப்பதாகவே அமைகி றது என முஸ்லிம் சமூகத்துக்கு மத்தியில் பலத்த சந்தேகம் நிலவி வருகின்றது.

## எல்லை நிர்ணய... (1ம் பக்கத் தொடர்)



கடந்த எல்லை நிர்ணயத்தில் சிக்கல் இருப்பதை சகல கட்சிகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. இதில் பாரிய சிக்கல் இருந்தது எனவும் அவர் தெரிவித்தார்.

எல்லை மீள்நிர்ணயம் தொடர்பாக மக்களது முறைப்பாடுகள் கோரப்பட்டிருந்த நிலையில், உத்தேச வரைபிலுள்ள 4833 வட்டாரங்களில் 1885 வட்டாரங்கள் தொடர்பில் கடந்த மாதம் வரை முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்தன.

வட்டாரங்களின் எல்லையும் இணைப்பும், வட்டாரங்களின் பெயர், இலக்கங்களின் மாற்றங்கள் தொடர்பில் அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இனங்களின், குறிப்பாக தமிழ் முஸ்லிம் இனங்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கின்ற வகையில் எல்லை மீள்நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதான ஏராளமான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

தமிழ் முஸ்லிம் பெரும்பான்மையாக உள்ள பிரதேசங்களை சிங்களப் பிரதேசங்களுடன் இணைக்கின்றதான முறைப்பாடுகள் கம்பஹா மாவட்டத்தின் அத்தனகல்ல, மொனராகல மாவட்டத்தின் மெதகம, அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை, வவுனியா மாவட்டத்தின் செட்டிக்குளம் போன்ற பிரதேசங்களில் இருந்து கிடைக்கப் பெற்றுள்ளன.

குறித்த இனத்துக்கு அதிக பிரதிநிதித்துவம் கிடைக்கும் வகையில் எல்லை நிர்ணயித்தல், குறித்த கட்சியொன்றுக்கு பலம் சேர்க்கும் வகையில் நிர்ணயித்தல், பல்லினத் தன்மை பேணப்படாமை, மலை,பாதை, வனம் போன்ற பூகோள விடயங்கள் கவனத்தில் கொள்ளப் படாமல் பிரித்தல் (அம்பாந்தோட்டை, குருநாகலை, அநுராதபுரம் போன்ற பிரதேசங்கள்), பிரிப்பின் போது பொருளாதார அபிவிருத்தி விவகாரங்கள் கவனத்தில் கொள்ளப்படாமை போன்ற பல விடயங்கள், குறித்த எல்லை மீள்நிர்ணயம் தொடர்பில் மக்களால் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் நடத்தப்படுவது தாமதமடைவதாக கட்சிகளும் அமைப்புகளும் எமக்கு குற்றம் சுமத்தலாம். ஆனால் அவை எல்லை நிர்ணய நெருக்கடிக்கு என்ன தீர்வு முன்வைத்துள்ளன? எனவும் அமைச்சர் கேள்வியெழுப்பினார்.

## ஹம்பாந்தோட்டை... (1ம் பக்கத் தொடர்)

ஹம்பாந்தோட்டையிலுள்ள காதி நீதிமன்றம் மூடப்படுமானால் இப்பிரதேச மக்கள் 50 கிலோ மீட்டர்கள் பயணம் செய்ய வேண்டிய இக்கட்டுக்கு ஆளாவார்கள். சிங்கள-முஸ்லிம் கலப்புத் திருமணங்கள் அதிகமாக நடைபெறும் இந்தப் பிரதேசத்தில் காதி நீதிமன்றம் இல்லாது போனால் பல்வேறுபட்ட சமூகப் பிரச்சினைகள் தலையெடுக்கவும் வாய்ப்புக்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

நாடு முழுவதும் தற்போது 65 காதி நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. ஹம்பாந்தோட்டை காதி நீதிமன்றம் மூடப்படும் பட்சத்தில் ஒரு காதி நீதிமன்றத்தை முஸ்லிம் சமூகம் இழந்து விடுவதற்கும் வாய்ப்பு ஏற்படுகிறது.

இதேவேளை அனுராதபுர, பேருவல, காத்தான்குடி, கேகாலை, குருநாகல, நீர்கொழும்பு, ஓட்டமாவடி, புல்மோட்டை, இரத்தினபுரி, தும்பானை (கண்டி) பிரதேசங்களுக்கான காதிகளுக்கான விண்ணப்பங்களும் தற்போது கோரப்பட்டுள்ளன. இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி ஜூன் மாதம் 15 ஆம் திகதியாகும்.

## சீனாவுடனான... (1ம் பக்கத் தொடர்)



நடைபெற்றிருந்தன. இந்த நிலையிலேயே தற்போது சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கான பேச்சுவார்த்தைகள் இடம் பெறவுள்ளன. இரு நாட்டு வர்த்தக வரலாற்றில் கடந்த வருடம் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான வர்த்தகம் நான்கு பில்லியன் அமெரிக்க டொலரை கடந்திருந்தது. இது கடந்த 2014 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட 3.58 பில்லியன் அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில் 17 சதவீத அதிகரிப்பாகும்.

அதேபோல் கடந்த வருடத்தில் 93 சதவீதத்திற்கு அதிகமான இறக்குமதி சீனாவில் இருந்த மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## தகவல் அறியும்... (1ம் பக்கத் தொடர்)

நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பதாக சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார். நல்லாட்சி அரசின் நூறுநாள் திட்டத்தில் வாக்களிக்கப்பட்ட தகவல் அறியும் உரிமை 2015 டிசம்பரில் அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்று இவ்வருடம் மார்ச் 24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. மக்களுக்கு தகவல் அறியும் உரிமையை வழங்குகின்ற இந்தச் சட்டம் தொடர்ந்தும் இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டே வருகிறது.

## சலக பிரஜைகளுக்கும்... (3ம் பக்கத் தொடர்)

சிறுபான்மைச் சமூகப் பெண்கள் முகம்கொடுக்கின்ற இத்தகைய யதார்த்தங்களைப் புரிந்துகொள்வதற்கு அவசியமான முயற்சிகளை எடுக்குமாறு அரசியல் மற்றும் சமூகத் தலைமைகளிடம் பெண்கள் அமைப்புகள் வேண்டுகோள் விடுக்கின்றன.

அத்தகைய புரிந்துணர் வின் அடிப்படையில் உரிமைகள் மீறப்படுவது தொடர்பிலான பிரச்சினையை இன்னும் பரந்தளவில் மேலெழச் செய்ய முடிகிறது. இவ்வகையில் அரசியல் மற்றும் சமூகத் தலைமைகளிடம் மேற்குறித்த விவகாரம் தொடர்பில் புரிந்துணர்வையும் இரக்க குணத்தையும் வேண்டுவதோடு, கலாச்சாரத்தோடு ஒட்டிய உணர்வுபூர்வ நிலையை முக்கியமான கேள்விகளை முன்வைக்காமல் இருப்பதற்குரிய பாதுகாப்பொன்றாக பயன்படுத்திக் கொள்ளக்கூடாது என்பதையும் நாம் தெளிவுபடுத்துகிறோம். நாட்டிலுள்ள எந்தவொரு பிரஜையினதும் மனித உரிமைகள் தொடர்பிலான பிரச்சினையொன்று மேலெழு கிறபொழுது அப் பிரஜைகளினது இன, மத வகுப்பு அல்லது ஆண் பெண் வேறுபாடுகளை கருத்திற்கொள்ளாமல் அப் பிரஜைகளையும் சமமாகப் பார்க்கின்ற வகையில் சட்டங்களை விருத்தி செய்வது சகல மக்கள் பிரதிநிதிகளினதும் பொறுப்பாக உள்ளது.

## பேராசிரியர்...

(15ம் பக்கத் தொடர்)

அல்லாமா உவைஸ் அவர்களுக்கு ஜன்னத்துல் பிர்தௌஸ் கிடைக்க பிரார்த்திப்போம். அல்லாமா உவைஸ் அவர்களைப் பற்றி மறைந்த தமிழ் பேரறிஞர் பேராசிரியர் கார்திகேசு சிவதம்பி இவ்வாறு கூறுகிறார். 'இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு உவைஸ் எனும் வாய்க்கால் வழியாகவே ஓடி வளம் பெருக்கியது. உவைஸ் அவர்களின் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய அறிவு வரன்முறையான தமிழ் அறிவு எனும் அடித்தளத்தில் இருந்து கட்டியெழுப்பப்பட்டதாகும். காலத்துக்கு முற்பட்ட தமிழ் இலக்கிய, தமிழ் இலக்கண பாரம்பரியத்தில் உவைஸ் அவர்களுக்கு ஆழமான ஈடுபாடு உண்டு.

உவைஸ் அவர்களின் தமிழ்ப் புலமை சுடர் விடுவதற்கு அவரிடத்துள்ள மூன்று மனித பண்புகள் மிக மிக முக்கியமானதாகும். முதலாவது அறிவடக்கம், இரண்டாவது தொடர்ந்து படிக்க விரும்புதல், மூன்றாவது தன் ஆசிரியர்பால் கொண்டுள்ள மதிப்பு. இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆய்வுகள் பற்றிய ஞாபகம் வரும் போது பல தெய்வ வழிபாட்டுக்குப் பழக்கப்பட்டுப் போன தமிழ்ப் பாண்பாட்டில் ஏக தெய்வ கொள்கையை எடுத்துக் கூற இஸ்லாமிய இலக்கியங்கள் தொழில்பட்டுள்ள முறைமை நினைவுக்கு வருகின்றது. தமிழ் இலக்கிய வரலாறு நன்றியுடன் போற்ற வேண்டிய பெயர்களுள் ஒன்று பேராசிரியர் ம.மு. உவைஸ் ஆகும்.'

நன்றி:
www.ashroffshihabdeen.blogspot.com

## கொழும்பில்...

(1ம் பக்கத் தொடர்)


அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்தவுடன் ஒன்பது மாதங்களில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு, மூன்று வருடங்களில் பூரணப்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

செலவு அதிகம் என்பதனால் இந்தத் திட்டம் கடந்த அரசினால் கைவிடப்பட்டு, இதற்குப் பதிலாக மின்சார ரயில்களை ஓடவிடும் திட்டம் முன்மொழியப்பட்டிருந்தது.

இந்த ஒற்றைத் தண்டவாளம் மாலபேயில் ஆரம்பித்து, தலாஹேன,தேசிய வைத்தியசாலை, யூனியன் பிளேஸ், உலக வர்த்தக மையம், கொழும்பு கோட்டை ஊடாக கொட்டாஞ்சேனையை வந்தடையும். ஜப்பானின் JICA நிறுவனம் இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதாக இருந்தது. இந்தத் தண்டவாளத்துக்கென ஒரு கிலோ மீட்டருக்கு 55-57 மில்லியன் டொலர் செலவாகுமென மதிப்பிடப்பட்டிருந்தது.

## அரசியல்...

(1ம் பக்கத் தொடர்)



வகையில் மக்கள் விடுதலை முன்னணி தமது சர்வதேச பலத்தை பயன்படுத்த தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது சர்வதேச நாடுகளுக்கு பயணமாகியுள்ள ஜே.வி.பி.யின் உறுப்பினர்கள் சர்வதேச அமைப்புகள், சர்வதேச மட்டத்தில் இயங்கிவரும் இலங்கை வாழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகள் மற்றும் அந்நாட்டு அரசியல் பிரதானிகளையும் சந்தித்து பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளனர்.

## புதிய வரி... (4ம் பக்கத் தொடர்)

என்பதை ஒப்புவிப்பதில் ஜனாதிபதி சிறிசேன அவர்கள் முழுமையாகவே தோற்றுப் போயுள்ளார்.

தன்னை அதிகாரத்திலிருந்து கவிழ்ப்பதற்கு தனது எதிரிகள் கைக்கொள்ளும் முயற்சிகளுக்கு முகம்கொடுப்பதற்கு பிரஸீல் ஜனாதிபதி டில்மா ரூசொப் இதுவரையிலும் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியுற்றமைக்கான காரணம் இரண்டாவது பதவிக் காலப் பகுதியில் முன்னெடுத்த பொருளாதார கொள்கையினால் அவருடைய ஆதரவாளர்கள் பாதிக்கப்பட்டமையாகும். அதனால் பெரும்பாலான ஆதரவாளர்களின் கட்சி சார்பு தன்மைகள் அவருக்குக் கிடைக்காமல் போனது. நாணய நிதியத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் உருப்பெற்றுள்ள புதிய வரி ஒழுங்குகள் செயற்படுத்தப்பட்டால் ஜனாதிபதி சிறிசேன அவர்களும் குறிப் பாக சுதந்திரக் கட்சிக்குள் இத்தகைய நிலைக்கே தள்ளப்படுவார்.

அத்தகையதொரு எதிர்காலம் உருவாவதை தடுப்பதற்குரிய சந்தர்ப்பங்கள் உள்ளன. பிரச்சினை என்னவெனில் அதற்கு அவசியமான அரசியல் பலம் சிறிசேன-விக்கிரமசிங்க அரசாங்கத்திற்கு இருக்கின்றதா என்பதாகும்.

## அரசாங்கத்திற்கு... (7ம் பக்கத் தொடர்)



அத்தோடு எதிர்வரும் தேர்தலில் வெற்றி பெறுவது யார் என்கின்ற பிரச்சினையும் உள்ளது. அதிலும் குறிப்பாக சுதந்திரக் கட்சிக்குள் உட்கட்சிப் பூசல்கள் வலுத்துள்ளன. அதன் காரணமாக அரசாங்கம் நாட்டு நலனைக் கருத்திற் கொள்ளாமல் தமது அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்வதற்கு சந்தர்ப்பவாதியாக நடந்து கொள்கிறது. அதன் நிமித்தம் உறுப்பினர்களுக்கு பதவி இலஞ்சங்களை வழங்கி அவர்களை தம்மிடம் வைத்துக்கொள்ள வேண்டியதொரு நிலை உருவாகியுள்ளது.

ஆனால் அவ்வாறு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அரசாங்கம் சிறந்த முறையில் மக்கள் நலத் திட்டங்களை முன்னெடுத்து வந்தால், மக்களின் ஒத்துழைப்பு இயல்பாகவே அரசுக்கு கிடைக்கும். அரசாங்கத்திலுள்ள இரண்டு கட்சிகளும் அடுத்த கட்சியை மிதித்துக் கொண்டு மேலெழுவதற்கு முயற்சிக்கக் கூடாது. பொது மக்களுடைய எதிர்பார்ப்புக்களை எவ்வாறு நிறைவேற்றிக் கொடுப்பது என்பது பற்றியே அக்கட்சிகள் அவதானம் செலுத்த வேண்டியுள்ளன.

- **கடந்த அரசாங்கத்தை காட்டிலும் இவ்வரசாங்கத்திலும் காண முடியுமாக உள்ள முன்னேற்றகரமான அடையாளங்கள் என்ன?**

இவ்வரசாங்கத்திடம் பல நல்ல செயற்பாடுகள் உள்ளன. உதாரணத்திற்கு கடந்த அரசாங்கத்தின் வெளிநாட்டு கொள்கையை விடவும் இவ்வரசாங்கத்தின் வெளிவுறவுக் கொள்கை தொடர்பில் எமக்கு திருப்திப்பட முடிகின்றது. தற்பொழுது ஆசியா, ஐரோப்பா போன்ற எல்லா இடங்களிலும் எமது நாட்டிற்கு தோழர்கள் உள்ளார்களே ஒழிய, எதிரிகள் இல்லை என்று குறிப்பிடலாம்.

தற்பொழுது இலங்கை அரசாங்கம் தொடர்பில் எவரும் எதிர்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்வதில்லை. முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் காலத்திற்கு பின்னர் நாடு சர்வதேச ரீதியில் தற்பொழுது நல்ல வழியில் பயணித்துக் கொண்டுள்ளது.

## நபிகளாரும்... (6ம் பக்கத் தொடர்)

ஒரு பொருளாதார முறைமை கட்டியெழுப்பப்படுவதற்கு தேவையான அத்தனை அம்சங்களையும் மிக எளிமையான அரபு மொழியில் அனைவராலும் புரிந்துகொள்ள முடியுமான விதத்தில் தெளிவாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பேசியிருக்கின்றார்கள். அவரது பொருளாதார சிந்தனைகளும் கருத்துக்களும் ஏன் இந்தப் பெரும்பான்மை சமூகத்தை அடையவில்லை என பல மணி நேரம் நான் தனிமையில் நின்று சிந்தித்ததுண்டு.

வாழ்வியல் கலைகள் அனைத்தினதும் மூலம் நபிகளாரின் எளிமையான வாழ்விலிருந்து பெறப்பட்டவை என நான் ஆழ விசுவாசிக்கின்றேன். பொருளியல் அதற்கொன்றும் விதிவிலக்கல்ல. அதன் அஸ்திவாரத்தை ஸ்திரமாகப் போட்டவர் நபிகள் நாயகமே. ஆனால் அதனை தனிக்கலையாக அறிமுகப்படுத்தி தனது தோழர்களுக்கு பாடம் நடாத்தும் வேலையை நபிகளார் ஒருபோதும் செய்யவில்லை. வாழ்வில் எதிர்கொண்ட பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிகாட்டல்களை அவ்வப்போது நபிகளார் வழங்கிக் கொண்டேயிருந்தார்.

பொருளாதாரம் தொடர்பான அப் போதனைகளை பொறுக்கியெடுத்து கோர்வையாக்கினால் மேற்குலகு உருவாக்கியிருக்கின்ற பொருளியல் கலையை மூட்டை கட்டி கடலில் எறிய



நேர்ந்தால்கூட வியப்பேதுமில்லை. நபிகளாரின் இச்சிந்தனைகளுக்கு கலை வடிவம் கொடுக்கும் பணியை நான் இங்கு மேற்கொள்ளவில்லை. மாறாக இன்று நவீனம் கூறும் பொருளியல் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்பு நபிகளார் தனது வாழ்வில் கடைபிடித்த அம்சங்களையும் வழங்கிய போதனைகளையும் என்னால் முடிந்தளவு இலகு தமிழில் கோர்வையாக்கும் முயற்சியையே நான் இங்கு மேற்கொள்கின்றேன்.

பேரினப் பொருளாதார இலக்குகளாக பின்வரும் அம்சங்களை நவீன அறிஞர்கள் முன்வைக்கின்றனர். மனித அறிவு குறைகள் நிறைந்தது என்பதால் காலவோட்டத்தில் இவற்றோடு இன்னும் பல இலக்குகள் சேர்த்துக் கொள்ளப்படலாம் அல்லது இவற்றிலிருந்து சிலவை நீக்கப்படலாம். அவையாவன:

1. குறிப்பிட்டு சொல்லப்படக் கூடிய பொருளாதார பிரச்சினைகளில் எதிர்கால சந்ததிகள் மாட்டிக் கொள்ளாத விதத்தில் தொடர்ந்தேர்ச்சையான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துதல்.
2. நிறைதொழில் மட்டத்தை எய்தல்.
3. விலை உறுதிப்பாட்டைப் பேணல்.
4. பொருளாதார ஏற்றத் தாழ்வைக் குறைத்தல்.
5. வினைத்திறனை அதிகரித்து உள்ளீடுகளுக்கான வெளியீடுகளை அதிகரிக்கச் செய்தல்.
6. வெளிவாரிச் சமநிலையை பேணுதல்

மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | - ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | - 4000.00 | ஐக்கிய இராச்சியம் | - 5500.00 |
| 13 இதழ்கள் | - ரூபா 650.00 | தனிப் பிரதி | - ரூபா 100.00 | மலேசியா | - 4000.00 | அமெரிக்கா | - 6500.00 |
| 26 இதழ்கள் | - ரூபா 1300.00 | ஒரு வருடம் | - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | - 4000.00 | அவுஸ்திரேலியா | - 4700.00 |
| | | | | | | சீனா | - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 077 9207569 People's Bank A/c: 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அவன் காலையில் எழும்பவில்லை

ஜோர்ஜ் ஒரு சாரதியாக இருந்தான். எனவே, அவனுடைய அதிகமான நேரம் வாகனம் செலுத்துவதிலே கழிந்தது. அத்துடன், அவன் வேறொரு சிறந்த தொழிலை பெற்றுக்கொள்வதற்காக கணக்கியல் வகுப்பொன்றுக்கும் சென்று கொண்டிருந்தான். இதனால் குடும்பத்துடன் நேரத்தை செலவிட முடியவில்லை.

அவனது மனைவியும் பிள்ளைகளும் தம்மை கவனிப்பதில்லை, தம்முடன் ஒன்றாக உணவு சாப்பிடுவதில்லை என அவனிடம் முறையிட்டனர். அதற்கவன், இவையனைத்தையும் உங்களுக்காகவே செய்கின்றேன். உங்களை நன்றாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு கஷ்டப்படுகின்றேன் என்றான்.

ஜோர்ஜ் கணக்கியல் கற்கைநெறியில் பரீட்சை எழுதி சிறந்த முறையில் சித்தியடைந்தான். அவனுக்கு நல்ல தொழிலொன்றும் கிடைத்தது. சம்பளமும் முன்னரைவிட அதிகமாகவே இருந்தது. இப்போது அவன் தனது மனைவி பிள்ளைகளுக்கு பெறுமதியான ஆடைகளை வாங்கி கொடுத்தான். சிறந்த உணவுகளை வாங்கிகொடுத்தான். எனினும், அவனுடைய மனைவியும் பிள்ளைகளும் இப்போதும் சந்தோஷப்படவில்லை. ஏனெனில், அவன் தனது தொழிலில் உயர் தகைமையை அடைவதற்காக கடுமையாக உழைத்ததுடன், படித்தும் கொண்டிருந்தான். இதனால் அவனுக்கு குடும்பத்துடன் நேரத்தை கழிக்க முடியவில்லை.

நாட்கள் நகர்ந்தன. ஜோர்ஜ் பதவி உயர்த்தப்பட்டான். சம்பளம் அதிகரித்தது. எனவே, அவன் தனது மனைவிக்கு வீட்டு வேலைகளிலிருந்து ஓய்வளிக்க விரும்பினான். வீட்டு வேலைகளுக்காக பணிப்பெண் ஒருத்தியை நியமித்தான். அவன் இருக்கும் வீட்டில் இடவசதி போதாது என நினைத்தான். எனவே, இன்னும் ஒரு நல்ல வீடு வாங்குவதற்காக கடுமையாக உழைத்தான். தனது கல்வியையும் தொடர்ந்தான். அவனது மனைவி, பிள்ளைகள் தம்மோடு அவன் நேரத்தை செலவழிப்பதில்லை என முறையிட்டால், அவன் சொல்வான் இவையனைத்தையும் உங்களுக்காகவே செய்கின்றேன்.

இன்னும் சில வருடங்கள் கடந்தன. ஜோர்ஜ் மீண்டும் பதவி உயர்த்தப்பட்டான். அவனது விருப்பம் போல சில மாதங்களிலே அழகிய வீடொன்றை வாங்கினான். அவ்வீட்டிற்கு சென்றதன் பின்னர் வந்த முதலாவது ஞாயிற்றுக்கிழமையில் தனது மனைவியிடமும் பிள்ளைகளிடமும் இதன் பிறகு நான் கல்வி கற்க போவதில்லை, கடுமையாக உழைக்கப்போவதுமில்லை. மாலையில் நேரகாலத்துடன் வீட்டுக்கு வந்துவிடுவேன். வார இறுதி நாட்களில் வீட்டிலே இருப்பேன் என்றான். அன்றிரவு அனைவரும் மகிழ்ச்சியாக உறங்கினர். அடுத்த நாள் காலையில் அவன் மீண்டும் எழும்பவில்லை.

## நீங்கள்தான் விட்டுவிட வேண்டும்



ஒரு குடிகாரன் அறிஞர் ஒருவரைத் தேடி அவர் இருக்குமிடத்துக்கு வந்தான். 'நானொரு குடிகாரன். நான் திருந்துவதற்கு ஒரு வழி கூறுங்கள்' என்று கேட்டுக் கொண்டான்.

அதற்கு அறிஞர், 'நாளை மாலை என்னை வந்து பார் சொல்கிறேன்'. என்றார்.

மறுநாள் மாலை குடிகாரன் அறிஞரைத் தேடி வந்தான். அப்போது ஞானி ஒரு தூணைக் கட்டிப் பிடித்துக் கொண்டு நின்றார். தூணைப் பார்த்து, 'என்னை விட்டுவிடு... விட்டுவிடு...' என்று கத்திக் கொண்டிருந்தார். உடனே குடிகாரன், 'நீங்கள்தானே தூணைப் பிடித்துக் கொண்டிருக்கிறீர்கள்? அதை விட்டு விடுங்கள்' என்றான்.

உடனே அறிஞர் சிரித்துக் கொண்டே, 'நான் தூணைப் பிடித்துக் கொண்டிருப்பது போல, நீ தான் குடியைப் பிடித்துக் கொண்டிருக்கிறாய். நீயே விட்டுவிடு' என்றார்.

student @ மீள்பார்வை

தொகுப்பு: ஏ.ஸீ.எம். நதீர்

## அவரவர் எண்ணம் போல

மத்தியான வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது. மரத்தடியில் ஒருவன் நன்றாக உறங்கிக்கொண்டிருந்தான். அந்த வழியாக வந்த விறகுவெட்டி அவனைப் பார்த்தான்.

''கடுமையான உழைப்பாளியாக இருக்க வேண்டும். உழைத்த களைப்பால் தான் இந்த வெயிலிலும் இப்படி உறங்குகிறான்.'' என நினைத்துக் கொண்டே சென்றான்.

அடுத்ததாக திருடன் ஒருவன் அந்த வழியாக வந்தான். ''இரவு முழுவதும் கண்விழித்து திருடி இருப்பான் போல தெரிகிறது அதனால்தான் இந்த சுட்டெரிக்கும் வெயிலிலும் அடித்துப் போட்டது போல் தூங்குகிறான்'' என நினைத்துக் கொண்டே சென்றான்.

மூன்றாவதாக குடிகாரன் ஒருவன் அந்த வழியாக வந்தான்.

''காலையிலேயே நன்றாக குடித்துவிட்டான் போல இருக்கிறது. அதனால்தான் குடிமயக்கத்தில் இப்படி விழுந்து கிடக்கிறான் என நினைத்துக்கொண்டே சென்றான்.

சிறிது நேரத்தில் வணக்கவாளி ஒருவர் வந்தார். இந்த நண்பகலில் இப்படி உறங்கும் இவர் இரவு முழுவதும் தொழுதிருப்பார். வேறுயாரால் இத்தகைய செயலை செய்ய முடியும்'' என நினைத்துக் கொண்டு சென்றார்.



## என்னால் முடிந்தது

### கல்லூரியில் கணித வகுப்பு

உலகின் பெரிய கணித மேதைகளால் தீர்க்க முடியாத இரண்டு கணக்குகளை பலகையில் எழுதிய ஆசிரியர், அவை இன்றும் புரியாத புதிர் என்றார்.

சற்று தாமதமாய் அந்த மாணவன் வந்தான். அதற்குள் வகுப்பு முடிந்திருந்தது. அந்தக் கணக்குகளை வீட்டுப் பாடங்கள் என்று நினைத்து குறித்துக்கொண்டு போனான். மறுநாள் விடையுடன் வந்தான். அந்த சம்பவத்தாலேயே உலகப் புகழ்பெற்ற அந்த மாணவன்தான் ஜோர்ஜ்.

அந்த சம்பவத்துக்கு அவர் தந்த விளக்கம், ''அது யாராலும் முடியாது என்று எனக்குத் தெரியாது. எனவேதான், என்னால் முடிந்தது''.

## வெற்றியடைவதற்கான 3 வழிமுறைகள்

★ வாழ்வின் அனைத்து நிலைகளிலும் சந்தர்ப்பங்களிலும் அல்லாஹ்வின் உதவியை நாடுவது மிக முக்கியமானதாகும். அவன் கடமையாக்கியவற்றை நிறைவேற்றுங்கள். அவனுக்கு திருப்தியளிக்க கூடியவற்றை செய்யுங்கள். அவனது வெறுப்புக்குரிய விடயங்களை முற்றாக தவிர்ந்திடுங்கள். அதிகாலையில் எழுந்து, சுபஹ் தொழுகையை நிறை வேற்றுங்கள். அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துங்கள்.

★ பெற்றோரின் துஆக்களை கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள். அவர்களது துஆ வலிமையானது.

★ வாழ்க்கையின் ஒவ்வொரு விடயத்தையும் திட்டமிடுங்கள். எந்தவொரு விடயத்தையும் முன்ஆயத்தமின்றி செய்யாதீர்கள்.

---

## இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆளுமை

## பேராசிரியர் அல்லாமா ம.மு.உவைஸ்

டாக்டர். தாஸிம் அகமது



வாழ்வோரை வாழ்த்துவோம் எனும் மகுடத்தின் கீழ் இலங்கை கலை இலக்கிய கர்த்தாக்களை கௌரவித்து வரலாறு கண்ட பெருந்தகை கௌரவ ஏ.எச்.எம். அஸ்வர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் ஆவார். முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் அமைச்சராக அவர் இருந்த போது, 1994களில் பேராசிரியர் உவைஸ் அவர்களுக்கு மணிவிழா ஒன்று அவ் அமைச்சினால் கொழும்பில் வெகு விமரிசையாக எடுக்கப்பட்டது. அந்நிகழ்வில் பேராசிரியர் உவைஸ் அவர்களை கௌரவிக்கும் முகமாக மணிவிழா மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. அம்மலரின் ஆசிரியர் கல்விமான் அல்ஹாஜ். எஸ்.எச்.எம். ஜெமீல் ஆவார்.

பாராட்டு, மணிவிழா மலர் வெளியீடு ஆகியவை மண்டபம் நிறைந்த அமைச்சர்கள், அரசியல் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்நாட்டு வெளிநாட்டு இலக்கிய ஜாம்பவான்கள் மத்தியில் நிகழ்ந்தது. அந்நிகழ்வில் நானும் கலந்துகொண்டேன்.

இஸ்லாமியத் தமிழ் இலக்கியத் தேட்டத்தில் பெருவெற்றி கண்டு, அயராது உழைத்து 2000க்கும் மேற்பட்ட இஸ்லாமிய படைப்புக்களை உலகறியச் செய்த பெருமகன் பேராசிரியர் உவைஸ் அவர்கள் அவ் விழாவின் போது மிகவும் அடக்கத்துடன் அமர்ந்திருந்தார். அறிஞர்களின் வாழ்த்துரைகளும், பேருரைகளும் அன்னாரை எவ்வித சலனத்துக்கும் உட்படுத்தவில்லை. அப்பெருந்தகையின் பெரும் சேவை அவ்வாறு பாராட்டி கௌரவிக்கப்பட வேண்டிய ஒன்றே.

பேராசிரியர் ம.மு. உவைஸ் அவர்கள் 1922ம் ஆண்டு கொழும்பு, காலி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள கொறக்கானை எனும் சிற்றூரில் பிறந்தார். தகப்பன் பெயர் மகுமூது லெப்பை தாயார் பெயர் சைனம்பு நாச்சியார் இவ்விருவருக்கும் இவர் ஒரே மகனாவார். ஆரம்ப கல்வியை ஹேனமுல்ல அரசினர் முஸ்லிம் பாடசாலையில் கற்றார். ஆங்கிலக் கல்வியை சரிக்கமுல்லையில் அமைந்திருந்த தக்ஸலா வித்தியாலயத்தில் கற்றார். அதே வித்தியாலயத்தில் சிங்களத்தையும் பாளியையும் பயின்றார். பாளியைக் கற்றதன் விளைவு பிற்காலத்தில் இலக்கிய ஈடுபாட்டுக்கு வழி வகுத்திருக்கலாம். 1938ம் ஆண்டு தமிழ் மொழி மூலம் கல்வி பெற்ற பேராசிரியர் உவைஸ் 1946ம் ஆண்டு பல்கலைக்கழகத்தில் சேரும்வரை தமிழை ஒரு பாடமாக படிக்கும் வாய்ப்பை பெறவில்லை. ஆசிரியர் எவரும் இல்லாமலே தமிழ் கற்க வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது.

1945ம் ஆண்டில் முக்கியமான நிகழ்வு ஒன்று உவைஸ் அவர்களின் வாழ்க்கையில் நடைபெற்றது. அதே ஆண்டில் பல்கலைகழக நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் வாய்ப்பு கிடைத்தது. அந்நிகழ்வு இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றினை தோற்றுவிக்கும் நிகழ்வாகவும் அமைந்திருந்தது. நேர்முகத் தேர்வுக்குழுவில் சுவாமி விபுலானந்தர் அவர்கள் ஒரு உறுப்பினராக இருந்தார். நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்ட உவைஸிடம் சுவாமி விபுலானந்தர் இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய ஒரு காப்பியத்தைக் குறிப்பிடும்படி கேட்டார். உவைஸுக்கும் பதிலளிக்க முடியவில்லை. சீறாப்புராணத்தைப் பற்றி விபுலானந்த அடிகள் அவர்கள் கூறியது உவைஸுக்கு இஸ்லாமியத் தமிழ் இலக்கியத் தேடலுக்கு வித்திடும் சவாலாக மாறியது.

பல்கலைக்கழக விதிமுறைகளின் மாற்றத்துக்கேற்ப பல்கலைக்கழக அனுமதி உவைஸுக்குக் கிடைத்தது. இதற்கு வழிவகுத்த பெருந்தகை சுவாமி விபுலானந்த அடிகளாவார். எனவே இஸ்லாமியத் தமிழ் இலக்கியத் தேடலை முடுக்கிவிட்ட பெருமை தமிழ்த் துறைத் தலைவராயிருந்த சுவாமி விபுலானந்த அடிகளையே சாரும். கலைமாணிப் பட்டப்படிப்பை மேற்கொண்ட உவைஸுக்கு கௌரவப்பட்டம் வழங்கப்பட்டது.

பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர், க. கணபதிப்பிள்ளை ஆகியோரின் வழிகாட்டல்களில் கலை முதுமாணிப்பட்டத்துக்கான படிப்பை உவைஸ் மேற்கொண்டார். முஸ்லிம்கள் தமிழுக்காற்றிய தொண்டு பற்றிய ஆய்வில் உவைஸ் ஈடுபட்டார். அதற்காகத் தமிழகம் செல்லும் வாய்ப்பும் கிட்டியது. இவ் ஆய்வினை உவைஸ், தமிழ் நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் தீக்ஷிதர், போராசிரியர் ஹுஸைன்; நெய்னார் ஆகியோரின் உதவியுடன் மேற்கொண்டார். சீறாப்புராணம் மஸ்தான் சாஹிபு பாடல்களுடன் தொடங்கிய ஆய்வு சுமார் இரண்டாயிரம் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய நூல்களைத் தேடி ஒன்று சேர்த்து ஆய்வு செய்ய காலாக அமைந்து இஸ்லாமியத் தமிழ் இலக்கிய உலகுக்கு அவற்றை வழங்குவதற்கு வழி வகுத்தது. இது ஒரு பெரிய சாதனையாகும். இக்கால கட்டத்தில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய இருக்கை நிறுவப்பட்டது. முஸ்லிம்கள் தமிழுக்காற்றிய தொண்டு எனும் நூலை தயாரிக்கத் தொடங்கினார் பேராசிரியர் உவைஸ் அவர்கள். அது முதுமாணிப் பட்டத்துக்காக இலங்கை பல்கலைக்கழகத்துக்கு சமர்பிக்கப்பட்டு முதுமாணிப்பட்டமும் கிடைத்தது.

முதுமாணிப்பட்டம் கிடைத்த பின்னர், உவைஸ் அவர்களின் திருமணம் நடைபெற்றது. மணமகள் பேருவலையைச் சேர்ந்த சித்தி பாத்துமா ஆவார். இத்திருமணத்தின் மூலம் நான்கு ஆண்மக்களும், ஒரு பெண் மகளும் உள்ளனர். அனைவரும் நல்ல நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அல்ஹாஜ் மா.மு. உவைஸ் அவர்களுக்கு பல்கலைகழக சேவையில் பணியாற்றும் பாக்கியம் கிடைத்தது. வித்தியோதய பல்கலைக்கழகத்தில (இன்றைய ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்) நவீன கீழைத்தேச மொழிகள் துறையின் தற்காலிக தலைவராகவும் பதவியேற்றார். கொழும்பு ஸாஹிராக் கல்லூரியிலும் பணியாற்றினார். பரீட்சை திணைக்கள மொழி பெயர்ப்பாளர், இலங்கை வானொலி இஸ்லாமிய நிகழ்சி தயாரிப்பாளர், இலங்கை அரச கரும மொழி திணைக்கள மொழிபெயர்ப்பாளர் ஆகிய பதவிகளில் பணியாற்றி நிறைந்த அனுபவங்களை பெற்ற அவர், தமிழ் சிங்கள, ஆங்கில மொழி பெயர்ப்பு நூல்களையும் வெளியிட்டார். அவற்றில் குறிப்பிட்டு கூறக்கூடியது. மார்ட்டின் விக்கிரம சிங்கவின் 'கம் பெரலிய' நாவலை 'தமிழ் கிராம பிறழ்வு' எனும் பெயரில் மொழி பெயர்த்தமையாகும்.

இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தின் கருஊலங்கள் உலகறிய பேசப்பட வேண்டும் என 1966ம் ஆண்டு முதன் முதலாக இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அமைந்த மருதமுனை கிராமத்தில் ஒரு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் பற்றி உரத்துப் பேசப்பட்டது. அதைத் தொடர்ந்து பல மாநாடுகள் உலகளாவிய ரீதியில் நடைபெற்று வருகின்றன. 1973ம் ஆண்டு திருச்சியில் முதலாவது இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடு நடைபெற்றது. 1974ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற மாநாட்டில் 'திருச்சித்திருப்பம்' என்ற நூலை உவைஸ் வெளியிட்டார். நான்காவது மாநாடு 1978களில் இலங்கையில் கொழும்பில் நடைபெற்றது. உவைஸ் அதை முன்னோடியாக [illegible] 'முஸ்லிம் தமிழ்க் காப்பியங்கள்' எனும் நூலுக்காக அவருக்கு கலாநிதி பட்டம் வழங்கப்பட்டது. மதுரை காமராச பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய தமிழ் இலக்கியத் துறைக்கான இருக்கை அமைக்கப்பெற்றதும் இந்த கால கட்டத்தில்தான். இஸ்லாமிய தமிழ் இலக்கிய பேராசிரியராக கலாநிதி. ம.மு. உவைஸ் மதுரை காமராச பல்கலைக்கழகத்தில் 1979ம் ஆண்டு ஒக்டோபர் 15ம் திகதி பதவியேற்றார். பதவியேற்றதும் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆய்வில் ஈடுபட்டதன் விளைவாக ஒவ்வொன்றும் 600 பக்கங்கள் கொண்ட 6 தொகுதிகள் வெளியாகின. பேராசிரியர் அஜ்மல்கான் அவருக்கு உறுதுணையாக இருந்தார். சுமார் 55 ஆக்கங்கள் பேராசிரியரின் ஆக்கங்களாக அவரின் வாழ்நாளில் வெளிவந்திருக்கின்றன.

பல்சந்த மாலையில் இருந்து 1950கள் வரையான இஸ்லாமிய இலக்கிய கருவூலங்கள் பல சிரமங்களுக்கு மத்தியில் இவரால் பதிவு செய்யப்பட்டுள்ளன. 1992ம் ஆண்டு தேசிய வீரர் தினத்தில் தேசிய விருது வழங்கி ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ அவர்கள் பேராசிரியர் உவைஸ் அவர்களை கௌரவித்தார். 2 நூல்களுக்கு தமிழக அரசின் பரிசு கிடைத்தது. தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் பல பட்டங்கள் வழங்கப்பட்டு அவர் கௌரவிக்கப்பட்டார். பண முடிப்புகளும் வழங்கப்பட்டன. இவரது தொகுப்பு நூல்களை படிக்கும் போது, தமிழ் இலக்கிய வரலாற்றை முற்று முழுவதுமாக படித்த உணர்வு ஏற்படும். ஒப்பாய்வு வழங்கும் வல்லமை கொண்டவராகவும் உவைஸ் விளங்கினார். இப்பணியை தொடர்ந்து செய்வதற்கு ஒப்பாரும் மிக்காரும் யாரும் இல்லை.

அர்ப்பணிப்பு, அயராத உழைப்பு, சமூகத்தின் மீதும் மொழியின் மீதும் கொண்ட பற்றுதல், பிற மதத்தவர்களுடன் நல்ல முறையுடன் நட்பை பேணல், இஸ்லாமியர் தம் வாழ்வு இலக்கியமாக்கப்பட்ட வரலாற்று ஆய்வு அதன் தொகுப்பு, கடமை தவறாத குடும்ப அக்கறை, இஸ்லாமிய நெறியில் நின்று இம்மியளவும் பிசகாத வாழ்க்கை, எவரது மனதும் நோகாத எளிமையான பண்புகள், ஏனையோரும் பின்பற்றக் கூடிய நடத்தைகள். அருமை, மென்மை, அழகிய குணங்கள், பெருமானாரின் நடைமுறையை பின்பற்றுதல் போன்ற ஆளுமைகள் கொண்டவராக அல்லாமா உவைஸ் காணப்பட்டார். சான்றோனாக வாழ்ந்த இத்தகைய பெருந்தகையை கௌரவிப்பதற்காக அப்போதைய முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சராக இருந்த அல்ஹாஜ். ஏ.எச்.எம். அஸ்வர் அவர்களால் அல்லாமா பட்டம் கொடுப்பதற்கான அரச அங்கீகாரம் பெற்று அவருக்கு வழங்கப்பட்டது. கவிஞர் அல்லாமா இக்பாலுக்கு பிறகு அல்லாமா எனும் பட்டம் கொடுத்து கௌரவிக்கப்பட்ட ஒரே சான்றோன் உவைஸ் ஆவார்.

தனது வாழ்வின் எல்லா பணிகளையும் முடித்துக் கொண்ட கலாநிதி. பேராசிரியர் அல்ஹாஜ். அல்லாமா ம.மு. உவைஸ் அவர்கள் 1996ம் ஆண்டு மார்ச் மாதம் 25ம் திகதி இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். 2016மார்ச் 25ம் திகதி அன்னாரது 20வது நினைவு தினமாகும்.

(பக் 14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இலங்கைக்கு 7ஆவது இடம்



சர்சவதேச கிரிக்கட் கவுன்ஸில் (ஐ.சி.சி) சார்பில் டெஸ்ட் அணிகளுக்கான வருடாந்தப் பட்டியல் வெளியானது. ஒவ்வொரு அணிகளின் செயல் பாடுகள் அடிப்படையில் தரவரிசை புள்ளிகள் மாற்றப்பட்டன.

அவுஸ்திரேலிய அணிக்கு(118) 6 புள்ளிகள் கூடுதலாக வழங்கப்பட, தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறது. 2 புள்ளிகள் அதிகம் பெற்ற இந்திய அணி(112) 2ஆவது இடத்தில் உள்ளது. பாகிஸ்தான் அணி (111) 5 புள்ளிகள் கூடுதலாக பெற்று 3ஆவது இடம் பிடித்தது.

தென் ஆபிரிக்கா(92 புள்ளி,- 17), வெஸ்ட் இண்டிஸ்(65 புள்ளி,- 11) அணிகள் அதிகமான புள்ளிகளை இழந்து 6,8 ஆவது இடங்களுக்கு தள்ளப்பட்டன. இதனால் இங்கிலாந்து(105), நியுசிலாந்து(98) அணிகள் 4,5 ஆவது இடம் பெற்றன. இலங்கை (88) 7ஆவது இடத்தில் உள்ளது. அதிக பட்சமாக 10 புள்ளிகள் கூடுதலாக பெற்ற வங்கதேச அணி(57) 9ஆவது இடம் பெற்றது.

## இங்கிலாந்து பிரீமியர் லீக் கால்பந்து சம்பியனானது லெய்செஸ்டர் சிட்டி



132 ஆண்டு கால இங்கிலாந்து பிரீமியர் லீக் வரலாற்றில் லெய்செஸ்டர் சிட்டி அணி முதன் முறையாக சம்பியன் கிண்ணத்தை வென்றுள்ளது.கடந்த திங்கட்கிழமை செல்சியா மற்றும் டோட்டன்ஹாம் அணிகள் மோதிய போட்டி 2 க்கு 2 என்ற கோல்கள் அடிப்படையில் சமநிலையில் நிறைவடைந்ததை தொடர்ந்து புள்ளிகள் அடிப்படையில் லெய்செஸ்டர் சிட்டி அணி சம்பியன் கிண்ணத்தை தக்கவைத்துள்ளது.

இங்கிலாந்து பிரீமியர் லீக் கால்பந்து தொடரின் இரு போட்டிகள் இன்னும் மீதமிருக்கும் நிலையில் புள்ளிப்பட்டியில் 77 புள்ளிகளுடன் முன்னிலையிலுள்ள லெய்செஸ்டர் சிட்டி அணி டோட்டன்ஹாம் அணியுடன் 7 புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றியை நிலைநாட்டியுள்ளது.

இரண்டாவது இடத்தில் 70 புள்ளிகளுடன் டோட்டன் ஹாம் அணியுடன் மூன்றாம் இடத்தில் 67 புள்ளிகளுடன் ஆர்சனல் அணியும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## அம்லாவுக்கு ஐபீஎல் வாய்ப்பு?



ஐபிஎல் தொடரில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியில் அவுஸ்திரேலியாவின் ஷான் மார்ஷ் இடம்பெற்றிருந்தார்.

இவர் தற்போது கடுமையான முதுகுவலியின் காரணமாக எஞ்சிய போட்டிகளிலிருந்து விலகியுள்ளார். எனவே இவருக்கு பதிலாக தென் ஆப்பிரிக்காவை சேர்ந்த ஹஷீம் அம்லா சேர்க்கப்படலாம் என தெரிகிறது. ஏலத்தின் போது ரூ.1 கோடிக்கு விலை நிர்ணயிக்கப்பட்டிருந்த அம்லா ஏலம் போகவில் லை, அதுமட்டுமின்றி இவர் ஐபிஎல் போட்டியில் விளையாடி யதில்லை.

நல்ல பார்மில் இருக்கும் அம்லா கடைசியாக நடந்த உலகக் கிண்ண டி20 போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

இதுவரையிலும் 7 போட்டிகளில் விளையாடியுள்ள பஞ்சாப் அணி, 2ல் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## கெயிலின் சாதனையை முறியடித்த இராக் தோமஸ்



மேற்கு இந்தியத் தீவுகள் அணியின் அதிரடி வீரர் என்றால் இப்போதைக்கு எல்லோரது நினைவிலும் முதலில் வருவது கிறிஸ் கெய்ல்தான். 23 வயதேயான டிரினிடாட் டொபாகோவைச் சேர்ந்த இராக் தாமஸ்தான் அந்த புதுப் புயல். அட்டகாசமாக ஆடி வருகிறார் இந்த இளம் புயல். அதிலும் டி20 போட்டிகளில் அதி வேக சதம் போட்ட கெய்லின் சாதனையையும் இவர் முறியடித்துள்ளார். 21 பந்துகளில் சதத்தைப் போட்டு அசத்தியுள்ளார் தாமஸ். எனவே லாரா போல தாமஸும் கிரிக்கெட் உலகில் அதிரடியாக அசத்துவார் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

## அணியின் எழுச்சிக்கு இன்னும் ஒரு வருடமாவது தேவை

### ஜெஹறான் முபாரக்



சமீப காலமாக இலங்கை அணியின் செயல்பாடு கடுமையான விமர்சனங்களை சந்தித்து வருகிறது.

அதிரடி வீரர்களான குமார் சங்கக்காரா மற்றும் மஹேல ஜெயவர்த்தனே ஓய்விற்கு பிறகு இலங்கை அணி தடுமாறி வருகிறது என்றே சொல்ல வேண்டும்.

இந்நிலையில் இதுகுறித்து துடுப்பாட்ட வீரரான ஜெகன் முபாரக் கூறுகையில், இலங்கை மிகச் சிறிய நாடு, சங்கக்காரா மற்றும் ஜெயவர்த்தனேவின் ஓய்வுக்கு பிறகு அவர்களுக்கு பதிலீடாக வீரர்களை களமிறக்குவது என்பது சவாலான விடயம் தான்.

திறமையான வீரர்களை கண்டுபிடிப்பதற்கு குறைந்தபட்சம் ஒரு வருடமாவது தேவைப்படும்.

அதுமட்டுமின்றி அனுபவ வீரர்களின் காயம் காரணமாகவும் அணியின் செயல்பாட்டில் தடுமாற்றம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

மேலும் இந்தியாவை பொறுத்தவரையில் திறமையான வீரர்கள் அதிகம் உள்ளனர் என்றும், இவர்கள் ஐபிஎல் போன்ற போட்டிகளில் பங்கேற்பதன் மூலம் மிக எளிதாக சர்வதேச கிரிக்கெட் வீரர்களின் பழக்கம் கிடைக்கிறது எனவும் தெரிவித்துள்ளார்.

இதுவே இந்தியா சர்வதேச அளவில் கிரிக்கெட்டில் சிறந்து விளங்குவதற்கு காரணமாக அமைகிறது எனவும் கருத்து தெரிவித்துள்ளார்.

## விராட் கோலிக்கு கேல் ரத்னா விருது?

இந்திய கிரிக்கெட் வீரர்களில் விராட் கோலியின் பெயரை ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருதுக்கு பரிந்துரைத்துள்ளது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பிசிசிஐ).

ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது, விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதாகும். அது இந்த முறை கோலிக்கு கிடைக்கும்பட்சத்தில் அதை வென்ற 3-ஆவது கிரிக்கெட் வீரர் என்ற பெருமையை அவர் பெறுவார். முன்னதாக சச்சின், மகேந்திர சிங் தோனி ஆகியோர் அந்த விருதைப் பெற்றுள்ளனர். 4 ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய கிரிக்கெட் வீரர் ஒருவரின் பெயர் ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

விராட் கோலி, டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் தனியாளாக இந்திய அணியை அரையிறுதி வரை அழைத்துச் சென்றார். அதில் தொடர் நாயகன் விருது வென்ற கோலி, ஐசிசி கனவு டி20 அணியின் கேப்டனாகவும் தேர்வு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது


## வெளிவந்துவிட்டது




- உலகை ஆளும் சக்திகள் யார்?
- பெற்றோலிய விலைச் சரிவும் பின்புலமும்
- குத்ஸையும் பலஸ்தீனையும் இடம் மாற்றும் சதி

விலை: 60/=

அல்குர்ஆனைக் கற்போம் கற்பிப்போம்

அல்குர்ஆன் விளக்கவுரை

**சூரா முஜாதலா**

அஷ்ஷெய்க் முஹம்மத் பகீஹுத்தீன் (நளீமி)

பணிப்பாளர் – மர்கஸுஸ் ஸலாமா




e MEDIA

வெளிவந்துவிட்டது...




ஏறாவூர் அஷ்பால் அல்குர்ஆன் அகடமியில் மூன்று வருட கற்கை நெறியைப் பூர்த்தி செய்து வெளியேறிய 119 மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் தன்னாமுனை மியானி நகர் கேட்போர் கூடத்தில் கடந்த 17.01.2015 (சனிக்கிழமை) அஷ்ஷெய்க் அல்-ஹாபிழ் எம்.எல்.எம்.இர்ஷாத் (யமனி) தலைமையில் நடைபெற்றது. பிரதம அதிதியாக அஷ்ஷெய்க் எம்.ஐ.அமீர் (நளீமி) பிரத்தியேக மாவட்ட அரசாங்க அதிபர் கலந்து கொண்டார்.

Published by Focus Media (Pvt) Ltd. 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org